Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36
கதிர் : 327 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி 7 ஆம் நாள் 24 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# சிங்கள மயமாகின்றது பனை அபிவிருத்திச் சபை

## வர்த்தமானிக்கு முரணாக தலைமை அலுவலகம் யாழிலிருந்து கொழும்புக்கு இரகசியமாக நகர்த்தல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 24

பனை அபிவிருத்திச் சபையில் இதுவரை காலமும் பெரும்பான்மையாக தமிழர்களே பணிபுரிந்து வந்த நிலையில் அதனை மாற்றியமைத்து சிங்களவர்கள் உள்ளீர்க்கப்படுகின்றனர். அத்துடன் வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைவாக பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் செயற்பட வேண்டிய நிலையில் அதனை இரகசியமாக கொழும்புக்கு மாற்றும் திட்டம் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 15

## வெலிக்கடைச் சிறைச்சாலை அமைதியின்மை கட்டுக்குள்

கொழும்பு, ஒக். 24

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் அமைதியின்மையை ஏற் 15

## இ.போ.ச.வின் நெடுந்தூர சேவைகள் இன்று ஆரம்பம்


யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு உள்ளிட்ட பிற மாகாணங்களுக்கான நெடுந்தூர சேவைகள் 15

## அவசரமாக இன்று கூடுகிறது ஆளும் கட்சி

கொழும்பு, ஒக். 24

ஆளுங்கட்சியின் விசேட நாடாளுமன்றக்குழுக் கூட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த 15



முச்சந்தி முரளி

"விலையப் பாக்கிறதுக்காக தான் ஜனாதிபதி ஆகேலையெண்டுறவர் பதவிக்கு வந்தவுடன கடையளில குந்தியிருந்து படம் போட்டது ஏனாமுங்கோ?"

## இனப்பரம்பலை மாற்றும் செயற்பாட்டை நிறுத்துக

***வவு. வடக்குடன் சிங்களக் கிராமங்களை இணைக்கும் மாவட்டச் செயலரின் பரிந்துரைக்கு எதிர்ப்பு***

யாழ்ப்பாணம், ஒக். 24

மாகாணம் தாண்டிய எல்லை நிர்ணயம் மூலம் வடக்கின் இனப் பரம்பலை மாற்றி 15

## இந்தியாவின் கோரிக்கைக்கு செயலுருக் கொடுக்கத் துடிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள்

*நவ. 2 இல் யாழில் கலந்துரையாடல்*

யாழ்ப்பாணம், ஒக். 24

13ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் தீர்வின் முன்னோடியாக ஏற்றுக் கொண்டு அதனை முழுமையாக - அது உருவாக்கப்படும்போது இருந்த வடிவத்தில் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை மற்றும் இந்திய அரசுகளைக் கோருவதற்காக தமிழ்த் தேசியப் பரப்பில் செயலாற்றும் அரசி 15



## நான் ஜனாதிபதியாக பதவியேற்றது விலைகளைக் கண்காணிக்க அல்ல!

***ஜனாதிபதி கோத்தாபய இப்படித் தெரிவிப்பு***

கொழும்பு, ஒக். 24

நாட்டு மக்கள் என்னை ஜனாதிபதியாக நியமித்தது பருப்பு மற்றும் அரிசியின் விலைகளை பார்த்துக் கொள்வதற்கு என்றால் அதற்கு 15

## பாடசாலைகளில் இருந்து இடைவிலகியோருக்கும் இலவசமாகவே 'பைசர்'!

பணம் கோரினால் முறையிடுமாறு கோருகிறார் கேதீஸ்வரன் 14

## சேதனப் பசளை விவகாரம் சீனாவுடன் முறுகல் உச்சம்

*கொடுப்பனவுக்கு இடைக்காலத் தடை கப்பல் பிரவேசிக்கவும் அனுமதி மறுப்பு*

கொழும்பு, ஒக். 24

சீனாவிலிருந்து இலங்கைக்கு வரும் கப்பலில் தீங்கு ஏற்படுத்தக் கூடிய சேதனப் பசளை உரம் உள்ளடக்கப்பட் 16

## எந்தப் பொருளுக்கு எப்போது தட்டுப்பாடு வரும் எனக் கூறமுடியாது

*எச்சரிக்கிறார் வர்த்தகத்துறை அமைச்சர்*

கொழும்பு, ஒக். 24

பூகோள சூழ்நிலைக்கு அமைய தற்போதைய நிலையில் எந்தெந்தப் பொருள்களுக்கு இனிவரும் காலங்களில் தட்டுப்பாடு ஏற்படும் என் 15



## 5 இழுவைப் படகுகளுடன் மன்னார் மீனவர்கள் கைது

மன்னார், ஒக். 24

இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மன்னார் மீனவர்களை கடற்றொழில் நீரியல்வளத் 13

## பருத்தித்துறை மீனவர்கள் புழல் சிறையில் அடைப்பு

*தமிழக மீனவர் உடல் அடக்கம்*

யாழ்ப்பாணம், ஒக். 24

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக குற்றஞ் சுமத்தப்பட்டு இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்ட வல்வெட்டித் 16

## திரவப் பசளை கொடுக்கல் - வாங்கல் குற்றச்சாட்டை நிராகரித்தார் ஜயசுந்தர

*ஊடக நிறுவனம் விசாரணைக்குள்*

கொழும்பு, ஒக். 24

இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பசளைக்கான கொடுப்பனவான 29 கோடி ரூபா பணத்தை தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு பரிமாற்றுவதற்கு அழுத்தம் விடுத்ததாக வார இறுதிப் பத்திரிகையொன்றில் வெளியான செய்தி 16

## இளைஞர்களை தாக்கிய பொலிஸ் அதிகாரி பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 24

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் இரு இளைஞர்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவத்து 14

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சி கிளைகளில்

Direct/Online (Zoom) ஊடாக IELTS கற்பதுடன்
எங்களது கல்லூரியிலே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

**IELTS** Academic / General Training

மாணவர்கள் 6.5 band score பெறுவதற்கு 100% உத்தரவாதம்

திருமணம் முடித்து UK செல்லவுள்ளவர்களுக்கு..

**IELTS Life Skills A1**

மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம் வழங்கப்படும்

English, பிரான்ஸ், ஜேர்மன், நெதர்லாந்து மொழி வகுப்புக்களும்
Zoom மூலமாகவும், நேரடியாகவும் ஆரம்பமாகின்றன.

BRITISH COLLEGE Of Education
More information 0777-695605


23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024 - 4930041
A9, Road, Kilinochchi Tel.: 021- 4927114

IDP IELTS Exam Centre Colombo, Kandy, Vavuniya & Kilinochchi

## வேலையாள்கள் தேவை

A-9 வீதி, முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வருவோர் வேலைக்கு தேவை. முகாமையாளர், சிட்டை எழுதுனர், காசாளர், உணவு உற்பத்தியாளர், உணவு பரிமாறுவோர், உணவு பொதி செய்வோர், சுத்தி கரிப்பாளர், ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். **தொ.இல.: 076 9354 332**

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் திரு. சிவசாமி**
**தர்மகுலசிங்கம் [பவா]**

[ஓய்வுபெற்ற பரிசோதக உத்தியோகத்தர்–
வடமாகாண கடற் தொழிலாளர்கள் கூ. சங்கம்]

திதி: ஆவணி பூர்வபக்க ஷஷ்டி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
எமக்கு அன்பைச் சொரிந்து
அறிவூட்டி வழிகாட்டி
எங்கள் உயிர் வாழ்வின் பெரு விருட்சமாக
நம்மைக் காத்து நின்று
வானுறையும் தெய்வத்துள்
ஒருவராக ஆகிவிட்ட
எமது குடும்பத் தலைவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில்: 20.03.1947
விண்ணில்: 12.09.2021

கடந்த 12.09.2021 அன்று இறைபதமெய்திய அமரர் திரு சிவசாமி தர்மகுலசிங்கம் (பவா) அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

077 9785 796, 077 4940 592

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 22 . 08 . 1931



விண்ணில் 23 . 10 . 2021

**அமரர் சதாசிவம் ஜெகநாதன்**

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - மலேசியா)**

சித்திரமேழி இளவாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் சதாசிவம் ஜெகநாதன் அவர்கள் நேற்று (23.10.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன், ஜெகதீஸ்வரி, ஜெகதீசன் (ஜேர்மனி), ஜெகநேசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீலலோஜினி, துரைராஜா (ஓய்வுபெற்ற பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம்), எவலின் (ஜேர்மனி), சுஜாமாலினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், பவித்திரா, தயானந்தி, காங்கேயன், கார்த்திகேயன், ஜெனின், ஆதிரியன், சைலா ஆகியோரின் பேரன்புமிக்க பேரனும், ஆரியன், அக்சயன், மதுரந்தி, ஜதிகா, அர்சிகன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சேந்தாங்குளம் பாதர்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொ.பே.இல: 021 225 1700**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பாறுபதிப்பிள்ளை



வரணி இடைக்குறிச்சியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாறுபதிப்பிள்ளை நேற்று (23.10.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், அமரர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், அமரர்களான சிதம்பரநாதன், சித்தர், வீரகத்தி ஆகியோரின் சகோதரியும், மீனாட்சிப்பிள்ளை, சிதம்பரநாதன், கந்தசாமி, இராமநாதன், பரமேஸ்வரி, சிவயோகேஸ்வரி (ஆசிரியர், யா/கரணவாய் பொன்னம்பல ம.வி, கரணவாய் ம.வி) ஆகியோரின் அன்பு தாயாரும், கதிர்காம சேகரப்பிள்ளை, பரமேஸ்வரி சந்திரவதனா, சிவமங்கை (தவிசாளர், நகர சபை, சாவகச்சேரி), யோகராசா (அமரர்) பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, இராசேஸ்வரி, குகமூர்த்தி, குனேஸ்வரி, நிர்மலா, நிமலன், நிரஞ்சன், நிரஞ்சினி, நிராகரன், நிராகினி (அமரர்), உமாங்கதன், கீர்த்தனன், லக்ஷனா, பிரசாந், ஜனார்த்தனன், தர்சனன், யசிந்தினி, அநிந்திதை, தாட்சாஜினி, இன்பரூபன், நிலவன், குகேந்தினி, மதுசன், தமிழ் அன்பன், தமிழ் முகிலன், இசைநிலா, லக்ஷா, அரவிந்தன், கோகிலப் பிரியன், அக்ஷயன், கபிலன், ஆரதி, பிரசன்னா, துசாந், சரணியா, ஆரணி, ஆருசன், கிதுஷன், அபிநயா, அபிசா, தனுஷ்கா, தர்வின், தர்மிளா, கனிசா, காவியா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் கொடிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பிறப்பு: 05.04.1926** **இறப்பு: 23.10.2021**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
%
உங்கள்
நிலையான
வைப்புகளுக்கு
அதிக வட்டி
06 மாதங்களுக்கு 4.25% (AER - 4.30%)
12 மாதங்களுக்கு 5.25% (AER - 5.25%)
24 மாதங்களுக்கு 6.00% (AER - 5.83%)
36 மாதங்களுக்கு 6.25% (AER - 5.90%)
48 மாதங்களுக்கு 6.50% (AER - 5.95%)
60 மாதங்களுக்கு 6.75% (AER - 5.99%)
0112 30 30 50
www.sampath.lk
Sampath Bank Fitch Ratings AA- (lka)


Dabur
Amla
Hair Oil
ஆரோக்கியமான அடர்த்தியான
கருமையான கூந்தலுக்கு...
தலைமுடி அடர்த்தியாக வளர்வதற்கு உதவும்.
தலைமுடி உதிர்தல் மற்றும் உடைவதிலிருந்து பாதுகாத்து மிக உறுதியான கூந்தலை தரும்.
தலைமுடி நீளமாக வளர்வதற்கு உதவும்.
Dabur அம்லா ஹெயார் ஒயில்
இப்பொழுது மீண்டும் சந்தைகளில்
ONLINE SHOPPING
https://www.daraz.lk/shop/harcourts-cosmetics/
இறக்குமதி மற்றும் விநியோகித்தல்:
Harcourts Cosmetics (Pvt) Ltd.
தொலைபேசி: 0117 150 333 / 0705 480 804 / 0705 480 806
ORIGINAL
45ml
இயற்கையான நெல்லிச்சாறு

# மரண அறிவித்தல்



## திருமதி மேரிநாயகி மரியதாஸ்

**(ஓய்வுபெற்ற அதிபர், நவாலியூர் நாயகி)**

அன்னார் கடந்த (22.10.2021) வெள்ளிக்கிழமை நவாலியூரில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், அந்தோனிப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் திரு.அ. மரியதாஸ் (வைத்தியர்) அவர்களின் அன்புப் பாரியாரும், காலஞ்சென்றவர்களான திரு.மரியாம்பிள்ளை, திரு.தொம்மைக்குட்டி, திரு.செபநாயகம், திரு.பேரின்பநாதன், திரு.செபமணி ஆகியோரின் அன்புத் தங்கையும், திருமதி கிரேஸ் இராஜரட்ணம், திருமதி றெஜினா இருதயநாதன் ஆகியோரின் மூத்த சகோதரியும், திரு.அ.சா.ஆனந்த ராஜா (பொறியியலாளர், சுவிற்சர்லாந்து), திரு.ரவீந்திரராஜா (ஆசிரியர், சென். பீற்றேஸ் கல்லூரி-கொழும்பு), திரு.மோகனதாஸ் (மாவட்ட விளையாட்டு அதிகாரி- கிளிநொச்சி), திரு.ஜோய் ஜேசுதாஸ் (MBBS அவுஸ்திரேலியா), திரு.றோய் மேவின் (ஆசிரியர், சென் பீற்றேஸ் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிஷா, தர்சினி, செல்வமகள், சுகிர்தா, கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், றூபி, ஜெசிமிலான், வோகன், ஹம்லின், ஜெய்டன், கெவின் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதி திருப்பலி நாளை (25.10.2021) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து ஆரம்பமாகி பி.ப 3.30 மணிக்கு திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

**திரு.மோகனதாஸ் (மகன்)**

# ஓராண்டு நினைவஞ்சலி



## சின்னத்துரை பத்மநாதன்

**திதி : 24.10.2021 சங்கடஹர சதுர்த்தி**

மண்ணகம் விட்டேகி வானகம் சென்றாலும்
மாண்டவர் மீண்டும் வருவதில்லை என்றாலும்
விண்ணக தெய்வமாய் வாழ்ந்து நீர் வந்தாலும்
அண்ணா உன்னில் பாசம் மாறாது மாறாது
ஆண்டொன்றின் மேலாக அழுது களைத்தாலும்
என்மனம் என்றுமே ஆறாது ஆறாது.

அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டி குல தெய்வம் குஞ்சுப்பரந்தன், பொறிக்கடவை அம்மன் கோவிலில் விசேட பூஜை நடைபெறும்.

**அன்புத் தங்கை**

**சி.றாஜினி**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 03 . 10 . 1940



**மறைவு** 23 . 10 . 2021

## வேலுப்பிள்ளை இராசதுரை

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் லேன் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசதுரை அவர்கள் நேற்று (23.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து ஆகியோரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், சத்தியதேவியின் அன்புக் கணவரும், அமரர்களான இராசையா, செல்லத்துரை, சின்னத்தம்பி, இரத்தினம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரரும், பார்த்தீபன் (கனடா), நிதீபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலி மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்), பிருந்தினி (இங்கிலாந்து), குணதீபன் (அமரர்), நளாயினி (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஸ்ன மகா வித்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜி (கனடா), சாந்திமதி (ஆசிரியர், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி), சிவதாசன் (லண்டன்), நதிவதனி (கனடா), முரளீதரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு) ஆகியோரின் மாமனாரும், அஸ்வினி, ஆதுளன், தமிழினி, சரண்யா, வித்யா, ஆதுசன், ஆர்த்திகா, தாயகி, குணசீலன், சாத்வீகன், தீபிகன், ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தொடர்புகளுக்கு:** **077 502 3499, 077 590 8171**

**தகவல்:** **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 01 . 01 . 1947



**இறப்பு** 22 . 10 . 2021

## திரு.நாகரட்ணம் அருட்சோதி

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதியை (கோணாந்தோட்டம்) வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நாக ரட்ணம் அருட்சோதி அவர்க்ள கடந்த (22.10.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சோதிமலர், சகுந்தலா தேவி, சாந்தாதேவி ஆகியோரின் சகோதரரும், சுபோதினி (சக்தி), அருள்வாணி (சுகந்தி), சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரகுணதாசன், ராகவன், கீதா ஆகியோரின் மாமனாரும், சுலக்ஷன், சுஜீவன், அபிஷாலினி, ஆகாஷ், அபிஷா, ராகவி, ரிஷிகேஷ், கோபிசா, சயிதன், லக்ஷ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (22.10.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மாலை 3 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 6566 374**


Visit : www.abansgroup.com
Abans
SUPER TWENTY 20 HITS
இலவச TV
FREE HIT சலுகைகள்
இலவச 20 மாத உத்தரவாதம்
48 மாதங்கள் வரை வட்டியற்ற தவணைகள்
நம்பமுடியாத விலைக்கழிவுகள்
சுப்பர் பிக் ஸ்கிறீன் ஹிட் சலுகை
சுப்பர் பவுண்டரி சலுகை
சுப்பர் மொபைல் ஹிட் சலுகை
சுப்பர் சவுண்ட் ஹிட் சலுகை
சுப்பர் 20-20 டிஸ்கவுண்ட் சலுகை
மாஸ்டர் பிளாஸ்டர் சலுகை
ஹாட்ரீக் சலுகை
சுப்பர் 4 சலுகை
சுப்பர் ப்ரீ ஹிட் சலுகை
சுப்பர் வொரன்டி சலுகை
இந்த கிரிக்கெட் பருவத்தில் நம்பமுடியாத சலுகைகளை தரும் அபான்ஸ் Super Deal உடன் இணைந்திடுங்கள்.
ஒவ்வொரு போட்டியினதும் இரண்டாவது இன்னிங்ஸின் 15ஆவது ஓவருக்கு முன்னர் வெற்றிபெறும் அணியை கணித்து 43" Full HD LED தொலைக்காட்சியை வெல்லுங்கள்.
TTW <SPACE> வெற்றிபெறும் அணியின் பெயரை குறிப்பிட்டு 77100 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள். போட்டியின் சிறந்த ஆட்டக்காரரை தெரிவுசெய்து ஸ்மார்ட் ஃபோனை வெல்லுங்கள். TTW <SPACE> போட்டியின் சிறந்த ஆட்டக்காரரை குறிப்பிட்டு 77100 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.
iPhone 12
64GB, 128GB, 256GB
சாதாரண விலை ரூ. 239,999
T20 விலை ரூ. 199,999
258L
LG குளிர்சாதனப்பெட்டி
GL-K272SLBB
சாதாரண விலை ரூ. 106,990
T20 விலை ரூ. 89,990
308L
LG குளிர்சாதனப்பெட்டி
GL-M332RPZI
சாதாரண விலை ரூ. 154,990
T20 விலை ரூ. 139,990
Abans சலவை இயந்திரம்
AWM-75FA
7.5KG
சாதாரண விலை ரூ. 59,990
T20 விலை ரூ. 49,990
JBL
சாதாரண விலை ரூ. 69,999
T20 விலை ரூ. 59,999
Abans
TV Audio
43"
T20 விலை ரூ. 99,999
Haier
BD-719H
710L
சாதாரண விலை ரூ. 174,990
T20 விலை ரூ. 154,990
Abans
CLASSICO-60IX + BEF-LM + KA009
சாதாரண விலை ரூ. 154,990
T20 விலை ரூ. 114,990
Abans
F5S40G2-WE
சாதாரண விலை ரூ. 76,990
T20 விலை ரூ. 61,590
Abans
F6S40E3-SSE
சாதாரண விலை ரூ. 86,990
T20 விலை ரூ. 69,590
ELBA
ES60-401BKE + ECH-620 BK
சாதாரண விலை ரூ. 62,980
T20 விலை ரூ. 52,980
ELBA
ES60-401XE + ECH-620 SS
சாதாரண விலை ரூ. 66,980
T20 விலை ரூ. 56,980
Abans
AB-28TRS + GH-8612
சாதாரண விலை ரூ. 16,680
T20 விலை ரூ. 13,290
Abans
AMS-25LCON
சாதாரண விலை ரூ. 35,990
T20 விலை ரூ. 28,790
ASEL
AF50-23
சாதாரண விலை ரூ. 32,990
T20 விலை ரூ. 26,390
LG
20 மாத உத்தரவாதம்
சாதாரண விலை ரூ. 164,990
T20 விலை ரூ. 149,990
Abans
20 மாத உத்தரவாதம்
சாதாரண விலை ரூ. 112,990
T20 விலை ரூ. 99,990
BUY ONLINE
Abans.com
0115 999 000
HNB
Sampath
HSBC
SEYLAN
Abans

## புலிக் கூச்சல்

இலங்கையில் உள்நாட்டுப் போரின் தொடக்கத்துக்கும் அது இன்னமும் இனப்பிரச்சினையாக எரிந்து கொண்டிருப்பதற்கும் பிரதான காரணம் சிங்கள – பௌத்த பேரினவாதச் சிந்தனையே. சிறுபான்மை மக்களின் குரலை நசுக்கி, அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற பேரினவாத – அடக்கு முறைச் சிந்தனை நாட்டைப் பேரழிவுக்குள் தள்ளியது. பேரினவாதிகள் சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளைச் செவிமடுக்க மறுத்து, உரிமைகளைத் தர மறுத்ததால் சிங்கப்பூராக மாறியிருக்க வேண்டிய இலங்கை சிதிலமானது.

இந்த சிங்கள – பௌத்த பேரினவாதச் சிந்தனையால் நாடு மூன்று தசாப்தங்களுக்கு மேலான போரை எதிர்கொண்டது. இந்தப் போரால் முழுநாடும் எதிர்கொண்ட அவலங்கள் ஏராளம். இழப்புக்கள் எண்ணிலடங்காதவை. ஆனால் அந்த அனுபவங்களின் பின்னரும், பெரும்பான்மையினத் தலைவர்களின் மனவோட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இவை அனைத்துக்கும் காரணமான சிங்கள – பௌத்த பேரினவாதம் இப்போதும் பல்லிளித்துக் கொண்டே இருக்கின்றது.


நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் மக்களின் கல்வி, நிலம், பூர்வீகத் தாயகம் என்பன திட்டமிட்டு பெரும்பான்மையினரால் பறிக்கப்பட்டபோது – அதற்கெதிராக தமிழ் மக்கள் எழுப்பிய குரல்கள் மிக மோசமாக நசுக்கப்பட்டபோது ஆயுதப் போராட்டத்துக்கான கட்டாயம் எழுந்தது. தமிழ் மக்கள் நடத்திய உரிமைப் போராட்டத்தை சிங்கள – பௌத்த பேரினவாதம் பயங்கரவாதம் என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தி, வல்லரசுகளின் பக்கபலத்துடன் ஒடுக்கியது.

பல தசாப்த காலப் போர் முடிவுக்கு வந்து பத்தாண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் பெரும்பான்மையின தலைவர்களின் போக்கில் எந்த மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. சிறுபான்மையின மக்களுக்கு எதிரான பேரினவாத அடக்குமுறைச் சிந்தனையிலேயே இப்போதும் அவர்கள் ஊறியிருக்கின்றனர். அவர்களின் இந்த கீழ்த்தரமான சிந்தனைப் போக்கின் ஒரு வெளிப்பாடே நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடந்த சம்பவம்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடந்த வனவளத் திணைக்கள ஆலோசனைக் கூட்டத்தில் மக்களின் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை, ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் “புலி” என்று கூக்குரலிட்டு இடையூறு செய்திருக்கிறார். ஏனைய ஆளும்கட்சி உறுப்பினர்கள் அதைக் கண்டிக்காது வரவேற்று வேடிக்கை பார்த்திருக்கின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர்களின் நியாயங்களைச் செவியில் எடுக்கக்கூட மாட்டோம் என்ற பேரினவாதச் சிந்தனையின் வெளிபாடு இது. இந்தப் பேரினவாதப் போக்கே நாட்டைப் படுகுழியில் தள்ளியது.

சிமெந்துக் கட்டடங்களாலும், தார் வீதிகளாலும் நாட்டில் ஒருபோதும் நல்லிணக்கம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. தமிழ் மக்களின் நியாயபூர்மான கோரிக்கைகள் ஏற்கப்பட்டு – தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும் தருணத்தில் இருந்து இந்த நாடு முன்னேற்றப் பாதையில் காலடி வைக்கும். தமிழ் மக்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தைத் தாங்காது “புலி” என்று கூச்சலிட்டு பேசவிடாது தடுப்பதாலோ, தமிழ் மக்களை அச்சுறுத்தி அடக்குவதாலோ எதுவும் நீர்த்துப் போய்விடப் போவதில்லை. மாறாக அவை நாட்டுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை பெரும்பான்மையின மக்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

சிங்கள – பௌத்த பேரினவாதிகள் இந்தக் கீழ் மட்ட அரசியல் தந்திரத்தைக் கைவிட்டு, நாகரிக மனிதர்களாக இனியாவது மாற வேண்டும். பேரினவாதச் சிந்தனையுடன் – எப்போதும் சிறுபான்மையின மக்களை அடக்கி ஒடுக்கி – அவர்களைப் புறக்கணித்து நாள்களைக் கடத்திவிடலாம் என்று எண்ணினால், அவர்கள் அடிக்கடி கூறும் “புலி” உண்மையிலேயே ஒருநாள் வந்துவிடவும் கூடும்.



# பொறுப்பற்ற செயற்பாடுகளால் வடக்கின் கல்விநிலை பாதிப்பு!

## இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.24**

**வடக்கு மாகாணத்தின் கல்விநிலை பின்னோக்கி நகர்வதற்குக் காரணம் பொறுப்பில் இருப்பவர்கள், பொறுப்பற்றுச் செயற்படுவதே என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் ஆசிரியர்கள் தமது நியாயமான கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். போராட்டத்தை நசுக்குவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும் ஆசிரியர்கள் ஒற்றுமையுடன் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். கல்வித்துறை உயர் அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்குக் கட்டுப்பட்டு ஆசிரியர்களின் போராட்டத்தை குழப்பும்விதமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமை யாவரும் அறிந்ததே. கடந்த 21 மற்றும் 22ஆம் திகதிகளில் பாடசாலைகள் திறக்கப்பட்டமை தொடர்பில் பொய்யான தகவல்களை மாகாணங்கள் ஊடாகப்பெற்று வெளிப்படுத்தியுள்ளனர். பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஆசிரியர்கள் அதிபர்கள் தமது போராட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தினர்.

வடக்கு மாகாணம் கல்வியில் பின்னோக்கிச் செல்கிறது. அதற்கு உயர் அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடும் அவர்களுக்கு ஊதுகுழலாக இருக்கின்ற தொழிற்சங்கங்களுமே காரணம். ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டு எமது போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்வோம் - என்றார். (எ-20)

# கறுப்புப் பூஞ்சைத் தொற்றால் இலங்கையில் முதல் மரணம்

கொழும்பு, ஒக். 24

இலங்கையில் கறுப்புப் பூஞ்சைத் தொற்றால் முதலாவது உயிரிழப்பு பதிவாகியுள்ளது. காலி - கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த, எல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 56 வயதான ஒருவரே கறுப்புப் பூஞ்சைத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என்று கராப்பிட்டிய மருத்துவமனையின் சட்ட மருத்துவ விசேட நிபுணர் ரொஹான் பீ.ருவான்புர தெரிவித்துள்ளார். குறித்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர், கடந்த செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்ட உதவி சட்ட மருத்துவ அதிகாரி, மேலதிக பரிசோதனைக்காக உடற்பாகங்களை அரச மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதற்கமைய, நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட மேலதிக பரிசோதனை அறிக்கைக்கு அமைவாக, உயிரிழந்த நபரின் சுவாசப்பையை அண்மித்த பகுதியில் கறுப்புப் பூஞ்சை தொற்றியிருந்தமையை, அரச மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூஞ்சை நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் பிரிமாலி ஜயசேகர உறுதிப்படுத்தியுள்ளார்.

நிமோனியாவுடன் தொடர்புடைய கறுப்புப் பூஞ்சை தொற்றுக்குள்ளானவர்கள் இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட போதிலும் இலங்கையில் தற்போதே முதலாவது உயிரிழப்பு பதிவாகியுள்ளது என்று மருத்துவ நிபுணர் ரோஹான் பீ.ருவான்புர தெரிவித்துள்ளார். (ம-4)

# மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்ற பெற்றோரின் அனுமதி கட்டாயம்




கொழும்பு, ஒக். 24
16 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்ட, மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் போது, பெற்றோரின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைவாக பெற்றோரின் அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான மேலதிக செயலாளர் எல்.எம்.பி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்கள் தொடர்பான தகவல்களை, சுகாதார மருத்துவ அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் ஆகியோரிடம் பெற்றோர் பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி ஏற்றச் செல்பவர்களுக்கு சீருடை அத்தியாவசியமாக்கப்படவில்லை என்பதுடன், சீருடை உள்ளவர்கள் அதனை அணிந்துசெல்ல முடியும். அடையாள அட்டை உள்ள மாணவர்கள் அதனைக் கொண்டு செல்ல வேண்டும். தங்களது மாணவர்கள் தொடர்பான விவரங்களை அதிபர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# சிறுவர்களுக்காக புதிய தரவுத்தளம்

கொழும்பு, ஒக். 24
இலங்கையில் முதற்றடவையாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளான மற்றும் பாதுகாப்பற்ற அனைத்துச் சிறுவர்களின் தரவுகளையும் உள்ளடக்கிய, தேசிய தரவுத்தளம் நிறுவப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமையில் இந்த தரவுத்தளம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பொலிஸ், கிராம அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் நேரடியாக இந்த தரவுத்தளத்தில் தகவல்களைப் பதிவேற்றம் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# இருவரை வழிமறித்து பொலிஸார் தாக்குதல்

## வைரலாகிறது காணொலி

மட்டக்களப்பு, ஒக். 24
ஏறாவூர், வாவிக்கரை வீதிப் பகுதியில் போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பொதுமக்கள் இருவரை வழிமறித்து காலாலும், கையாலும் தாக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. போக்குவரத்து விதிகளை மீறிய குற்றத்துக்காக, அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (கு-இ)







# மேட்டுநிலப் பயிர்ச் செய்கை நிலங்களையும் விட்டுவைக்காத வனவளத் திணைக்களம்

## திக்குவில் கிராம மக்கள் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, ஒக்.24**

**கிளிநொச்சி, பூநகரி திக்குவில் கிராமத்தில் பொதுமக்களின் மேட்டுநிலப் பயிர்ச் செய்கை நிலங்களை அடாத்தாக துப்புரவு செய்த வனவளத் திணைக்களம் மர நடுகைக்கு தயாராகி வருகின்றது.**

இவ்வாறு அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

திக்குவில் கிராமத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக மேட்டுநிலப் பயிர்ச் செய்கை இடம்பெற்று வருகிறது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட நிலங்களைத் துப்புரவு செய்த வனவளத் திணைக்களம் தற்போது அந் நிலங்களில் மரக்கன்றுகளை நடுவதற்காக தயாராகி வருகிறது. திக்குவில்குளம் கமநல சேவை நிலையத்தின் 'சியாப்' திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படவுள்ளது.

இந்தக் குளத்தில் இருந்து மேட்டுநிலப் பயிர்ச் செய்கையை கூடுதலாக மேற்கொள்வதே கமநல சேவை நிலையத்தின் இலக்காக உள்ளபோதும் வனவளத் திணைக்களம் மேட்டுநிலப் பயிர்ச் செய்கை நிலங்களை அடாத்தாகப் பிடித்துள்ளது.

இதனால் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையை வாழ்வாதாரமாகக் கொண்ட பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வனவளத் திணைக்களத்தின் இந்த அடாத்தான செயற்பாடு தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு, மாவட்டச் செயலர் மற்றும் பூநகரி பிரதேச செயலர் ஆகியோர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் -என்றனர். (ஐ-13)



# நவீன மயமாகும் பளை நகரச் சந்தை

கிளிநொச்சி,ஒக்.24

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளியின் பளை நகரச் சந்தை நவீன மயமாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் நடைபெற்றது. சந்தையை நவீனமயப்படுத்துவது தொடர்பாக தவிசாளரால் வர்த்தகர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.கஜன், உறுப்பினர் எஸ்.ரமேஸ், சபைச் செயலர் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரமாக விளங்கும் பளை நகரத்தில் சந்தை நவீன மயமாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வலுப்பெற்று வருகின்றது. பளைநகரம் போர் அழிவுகளில் இருந்து மீண்டுவரும் நிலையில் பளைச்சந்தையை நவீன மயப்படுத்துவதன் மூலம் பச்சிலைப்பள்ளி மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-13)

# முழுநேர கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்படிப்பு பீடத்தால் சுகாதார முகாமைத்துவ முதுவிஞ்ஞானமாணி ஆங்கில மொழி மூலமான இரண்டு வருட முழுநேர கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி நவம்பர் மாதம் 8 ஆம் திகதியாகும்.

பட்டதாரிகள் சுகவளம், மருத்துவ நலன், சமூகநலன், சிறுவர் நலன் தொடர்பான துறைகளில் குறைந்தது ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

துறை தொடர்பான தொழிற்றகைமை உடையோரும் சுகாதார முகாமைத்துவ இளமாணி பட்டத்தில் 30 திறமை நிலைகள் பெற்றோரும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஐந்து வருட அனுபவமுடைய அத்துறை சார் தொழிற்றகைமைப் பட்டயம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். (ஐ)

# வவுனியாவில் பைஸர் தடுப்பூசி



வவுனியாவில் பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், வவுனியா மாவட்டத்தில் முதல் கட்டமாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 18, 19 வயது மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-18)

# பொன்னாலையில் மரநடுகை நிகழ்வு



'வெண்கரம் பசுமைக்கல்வி' திட்டத்தின் கீழ் பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் மர நடுகை இடம்பெற்றது.

வெண்கரம் செயற்பாட்டாளர்கள் மற்றும் மாணவர்களின் ஏற்பாட்டில் இந்த மரநடுகை நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பொன்னாலையைச் சேர்ந்த, ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சகலகலாவல்லி சந்திரராசா வெண்கரம் படிப்பகத்தில் கொன்றை மரக்கன்று ஒன்றை நட்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ச)

# கசிப்பு விற்ற குற்றச்சாட்டில் பெண் கைது

யாழ்ப்பாணம், ஒக்.24

கசிப்பு விற்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரும், பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் என்று தெரிவித்து அயல் வீட்டினர் மீது தாக்குதல் நடத்திய அவரது மகளும் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி, துன்னாலையில் உள்ள குடவத்தையைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்ய முயன்றபோது, அவர் வாகனத்தில் ஏற மறுத்ததாலும், உறவினர்கள் சூழ்ந்து பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாலும் இழுபறி நிலைமை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் கைது செய்யப்பட்ட பின்னர், அவரது 25 வயதான மகள் அருகில் உள்ள வீடொன்றுக்குச் சென்று அவர்களே பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர் என்று தெரிவித்து முரண்பட்டுள்ளார். அந்த வீட்டில் இருந்த பெண்ணின் மீது தாக்குதல் நடத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அந்த வீட்டில் இருந்த பெண் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதையடுத்து சந்தேகநபரின் மகளும் கைது செய்யப்பட்டுள்ளார்- என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



# வீடு கையளிப்பு

கிளிநொச்சி, ஒக்.24

கிளிநொச்சியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மருதநகர் கிராமத்தில் குறித்த இரண்டு வீடுகளும் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் டெனிஸ் சாய்பி கலந்துகொண்டு இந்த வீடுகளைக் கையளித்திருந்தார். (சு-113)

# சாராயப் போத்தல்களுடன் கீரிமலையில் இருவர் கைது

கீரிமலை, ஒக்.24



அளவுக்கு அதிகமான சாராயப் போத்தல்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கீரிமலைப் பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை இரவு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைப் பொலிஸார் குறித்த பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டவேளை சந்தேகத்துக்கிடமாக பயணித்த முச்சக்கர வண்டியைச் சோதனைக்கு உட்படுத்தினர். இதன்போது சுமார் 50 கால் போத்தல்கள் சாரயத்தைக் கைப்பற்றினர்.

சந்தேகத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ-125)




# பூட்டை உடைத்து பாடசாலை திறப்பு

*அதிபர் பொலிஸில் முறைப்பாடு*

கொழும்பு, ஒக். 24

பாடசாலையின் பிரதான வாயிலில் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்து உள்நுழைந்த ஆசிரியர், பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்.

கொரோனாத் தொற்றின் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளில், 200 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகள் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டன.

இந்த நிலையில், வெலிமடை ரத்கரவிட்ட மாளிகாதென்ன ஆரம்பப் பாடசாலையின் அதிபர் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. இதனையடுத்து ஆசிரியர் ஒருவர் பாடசாலையின் பிரதான வாயிலில் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்துக் கொண்டு உள்நுழைந்தார். மாணவர்களும் பாடசாலைக்கு வந்தனர். தொடர்ந்தும் இரண்டு ஆசிரியைகளும், ஆசிரியர்கள் இருவரும் வருகை தந்தனர்.

மதவழிபாடுகளின் பின்னர் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

வெலிமடை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தொலைபேசியின் ஊடாக அறியத்தந்தன் பின்னர், அந்த ஆசிரியர், பூட்டை உடைத்துள்ளார். எனினும், பூட்டு பலவந்தமாக உடைக்கப்பட்டமைக்கு எதிராக பாடசாலையின் அதிபர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-4)




## விண்ணக வாழ்வின் 45ஆம் நாள் நினைவு

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்"



மண்ணில் 14.08.1940 — விண்ணில் 09.09.2021

அமரர்

**ஜோசப் தேவராசா**

விண்ணக வாழ்வில் மகிழ்ந்திருக்கும்

**ஜோசப் தேவராசா**

அவர்களின்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை
இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை
ந.ப. 12.00 மணியளவில்
எமது இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு தங்களை அன்போடு
அழைக்கின்றோம்.

154, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

நன்றியுடன்,
பிள்ளைகள்
0765509888

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 25 . 09 . 1932



இறப்பு 10 . 09 . 2021

## திருமதி சின்னம்மா பரராஜசிங்கம்

நயினாதீவு. பருத்தித்துறை அல்வாய் வடக்கு. (Swiss) ஐ வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி சின்னம்மா பரராஜசிங்கம் அவர்கள் கடந்த 10.09.2021 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் வல்வெட்டித்துறையை சேர்ந்த காலஞ் சென்றவர்களான குழந்தைவேல் - ராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சபாபதிப்பிள்ளை (திருகோணமலை). காலஞ்சென்றவர்களான வேலாயுதம். குமரையா. பொன்னம்மா. பராசக்தி. விசாலாட்சி. பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஈஸ்வரமூர்த்தி. சிறிபக்தலிங்கம். சிறிராம். சிவசிறி Winterthur சிவா அல்லது சிறி. அல்வாய் வடக்கு நண்பர்களுக்கு (பிள்ளையார்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சுரேந்தினி. காந்திமலர். ஜெயானந்த தேவி. யூலியானா. காலஞ்சென்ற திசைவீரசிங்கம் ( புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் - (வீரமலை), மணோன்மணி (சுவிஸ் பேர்ன்). சிவம் (சுவிஸ் ஒல்டண்). நாகேஸ்வரி (திருநெல்வேலி), காலஞ்சென்ற மங்களகௌரி (திருநெல்வேலி), ரவீந்திரன் (நயினாதீவு). உதயமலர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும். சீதாசரஸ்வதி (கொழும்பு). இளங்கோவன் (சுவிஸ் பேர்ன்). சிற்றம்பலம் (அச்சுவேலி). விவேகானந்தன் (யாழ்ப்பாணம்). காசிநாதன் மணிவண்ணன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சின்னம்மாவும். காலஞ்சென்ற கருணாநிதி. கந்தவேல் (நல்லூர்). ஈஸ்வரன் (கனடா). திருமகள் (கனடா). ராஜலஷ்மி (மணி - கனடா) ஆகியோரின் பாசமிகு குஞ்சியாத்தாவும். சுஹானா. சனோர். சிகானியா. சிசாயினி. ராகவி. ரவீனா. ரதீஸ். ஸ்கார்லெட் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை Quartier Verein Gutschick-Mattenbach, Scheidegg Str.19, 8400 Winterthur என்ற இடத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரது துயரச் செய்தி அறிந்து தொலைபேசி மூலமும் நேரிலும். ஆறுதல் கூறியவர்கள். கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்கள். இரங்கல் உரை நிகழ்த்தியவர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்காள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
சிறி : 0041789554724, ராம் 0041764031971,
சிவசிறி 0041762135336

தகவல்
குடும்பத்தினர்


# கூட்டமைப்பினர் பழிவாங்குகின்றனர்

## பிள்ளையான் ஆதங்கம்



கொழும்பு, ஒக். 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னைப் பழிவாங்கவும், அரசியலில் இருந்து வெளியேற்றவும் நல்லாட்சி அரசில் சிறையில் அடைத்தனர். ஆனால், இவர்களின் சதித்திட்டத்தில் இருந்து மீண்டு மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று அதிகூடிய வாக்குகளைப் பெற்றேன். இதனைச் சகித்துக்கொள்ளமுடியாது மீண்டும் என்னை ஒரு கொள்ளைக்காரன், மண்கொள்ளைக் கும்பல் தலைவன் போன்று காட்ட முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அரசபொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) அறிக்கைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னைப் போன்றவர்களை அரசியலில் இருந்து அகற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொய்ப் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். சாணக்கியன் நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் என்னைப்பற்றிக் கூறியுள்ளார். என்னிடம் மண் அகழ்வுப் பத்திரம் இருப்பதாகப் பொய் கூறியுள்ளார். அதற்கான ஆதாரமாக சில விடயங்களை முன்வைத்துள்ளார். ஆனால், அது வேறு ஒரு நபர். அவர் நான்தான் என்று என்னைக் குற்றவாளியாக்க முயற்சிக்கிறார். சாணக்கியனும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மண் வியாபாரத்தில் ஈடுபட்டார் என்பதை மறந்துவிட்டார். மழைக்கு முன்னர் புற்றீசல்கள் கிளம்பி வரும். அதேபோன்று மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ச கூறியவுடன் அதில் போட்டியிடத் தயாராகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் இன்று முன்வந்து போராடுகின்றனர். மாகாணசபைத் தேர்தல் இல்லாமற் போகவும் அவர்களே காரணம் - என்றார். (ம-4-22)

# வெள்ளைப்பூண்டு மோசடி வர்த்தகரின் மகன் கைது



கொழும்பு, ஒக். 24

சதொசவில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில், பம்பலப்பிட்டியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் மகன் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

54 ஆயிரம் கிலோகிராம் வெள்ளைப்பூண்டு கொள்கலன் இரண்டை மோசடியான முறையில் கொள்வனவு செய்தார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள பம்பலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகரின் மகன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மோசடிக்குத் தேவையான போலியான ஆவணங்களைத் தயாரித்து உதவினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அதேவேளை, பம்பலப்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த [illegible] னாய் [illegible] பட் [illegible]

# வீட்டுச் சுவர் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.24

வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பல்லம, கட்டுபொலப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

சுவரில் சிக்குண்டு படுகாயமடைந்த 12 வயதுடைய சிறுவன், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர். சடலம் சிலாபம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-[illegible])



# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22.07.1956

உதிர்வு 24.10.2019

## அமரர் செபமாலை பிரான்சிஸ் (எஸ்.இன்பம்)


அந்திய கால சேவை உரிமையாளர்

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது ஐயாவே
இன்றுடன் ஈராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு மறையாது ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

600/04,
மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்

குடும்பத்தினர்.
077 711 1474

# மரண அறிவித்தல்



மலர்வு 23 . 01 . 1965

உதிர்வு 21 . 10 . 2021

## செல்வரெத்தினம் செல்வகுமார்

யாழ். புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்கள் கடந்த (21.10.2021) வியாழக்கிழமை இலங்கையில் காலமானார்.

அன்னார் செல்வரெத்தினம் காலஞ்சென்ற தவமணி தம்பதிகளின் ஏக புத்திரரும் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி, சாரதாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், திலகராணி அவர்களின் அன்புக் கணவரும், சபரி கிரிஷன், சதுசியா, தசானா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், செல்வவதி, செல்வநீலா, செல்வசோதி, செல்வவிஜி, செல்வமீனா, செல்வரஜனி, ஆகியோரின், அன்புச் சகோதரரும், புண்ணியமூர்த்தி, காலஞ்சென்ற காஞ்சனாதேவி மற்றும், கருணைநாதன், மகேந்திரன், பிரபாகரன், அசோக்குமார், சத்தியநாராயணன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமுதினி அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2021) திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் 70/3 திருவையாறு எனும் முகவரியில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் 11.00 மணியளவில் புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் வீராமலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 844 4877,
076 284 6902

தகவல்:
குடும்பத்தினர்

# 83 வீதமானோருக்கு மன்னாரில் தடுப்பூசி



மன்னார்,ஒக்.24

மன்னார் மாவட்டத்தில் 83 வீதமானவர்கள் கொரோனாத் தடுப்பூசிகளின் இரண்டு டோஸ்களையும், 68 வீதமானவர்கள் முதல் டோஸையும் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டத்தில் இதுவரை கொரோ னாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மற்றும் கடந்த மாதம் முதல் டோஸைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாம் டோஸ் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, மன்னார் பிரதேச செயலகத்துடன் இணைந்து தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் மன்னார் நகர்ப் பகுதியில் இதுவரை எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு, சினோபார்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டு வருகின்றது.

(ஒ-4-56)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 13.07.1935

மறைவு 24.09.2021

அமரர் சிவத்திரு.

## ஆறுமுகம் சிவசம்பு பழனிவேல் (A.S.P)

பிரபல வர்த்தகர் – யாழ்ப்பாணம்,

தலைவர், நயினாதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலயம்

பிடாரி அம்பாளின் பாதார விந்தங்களை அடைந்த எங்கள் அன்புத் தந்தையின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று முன்தினம் (22.10.2021) வெள்ளிக்கிழமை நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றதுடன், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும்.

துக்கத்தில் பங்கெடுத்து தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் துயர் பகிர்ந்தும் பதாகைகள், பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலமும் இறுதி அக்கினி சங்கம நிகழ்வில் நேரில் பங்கெடுத்தும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தோரிற்கும் அப்பா நோயுற்ற இறுதி நேரத்தில் உதவிய வைத்தியர்கள், உத்தியோகத்தர்களிற்கும் அன்றிலிருந்து இன்று வரை பல வழிகளிலும் பேருதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் சிரந்தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

105, காரைநகர் வீதி,
வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
021 222 5766

## ஊடகவியலாளருக்கு ரி.ஐ.டி. அழைப்பு

வவுனியா, ஒக். 24
வவுனியாவை சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் (ரி.ஐ.டி.) விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை விசாரணைப் பிரிவின் வவுனியா அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (ஒ.110)


## பகிரங்க ஏலவிற்பனை

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

எம்மால் 24.08.2021 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்ட ஏலவிற்பனை நிகழ்வு 02.11.2021 ஆம் திகதி நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர்**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**யாழ்ப்பாணம்.**

## வேலையாள்கள் தேவை

No.226, Main Street , Jaffna எனும் இடத்தில் இயங்கிவருகின்ற VV Mart & Construction க்கு உடனடியாக பணியாள்கள் தேவை.

கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலையாள்கள் தேவை.

01. Draughtsman 02. Cashier

Note:- ஆண், பெண் இருபாலாரும்
வயதெல்லை :- 20- 30
கட்டாயமாக சுயவிபரக் கோவையுடன் வருகை தரவும்.

**No.226, Main Street, Jaffna.**
**T.P : 074 016 5425, 076 119 7016**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கிக் கொண்டிருக்கும் சிறு பிள்ளைகளுக்கான புடைவை மற்றும் விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

**வேலை நேரம் முற்பகல் 11.00 தொடக்கம் இரவு 9.00 மணி வரை**

**021 221 3323, 076 264 8766**

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள Everpure Hi - Tec (PVT) Ltd நிறுவனத்திற்கு தொழில் நுட்ப உதவியாளர்கள் தேவை.

Plumbing & Electrical வேலைகளில் குறைந்தது 2 வருட முன் அனுபவம் அவசியம்.

விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் கீழே காணப்படும் Whats app இலக்கத்திற்கு அல்லது கீழ் காணப்படும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் உங்களின் சுயவிபரக் கோவையினை 30.10.2021 க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

**தொடர்புகளிற்கு**
**Everpure Hi - Tec (PVT) Ltd.**
**581, K.K.S Road, Jaffna.**
**077 362 6230, 075 331 3310**

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

அங்கர் பாதுகாப்பு சேவையின் ஊடாக பருத்திதுறை பகுதியில் அரச வைத்தியசாலைகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமை புரிய விரும்புபவர்கள் பின்வரும் நாட்களில் நேர்முக தேர்விலே கலந்து கொண்டு வேலையினை பெற்று கொள்ள முடியும். வயது எல்லை 20-60.

**சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள்**
- ❖ தேசிய அடையாள அட்டை பிரதி
- ❖ பிறப்பு சான்றிதழ் பிரதி
- ❖ கிராம சேவகரின் வதிவிட சான்றிதழ்
- ❖ கல்வி தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
- ❖ பாடசாலை விடுகைப் பத்திரம்

**தகைமைகள்**
- ❖ உயரம் :- 5.4 inch
- ❖ மார்பு சுற்றளவு :- 32 inch

**நேர்முக தேர்வு இடம் பெறும் இடம்**
இடம் : இல.114, செம்மணி நல்லூர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
காலம் : 25 / 26 / 27 ஐப்பசி மாதம் 2021
நேரம் : காலை 8.30 – மாலை 4.30 மணி வரை

**தொடர்புகளுக்கு**
**0769194423, 077-5396350 / 077-2392850**
**அங்கர் பாதுகாப்பு சேவை, யாழ்ப்பாணம்.**


## மனைவியைக் கடத்தியதாக கணவன் பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஒக். 23
வானில் வந்த நபர்கள் வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு தனது மனைவியைக் கடத்திச் சென்றதாக கணவன் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாவியைச் சேர்ந்த 18 வயதான பெண்ணைக் காதலித்து கடந்த ஜூலை மாதம் வவுனியா தேக்கவத்தையைச் சேர்ந்த 19 வயதான நபர் பதிவுத் திருமணம் செய்திருந்தார். இந்த நிலையிலேயே அவர் பொலிஸில் நேற்று இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். (ஒ.18)

## இடியன் துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது

முல்லைத்தீவு, ஒக். 24
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுப்புக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக நாட்டுத்துப்பாக்கியை விவசாயக் காணிக்குக் கொண்டு சென்ற சந்தேகநபரை முல்லைத்தீவு பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். புதுக்குடியிருப்பு றெட்பானா பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.19)

## கொடிகாமத்தில் வாள்கள் மீட்பு

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் கிழக்கில் நேற்றுமுன்தினம் வாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரி வித்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள குளம் ஒன்றின் அருகே உள்ள பற்றைகளுக்குள் வாள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு மூன்று வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)





edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

சர்வதேச ரீதியான வேலைவாய்ப்புக்கான உங்கள் நுழைவாயில்


**Australia**
- 2022 ல் உங்கள் கல்விப்பயணத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பம்
- 29 பல்கலைக்கழகங்களுடனான நேரடி பிரதிநிதித்துவம்
- 2022 ம் கல்வியாண்டிற்குரிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள

**Canada**
- 50ற்கும் மேற்பட்ட கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்
- May/Sep 2022 ற்குரிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்

**Malaysia**
- மலேசியாவில் கல்வியை ஆரம்பித்து UK, Australia, Canada பல்கலைக்கழகங்களில் தொடரும் வாய்ப்பு
- SLMC இனால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்துறைப்பட்டப் படிப்புகள்
- 2022 ம் கல்வியாண்டிற்குரிய அனைத்து உள்வாங்கல்களுக்குமான அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்

* T&C APPLY

Post study work rights leading to possible PR opportunities*




Follow Us On

**Hotline: 0772223178 | E-mail: jaffna1@edlocate.lk**

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் செல்லத்துரை சுப்பிரமணியம் (JP)

(ஓய்வுநிலை நில அளவை அத்தியட்சகர்)

தோற்றம் 07 . 10 . 1937

மறைவு 10 . 09 . 2021

எமது குடும்பத்தலைவர் செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியினை அறிந்து இக்கட்டான சூழ்நிலையிலும் நேரில் வந்து அஞ்சலி தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள். நண்பர்கள், அயலவர்களுக்கும், தொலைபேசி, சமூகவலைத்தளங்கள் ஊடாக அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரம், பதாகைகள், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையங்கள் சார்த்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

424 / 1 / 1 கில்னர் ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழப்பாணம்.

குடும்பத்தினர்.

021 222 2470 / 077 921 3869



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13.05.1947

மறைவு 24.09.2021

## அமரர் கருணராஜா தவமணி

கடந்த 24.09.2021 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் கருணராஜா தவமணி அவர்களின் 31ஆம் நினைவு நாளான இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்.
20, நக்கா றோட், யாழ்ப்பாணம்.


## ஞாயிறுகளிலும் கடைகள் திறக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.24

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந்த மாதத்துக்குரிய இறுதி இரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக இன்று ஞாயிற்றுக்கிழமையும், எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் நகரில் உள்ள வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

(ஒ-4)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 13 . 02 . 1930

விண்ணில் 24 . 09 . 2021



## அமரர் பேரம்பலம் கனகாம்பிகை

உன் உடல் மூலம் என் உடல் தந்த அன்னையே!
உன் உதிரத்தை உணவாக தந்து
உயிருக்கு உணர்வு அளித்த அன்னையே!
நாள்கள் முப்பத்தொன்று ஆனாலும்
எம்மை விட்டு என்றும் அகலாது உம் நினைவுகள்
பிறப்போடு இறப்பு இணைந்ததெனினும்
இழப்பினை நெஞ்சம் ஏற்பதில்லை அம்மா
என்றும் உங்கள் நினைவோடு.

கடந்த 24.09.2021 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த அமரர் பேரம்பலம் கனகாம்பிகை அவர்களின் அந்தியேட்டிக்கிரியை நேற்றுமுன்தினம் (22.10.2021) வெள்ளிக்கிழமை காரைநகர் ஆலங்கன்று வைரவர் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்றதுடன், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காரைநகர் ஈழத்து சிதம்பரரேஸ்வர பெருமானை வேண்டுகிறோம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும், துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

137/8, கந்தசாமிகோயில் வீதி,
சூசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.
077 979 4986


குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1944

மறைவு 17 . 10 . 2021



## யோசேப் அந்தோணிப்பிள்ளை

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பெரியமாவடி, கச்சாய் றோட், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் அந்தோணிப்பிள்ளை அவர்கள் கடந்த (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகனும், கபிரியேல்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரி மெற்றலின் அவர்களின் அன்புக் கணவரும், யோன் கொலின் (அதிபர் - யா/ மண்டைதீவு றோ.க.த.க. வித்தியாலயம்) யோன் றொபின் (கனடா). யோன் றோகன் (UK), மேரி டயானா (UK), மேரி றொபினா (பிரான்ஸ்), மேரி ஜெறோனா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஷெறின் (ஆசிரியர் - யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), லைற்றா (கனடா), றோகினி (UK), யூஜின் (UK), அனுராஜ் (பிரான்ஸ்), கலை (UK), ஆகியோரின் அன்பு மாமனும், பிரான்சிஸ், கீர்தபொன்கலன், அல்பிரன்ஸ் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவம், பேபி (இந்தியா) சறோசா, யேசுராசா, றதி (நோர்வே), துரை (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வின்ஸ்ரன், லெனிற்றா, ஜெனிங்ஸ்ரன், றெபேக்கா, றொனால்டோ, றொட்வின், புகழ்மதி, புகழனா, கரன்ஸா, நிவைன், அஸ்லீனா, அஸ்னெற், அத்றிஸ், லபிலன், ரியாறா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.10.2021) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன் பின்னர் புனித லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

077 104 3577

## A/L இணைந்த கணிதம்

2021, 2022 2023 மாணவர்களுக்கு வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**074 111 0790**

## தோட்டம் விற்பனைக்கு

நவற்கிரி புத்தூர் வீதியில் நவற்கிரியில் 46 பரப்பு தோட்டம் விற்பனைக்குண்டு.

**077 706 6487** யாழ்ப்பாணம்.

## தேவை

நிரந்தர வீட்டு வேலைக்கு கொழும்பு, யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து ஆட்கள் தேவை. முதியோர் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை.

அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**021 4399 277, 074 055 5922**

## மேசன் பாஸ்மார்கள் வேலைக்கு தேவை

கொழும்பில் பெரிய அளவு வீடு கட்டும் நிறுவனத்திற்கு மேசன்பாஸ்மார்கள் தேவை. 3வருடம், 4 வருடம் அனுபவம் கண்டிப்பாக தேவை. தங்கும் வசதி, உணவு இலவசமாக தரப்படும். வேலைக்கு தகுந்த நிறைவான சம்பளம் தரப்படும்.

**076 767 7320 / 077 772 2164**

## மணமகள் தேவை

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தற் சமயம் லண்டனில் வசிக்கும் பிரஜா உரிமை கொண்ட கிறிஸ்தவம் வயது: 36 பெற்றோர் தங்கள் மகனுக்கு நற்குணங்களுடைய மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகளின் புகைப்படம் தொலைபேசி இலக்கத்துடன் கீழ் காணும் மெயில் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும்.

**aaronbenjamin8894@yahoo.com**

## வேலையாட்கள் தேவை

அசைவ, சைவ உணவக கடை ஒன்றிற்கு ரைஸ் மேக்கர், பில்மேக்கர், சப்பிளோயர், வடை போடுபவர், ரொட்டி மேக்கர் வெயிற்றர் அனுபவமுள்ள மேற்பார்வையாளர் ஆகியோர் தேவை. (ஆண் / பெண்)

**தொடர்பு : 077 055 6949**

## பெண் வேலையாள்கள் தேவை

**Phoenix Book Shop** இற்கு வேலையாள்கள் தேவை

- Cashier or Manager
- Sales girl (வெளிவேலை இல்லை)

Note:
- Biodata with IC கட்டாயமாக கொண்டு வரவும்
- முன் அனுபவம் தேவையில்லை
- **O/L or A/L** படித்தவர் விரும்பத்தக்கது

**Salary - 20000/= to 25000 /=**
(பேசி தீர்மானிக்கப்படும்)

**386, Clock tower Road. Jaffna.**
தொடர்பு: **077 063 3116**

## உடனடி வேலைவாய்ப்பு

### ஆப்பரேட்டர்

**முல்லைத்தீவில் அமைந்துள்ள முன்னணி பாற்பொருள் உற்பத்தி தொழிற்சாலையில் ஆப்பரேட்டர் பணிக்கு கீழ்க்குறிப்பட்டுள்ள தகமைகளுள்ள பணியாளர் தேவை.**

**தகமைகள்**

- உணவு மற்றும் போசாக்கு சம்பந்தமான பட்டப்படிப்பு / டிப்ளோமா.
- குறைந்தபட்சம் பாற்பொருள் உற்பத்தித்துறையில் மூன்று வருட முன்னனுபவம்.
- பாற்பொருள் உற்பத்தி செய்முறை மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பூரண அறிவு.
- பாற்பொருள் தயாரிப்புக்கள் தொடர்பான அரச தரநிர்ணய கட்டுப்பாடுகள் சம்பந்தமான பூரண அறிவு.
- நுண்ணுயிரியல் தொடர்பான அறிவு.
- உற்பத்தி இயந்திரங்களை சுயமாக பராமரிக்கும் திறன்.
- தொழிற்சாலை சார்ந்த நுண்ணுயிர் கிருமி நீக்கம் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ அறிவு.
- பாற்பொருள் உற்பத்திகளுக்கு உபயோகிக்கப்படும் உள்ளீடுகள் தொடர்பான மிகையான அறிவு.
- குறைந்த மேற்பார்வையில் பணிபுரியக்கூடிய ஆற்றல்.
- குழுவாக செயற்படும் ஆற்றல்.

மேற்படி தகமை உள்ளோர் உங்கள் விண்ணப்பங்களை info.careerspaths@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு 14 நாட்களிற்குள் அனுப்பவும்
தொலைபேசி: 0716193546 (நேரம் 09:30am – 4:30pm)

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

## வீடு வாடகைக்கு

சிவகுருநாதர் லேன் (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்தின் பின்புறம்) எல்லா வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புக்கு: **077 982 6997**

## வாடகைக்கு

நாச்சிமார் கோவிலடி, வண்ணார் பண்ணை, கே.கே.எஸ் வீதிக்கு மிக அருகாமையில் வீட்டுடன் கடை அல்லது வீடு வேறு, கடை வேறாகவும் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 077 536 1370**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1982 ரேவதி நட்சத்திரம் அரச தொழில் புரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

**077 545 2892**

## கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையில் உள்ள ALTO - 2015, Manual, Power Steering, Power, Sttutters 33800km ஓடியது. கார் மற்றும் NISSAN BLUE BIRD SYLPHY G11 (Auto Gear) 2011 மொடல் கார் விற்பனைக்கு உண்டு.

**071 444 4204**

## வீடு வாடகைக்கு

நல்லூர் மருதடி வீதியிலுள்ள 3 பெரிய அறைகளுள்ள வீடு வாகனத் தரிப்பிடத் துடன் 17000 /= இற்கு வாடகைக்குண்டு. முற்பணம் 350 000/= அரசாங்க, வங்கி உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**071 244 6926, 076 258 7073**

## தேங்காய் தேவை

கம்பஹா மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலையொன்றிற்கு உரித்த தேங்காய் தேவைப்படுகின்றது. நாளொன்றிற்கு 2 லட்சம் தேங்காய் தேவை.

**தொடர்பு : 071 477 8399**

## வாகனம் விற்பனைக்கு

Toyota Hiace Super GL -LH - 172 Dolphin Van
விற்பனைக்குண்டு.
**கொழும்பு - 12 இல்**
YOM - 2001
PB- 4 XXX

**077 741 7525**

## தனிஅறை வாடகைக்குத் தேவை

யாழ். பல்கலைக்கழத்தில் படிக்கும் மருத்துவபீட மாணவனுக்கு யாழ்ப்பாண பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து 01 கிலோமீற்றர் தூர சுற்றுவட்டாரத்தில் இணைந்தகுளியல் அறையுடன் கூடிய ஒரு அறை வாடகைக்கு தேவைப்படுகின்றது. இந்த வசதி இருப்பின் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**077 765 0666**

## காணி விற்பனைக்கு

- வீமன் காமம், தெல்லிப்பளையில் பரப்பு 12 1/2.
  விலை 650,000 /- பரப்பு
  தொடர்புக்கு : 077 423 5458
- நல்லூர் கோவில் வீதியில் பரப்பு 2 குழி 12.8
  மொத்த விலை 27, 500, 000 /-
  தொடர்புக்கு : 077 739 3690

## தேவை

யாழ். நகரில் இயங்கும் காட்வெயர்க்கு

- **பில் கிளாக்,**
- **விற்பனையாளர்கள்,**
- **கடை கணக்கு எழுதுனர்,**
- **வழவாகனம் செலுத்துபவர்கள்,**
- **பொருட்கள் ஏற்றி இறக்குனர்கள்**

தேவை

**தொடர்பு : 0094 750 766 979**

5 இழுவைப்படகுகளுடன்....

திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடற்படையினர் இணைந்து கைது செய்துள்ளனர். இந்திய மீனவர்களின் அத்துமீறல் விவகாரமும், இழுவைமடி மீன்பிடிமுறைமை தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அதிரடியாக மன்னாரில் மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இழுவைமடிப் படகைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் தாம் பாதிப்புக்குள்ளாவதாக சிறு மீன்பிடியாளர்கள் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தனர். இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை இரவு கடற்படையினருடன் இணைந்து கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் சோதனை நடத்தினர். பள்ளிமுனை, உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 5 இழுவைப் படகுகளுடன் 15 மீனவர்கள் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஓ-60)

## தேவை

A/L தகைமை உடைய விற்பனை பிரதிநிதிகள் தேவை.

தொடர்புக்கு: **077 7722 215**

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப் பெண் ஒருவர் தேவை. **076 751 8138**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் CCTV பொருத்துவதில் அனுபவமுள்ளவர்களும், பயிலுநர்களும் FancyShop இலத்திரனியல் கடை ஆகியவற்றிகு ஆண் / பெண் வேலையாட்கள் தேவை.

**077 228 8246, 071 156 2009**

## வீடு விற்பனைக்கு

இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் வீடு மற்றும் காணி விற்பனைக்குண்டு.

**077 613 9522**

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை குருநாதர் வீதியில் றோட்டிலிருந்து 3 ஆவது காணி (2 ½பரப்பும் ஒரு குழியும்) விற்பனைக்குண்டு.

**076 726 8490**

## Accounting Service & Business Consulting

உங்களது அனைத்து வித வியாபார மேம்படுத்தலுக்கும் Accounting and Income tax உள்ளிட்ட அனைத்து வித Tax தீர்வுகளுக்கும் நாம் உதவி செய்வோம். தொடர்புகளுக்கு:

**0754 105230, 0710 729870**
**E-mail:bmcsram@gmail.com**

## சமையல் / பராமரிப்பு

முதியோர் பராமரிப்பு, வீட்டு வேலைகள், சுத்திகரிப்பு வேலைகள் போன்றவற்றுக்கு எம்மிடம் திறமையானவர்கள் உள்ளனர்.
அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**021 4399 277,**
**Hotline:074 055 5922**

## வாடகைக்கு

யாழ். நகர் அருகாமையில் அறை (றூம்) வாடகைக்கு உண்டு.. சகல வசதிகளுடன். **தொடர்புகளுக்கு:**

**077 0713 048, 0777 283 811**

## வீடு வாடகைக்கு

யாழ். பிறவுண் வீதியில் சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட வீட்டின் மேற்பகுதி வாடகைக்கு விடப்படும். வாடகை 30,000/= முற்பணம் 300,000/= Science World அருகில். தொடர்பு:

**077 214 0220, 077 990 6867**

## கட்டடம், நிலம் வாடகைக்கு உண்டு

- ஆஸ்பத்திரி வீதியில்
- 3 கடைகள்
- 4 பரப்புக் காணி
- சுப்பர் மார்கட் / களஞ்சியசாலை உகந்தது.

**076 3136 818**
**Landlord Property Management**

# சேவை நலன் பாராட்டு



Best Wishes

ஆசிரியை திருமதி **வசந்தா சத்தியபாலன்** SLTS -I
கலைப்பட்டதாரி, கல்விமாணி (யாழ். பல்கலைக்கழகம்)
ஆசிரியப் பயிற்சி - இந்து சமயம்.
(முன்னாள் உபஅதிபர்)
**யா/செங்குந்த இந்துக்கல்லூரி**

**சேவைக்காலம்**

- இர/ பரி. யோவான் தமிழ் மகா வித்தியாலயம் - 06.08.1985 - 08.02.1988
- யா/ கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - 09.02.1988 - 31.12.1989
- கி/ பரந்தன் இந்து தமிழ் மகா வித்தியாலயம் - 01.01.1990 - 31.01.1991
- கி/ வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை - 01.02.1991 - 26.01.1993
- யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை - 27.01.1993 - 09.09.2001
- யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் - 10.09.2001 - 19.01.2003
- யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை - 20.01.2003 - 16.05.2006
- யா/ கோண்டாவில் இராமகிருஷ்ணா - மகாவித்தியாலயம் - 17.05.2006 - 14.01.2010
- யா/ செங்குந்த இந்துக்கல்லூரி - 15.02.2010 - 24.10.2021

**சேவைநலன் பாராட்டு**

வசந்தமே வடிவதாய் கொண்ட தொரு எழில்
வாஞ்சையுடன் தமிழ் உச்சரிக்கும் பாங்கு
அசந்தே நாம் ஆராதிக்கும் அன்பும் இன்சொல்லும்
வசந்தா சத்தியபாலனுக்கே உரித்தாம்
நல்லறிவை ஊட்டி விடும் நமதன்னை வாழி !
நற்தாயே நலமாகி நல்வாழ்வு வாழ்க !

Congratulations

*வாழ்த்துவோர்:* **ஆசிரியர் நலன்புரி சங்கம்**
**யா/ செங்குந்த இந்துக் கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10 . 10 . 1984


மறைவு 21 . 10 . 2021

### தர்ஸன் ஆர்த்திகா

எமது தோழியின் மறைவால் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தோழிகள்**
**2003ஆம் ஆண்டு உயர்தரப்பிரிவு**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 11 . 07 . 1944

இறைவன் பாதத்தில் 04 . 11 . 2020

### அமரர் கணபதிப்பிள்ளை சேதுலிங்கம்

திதி: தேய்பிறை சதுர்த்தி

அப்பா நீங்கள் இறைவன் பாதத்தில் சேர்ந்து
ஓராண்டு காலமாகி விட்டதப்பா
உங்களை பிரிந்து வாடுகின்றோம் நாம்
மீண்டும் வருவாரோ இப்பூவுலகில்
எம் குடும்ப விளக்காக
ஆண்டு ஒன்று சென்றாலும் நீங்காது
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சம் வரை

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கவேல் மகேஸ்வரி

**(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்)**

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது நியூஸிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கவேல் மகேஸ்வரி அவர்கள் கடந்த (19.10.2021) அன்று நியூஸிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமார் நல்லம்மாவின் அன்பு மகளும், தங்கவேல் (நியூஸிலாந்து) அவர்களின் அன்பு மனைவியும், அனுஷா (பிரான்ஸ்) இன் அன்புத் தாயாரும், யோகானந்தன் (பிரான்ஸ்) இன் அன்பு மாமியாரும், பிரான்ஸில் வசிக்கும் அவினாஷ், ஆகாஷ், அபிலாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வடிவேல் (அமரர்), நாகராஜா (அமரர்), கமலாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகள் - அனுஷா யோகானந்தன் (பிரான்ஸ்)**
**T.P: 0033160788527**

**இடைவிலகியோருக்கும்...**

யாழ்ப்பாணம், ஒக். 24


பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் தங்களுக்குரிய தடுப்பூசிகளை சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கு எந்தப் பணமும் செலுத்தத்தேவையில்லை. அவ்வாறு யாராவது பணம் கோரினால் முறைப்பாடு செய்யுங்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. வடக்கில் சில இடங்களில் பாடசாலை இடைவிலகிய மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு பணம் கோரிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(ஒ.5)

## மரண அறிவித்தல்

### திரு.முத்துக்குமாரு தேவகுமாரன்



பிறப்பு 21.04.1939

இறப்பு 19.10.2021

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.முத்துக்குமாரு தேவகுமாரன் (முன்னாள் Raux Brother's, Dehiwala உத்தியோகஸ்தர்) அவர்கள் 19.10.2021 செவ்வாய்க்கிழமையன்று கொழும்பில் தனது 82ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, சிவபாக்கியம் தம்பதியினரின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கனகாம்பிகை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற தேவமனோகரியின் அன்புக் கணவரும் சிவகுமாரன், அமரர் திருக்குமாரன், திருமகள் ஆகியோரின் அன்புச்சகோதரரும் சீதாதேவி, அமரர் பூமணி, அமரர் திருநடராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி சடங்கு 20.10.2021 புதன்கிழமை வத்தளையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**மு.சிவகுமாரன் (சகோதரர்) வத்தளை**
**0094779501120**

**இளைஞர்களை...**

டன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரி உடனடியாகப் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இது குறித்த மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் சில தரப்பினர் இந்தச்சம்பவத்தை இனவாத அடிப்படையிலான கோணத்தில் அணுகி, சர்ச்சைகளைத் தோற்றுவிக்க முயல்வதைதவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

(ஒ-இ)

(தொடர்புடைய செய்தி 7ஆம் பக்கம்)

## தேர்தல் ஆணைக்குழு

வாக்காளர்களே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றனர்"
வாக்களிப்பதற்காக தேருநர் (வாக்காளர்) இடாப்பில் பதிவு செய்துகொள்ளல் கட்டாயத்தேவைப்பாடொன்றாகும்.

### நீங்கள் அறிவீர்களா?

- நிலவும் Covid - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக 2021 ஆம் ஆண்டில் வாக்காளர்களை கணக்கெடுப்பதற்கான படிவங்கள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்படமாட்டாது.
- உங்களுடைய பெயர் 2020 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்களர்) இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப் பின் 2021 ஆம் ஆண்டிற்கும் 2020 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி யின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். அதற்காக நீங்கள் எந்த வொரு படிவத்தையும் பூரணப்படுத்த வேண்டியதில்லையென்பதனைக் கவனத்திற் கொள்ளுங்கள்.
- 2021 தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வின்போது நீக்கப்படும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள "அ" பட்டியல்கள் மற்றும் புதிதாக பெயர்கள் உட்சேர்க்கப்படும் "ஆ" பட்டியல்கள் என்பவற்றுடன் 2020 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பு 2021, ஒற்றோபர் மாதம் 21 முதல் 2021, "நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வரை அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்படும்.
- 2021 ஆம் ஆண்டிற்காக வாக்காளர் ஒருவராக உங்களுடைய பெயரை பதிவு செய்துகொள்வதற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாவென்பதனைப் பரீட்சித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு www.elections.gov.lk இணையத் தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாகவும் இந்தத் தகவல்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.
- உங்களுடைய பெயர் பரிந்துரை செய்யப்படவில்லையாயின் அது தொடர்பான உரிமைக் கோரிக்கையை 2021.11.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.
- இந்த உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான படிவங்களை கிராம அலுவலர் அலுவலகத்தில் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் எமது இணையத்தளத்தில் பிரவேசிப்பதனூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.
- அத்துடன் உங்களுக்கு இணையவழி ஊடாக பதிவு செய்துகொள்ள வேண்டுமாயின் www.elections.gov.lk இணையத் தளத்தில் பிரவேசித்து 2021.11.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோரிக்கையை சமர்ப்பிக்க முடியும்.
- 2021, யூன் மாதம் 01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள (2003, மே 31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த) நபர்களுக்கு 2021, யூன் மாதம் 01 ஆந் திகதியன்று சாதாரண வதிவிட முகவரியில் 2021 ஆம் ஆண்டிற்கான வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள முடியும்.

தொ.பே.இல. : 011- 2860031
011-2860032
011- 2860034

தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை , இராஜகிரிய.
2021.10.21

மின்னஞ்சல் : info@elections.gov.lk
இணையத்தளம் :www.elections.gov.lk

### மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்..

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு மாநகரம் | 011-2369437 | வவுனியா | 024-2222311 |
| கொழும்பு மாவட்டம் | 011-2369438 | முல்லைத்தீவு | 021-2061426 |
| கம்பஹா | 033-2222047 | மட்டக்களப்பு | 065-2224312 |
| களுத்துறை | 034-2222266 | அம்பாறை | 063-2224342 |
| கண்டி | 081-2233187 | திருகோணமலை | 026-2222304 |
| மாத்தளை | 066-2222422 | குருநாகல் | 037-2222369 |
| நுவரெலியா | 052-2222325 | புத்தளம் | 032-2265246 |
| காலி | 091-2234028 | அநுராதபுரம் | 025-2222551 |
| மாத்தறை | 041-2222305 | பொலன்னறுவை | 027-2222012 |
| அம்பாந்தோட்டை | 047-2256248 | பதுளை | 055-2222424 |
| யாழ்ப்பாணம் | 021-2222655 | மொணராகலை | 055-2276315 |
| கிளிநொச்சி | 021-2285664 | இரத்தினபுரி | 045-2222023 |
| மன்னார் | 023-2222289 | கேகாலை | 035-2222561 |

சரியான முறையில் பதிவு செய்துகொள்வதனூடாக வாக்களிக்க முடியுமென்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## சிங்கள...

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் சிறப்பாக காணப்படும் வளமான பனைக்குரிய அபிவிருத்திச் சபை மெல்ல மெல்ல சிங்களமயமாகி போவது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று பனை அபிவிருத்திச் சங்கங்கள் குற்றஞ்சுமத்துகின்றன.

பனை அபிவிருத்திச் சபை 1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் தலைவர்களாக தமிழர்களே நியமிக்கப்பட்டு வந்தனர். ராஜபக்ச ஆட்சியின் பின்னர், பனை அபிவிருத்திச் சபையின்தலைவராகமுதன்முறையாக பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்தப் பின்னணியிலேயே சபையை முழுமையாக சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்படும்போதே அதன் தலைமையகம் யாழ்ப்பாணத்திலேயே அமைய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதுவரை காலமும் யாழ்ப்பாணத்திலேயே இயங்கியது. தற்போது அதன் கணக்காய்வு பிரிவு கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகப் பிரிவையும் கொழும்புக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. முற்று முழுதாக தலைமை அலுவலகத்தை கொழும்புக்கு மாற்றும் நடவடிக்கையின் ஆரம்பமே இது என்றும் சங்கங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இதேவேளை, பனை அபிவிருத்திச் சபையில் இணைக்கப்பட்ட தற்காலிக ஊழியர்களில் தமிழர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாத அதேவேளை, சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று கடந்த முடக்க காலத்தில் நேர்முகத் தேர்வு கொழும்பில் நடத்தப்பட்டுள்ளது. அதில் வடக்கைச் சேர்ந்த ஒரு சிலருக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பதுடன் சிங்களவர்களே அதிகம் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பனை அபிவிருத்திச் சபையில் பணியாற்றி ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெற்ற காலத்திலிருந்து ஒரு மாதத்துக்குள் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும். ஆனால் கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு இன்னமும் பணிக்கொடை வழங்கப்படவில்லை.

பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கைதடியில் உள்ள கட்டடம் முன்னைய நல்லாட்சி அரசின் காலத்தில் அமைச்சராக இருந்த சுவாமிநாதனால் திறந்து வைக்கப்பட்டது. அதற்குரிய நினைவுக் கல் தற்போது பிடுங்கி அகற்றப்பட்டுள்ளது.

மேலும், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் உரிய விசாரணைகளின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களது இடத்துக்கு தற்போது பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கணக்காளர் பதவி வெற்றிடத்துக்கு இரண்டு வருடமாக சகலவித தகுதியுடனும் அனுபவத்துடனும் பதில் கடமையில் உள்ள தமிழர் நியமிக்கப்படாது அதே இடத்துக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு பனை அபிவிருத்திச் சபையை சிங்களமயமாக்கும் முயற்சி தொடர்பில் ஆளும் கட்சியின் சார்பில் வடக்கில் உள்ள அமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ எந்தவித எதிர்ப்பையும் காண்பிக்கவில்லை. (ஒ-5)

## இனப்பரம்பலை...

யமைக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து நீர்ப்பாசன அமைச்சரும் மற்றும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்சவுக்கு நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதியின் கிராமத்தினுடனான மக்கள் சந்திப்பு எனும் தொனிப்பொருளில் கடந்த ஏப்ரல் மாதம் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவின் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 'போகஸ்வெல' என தற்போது பெயர் மாற்றம் பெற்றுள்ள கொச்சியான் குளம் என்ற தமிழ் மக்களின் மரபுரிமையுடைய பூர்வீக கிராமத்தில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இதன்போது அப்போதைய வவுனியா மாவட்ட செயலர் சமன் பந்துலசேனவின் வேண்டுகோளின் பிரகாரம், வடமத்திய மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட கெப்பிட்டிகொலாவ பிரதேச செயலர் பிரிவின் கனுகாவெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 600 குடும்பங்களும், பதவியா கிராம அலுவலர் பிரிவு மற்றும் கம்பிலிவெலலெதகன்ன கிராமங்களைச் சேர்ந்த 430 குடும்பங்களும் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவின் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவுடன் இணைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அண்மையில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு வவுனியா மாவட்ட தற்போதைய மாவட்டச்செயலர் முன்னைய அரச அதிபரான சமன் பந்துலசேனவின் கோரிக்கையை முன்மொழிவாக அனுப்பியுள்ளார்.

வடக்கு வடமத்திய மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் இனப்பரம்பல் கோலத்தை மாற்றி அமைத்து அதனால் அப்பிரதேசத்தில் தமிழ் மக்களின் அரசியல் உறுதிப்பாட்டை கேள்விக்குறியாக்குகின்ற செயற்பாடாக இது திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு முரணாகவும் இன நல்லிணக்கத்தை பாதிக்கின்ற செயலாகவும் இது அமையும் என்பதால் இந்நடவடிக்கையை உடன் நிறுத்தும்படி வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அரசின் இவ்வாறான செயல்முறைகளை வன்மையாக கண்டிப்பதுடன் செயற்பாட்டை உடன் நிறுத்துமாறு தங்களை நாடி நிற்கிறோம். இவ்வாறான மறைமுக நிகழ்ச்சித் திட்டங்களூடாக முன்னெடுக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களே இந்நாட்டில் 30 வருடங்களுக்கு மேல் நடந்த போருக்கு வித்திட்டன. இன நல்லுறவை பாதிக்கும் விடயமாக இது அமைந்திருப்பதையும் நினைவுபடுத்துகிறோம்- என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-6)

## வெலிக்கடை...

படுத்தும் வகையில் செயற்பட்ட கைதிகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர், சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிறைக்கைதிகளை நசுக்கி அழுத்தத்துக்கு உள்ளாக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும், அனைத்து கைதிகளையும் வேறுபாடின்றி சரிசமமாக நடத்தும்படியும் கோரி வெலிக்கடை சிறைக்கைதிகள் சிலர் நேற்று முற்பகல் சிறைச்சாலையின் கூரையின் மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு தீர்வு கிடைக்காவிட்டால் சாகும்வரையில் உண்ணாவிரதம் போராட்டமொன்றை முன்னெடுக்க தயாராகவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் அங்கு குவிக்கப்பட்டு மதியமளவில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட 15 கைதிகள் தனியான சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ஒ-இ)

## நெடுந்தூர...

இன்று காலை முதல் ஆரம்பமாகவுள்ளன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர்களுக்கு நேற்று மாலை இது தொடர்பில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக இன்றைய தினத்திலிருந்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஒ-5)

## அவசரமாக...

ராஜபக்ச ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அரச பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உரப்பிரச்சினை, யுகதனவி மின்உற்பத்தி நிலையம், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன. (ஒ-22,44)

## செயலுரு...

யல் கட்சிகள் இடையே எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியுடன், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபெறவுள்ளன.

இணையவழியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் சார்பிலே பேராசிரியர் சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். மருத்துவ பரிசோதனையின் காரணமாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவில்லை.

இலங்கை அரசமைப்பில் உள்ள 13வது திருத்தச்சட்டத்தை முற்றுமுழுதாக, ஆரம்பக்கட்டத்தில் எப்படி இருந்ததோ அதனடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் தீர்வுக்கான முன்னோடியாக இலங்கை அரசிடமும் கோரிக்கை வைப்பதோடு, அதை இலங்கை அரசை வலியுறுத்துவதற்கான இந்திய அரசினுடைய ஆதரவையும் கோருவது என்றும் இணக்கம் காணப்பட்டது. இலங்கைக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலர், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் கோரிக்கை முன்வைக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## நான்...

நான் தேவையில்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். அதேவேளை, 30 வருட போரை நிறைவு செய்தது போல் எந்தவிதத் தடைகள் ஏற்பட்டாலும், பசுமை விவசாயத்தை வெற்றிகொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உடுபந்தாவ புன்னெஹெபொல சேதனப் பசளை தயாரிக்கும் மத்திய நிலையம் மற்றும் சேதனப்பசளை பயிர்ச்செய்கை இடங்களைப் பார்வையிடுவதற்கு ஜனாதிபதி நேற்று முற்பகல் சென்றிருந்த போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எங்களது முந்தைய அரசுகள் கூட இதைச் செய்ய முயற்சித்தன. இது கடினமானபணி. எனது முன்னோர்களுக்கு தெரியும் பாரம்பரிய பயிற்செய்கையை எப்படி செய்வது என்று. ஆனால் துரதிர்ஷ்டவசமாக எந்தத் தலைவரும் இந்த முடிவை எடுக்கவில்லை.

நான் விவசாயிகளுக்கே முன்னுரிமை வழங்கினேன். அவர்கள் என் மீது வைத்த நம்பிக்கையை மீற மாட்டேன். விவசாயிகளான நீங்களே நல்லது கெட்டதை ஆராய்ந்து தீர்மானம் எடுங்கள். மனிதர்களைத் தூண்டும் அரசியலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். எதிர்காலச் சந்ததியினருக்காக ஒன்றிணையுங்கள். அரசியல் தலைவர்கள் எடுக்காத கடினமான தீர்மானங்களை எடுப்பதற்கு நான் தயார். அன்று போரை முன்னெடுக்க வேண்டாம் என்று பலர் கேட்டுக்கொண்டனர். ஆனாலும், 30 வருட போரை நிறைவு செய்தது போல் எந்தவிதத் தடைகள் ஏற்பட்டாலும், பசுமை விவசாயத்தை வெற்றி கொள்வேன்- என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## எந்தப் பொருளுக்கு...

பதை எதிர்வுகூற முடியாது. உலக சந்தையில் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிக்கும் போது தேசிய மட்டத்தில் விலை அதிகரிக்காமல் இருப்பதற்கான முறைமையை அறிந்தவர்கள் இருப்பார்களாயின் என்னை தாராளமாக சந்திக்கலாம் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலகில் பிரதான நாடான சீனாவிலும் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. உலகச் சந்தையின் நிலைவரத்துக்கு அமைய பொருள்களின் விலை அதிகரிப்பதை தவிர வேறொரு தீர்வும் கிடையாது. அத்தியாவசிய பொருள்களின் விலையை அதிகரிக்கும் போது மக்கள் அரசுக்கு எதிராக செயற்படுவார்கள் என்பதை நன்கு அறிவோம். மக்களின் வெறுப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

அரசு விரும்பி அத்தியாவசிய பொருள்களின் விலையை அதிகரிக்கவில்லை. அதற்கான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்- என்றார். (ஒ-இ)

சேதனப்...

டுள்ளது. அக்கப்பலை கொழும்பு துறைமுகத்துக்குள் உட்பிரவேசிப்பதை தடுக்க துறைமுக சேவையாளர்களுக்கும், உரிய தரப்பினருக்கும் ஆலோசனை வழங்கப் பட்டுள்ளதாக துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதேவேளை, இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தால், குவின்டாவோ சீன நிறுவனம், அதன் உள்நாட்டு முகவர் மற்றும் மக்கள் வங்கிக்கு எதிராக, வணிக மேல் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் இடைக்காலத் தடையுத்தரவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் இரசாயன உரப்பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சேதனப் பசளை இறக்குமதிக்கு அரசு நடவடிக்கை எடுத்தது. சீனாவிலி ருந்து சேதனப்பசளை இறக்குமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், அந்த நாட்டின் சேதனைப் பசளை மாதிரியில் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் இருப்பதால் அது நிராகரிக்கப்பட்டது.

இந்த நிலையில் சீன நிறுவனம் அனுப்பிய கப்பல் 20 ஆயிரம் மெற்றிக்தொன் பசளையுடன் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதனையடுத்தே அந்தக் கப்பலை துறைமுகத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இலங்கை உரக் கூட்டுத்தாபனம், சீன நிறுவனத்துக்கு எதிராக தடை யுத்தரவைப் பெற்றுள்ளது. இந்தத் தடை உத்தரவின் மூலம், சீன நிறுவனமான குவின்டாவோ சீவின் பயோடெக் குரூப் கம்பனி என்ற நிறுவனத்துக்குத் திறக்கப்பட்ட கடன் கடிதத்தின் கீழ், மக்கள் வங்கியின் மூலம் எவ்விதக் கொடுப்பனவுகளையும் வழங்க முடியாது. இந்த நடவடிக்கை இலங்கை மற்றும் சீனா இடையிலான இரா ஜதந்திர செயற்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஒ.இ)

பருத்தித்துறை...

துறை ஆதிகோவிலடி தெருவைச் சேர்ந்த மீனவர்களான நிமலதாஸ் வீரசிங்கம், கஜிபன் தர்மராஜ் ஆகியோரை எதிர்வரும் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சென்னை எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து அவர்கள் இருவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தபோது கடற்படையினரின் படகு மோதி உயிரிழந்த தமிழக மீனவரின் சடலம், சர்வதேச கடற்பரப்பில் வைத்து நேற்று ஒப்படைக்கப்பட்டது. உடனடியாகவே அவரது சொந்த ஊரில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. (ஓ-5)

திரவ...

முற்றிலும் பொய்யானது என்று ஜனாதிபதி செயலர் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

குறித்த செய்தியை அவர் முழுமையாக நிராகரித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் அனைத்து தரப்பினரையும் அழைத்து முழுமையான விசாரணை நடத்துமாறு, பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதியின் செயலர் அறிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் செய்தியை வெளியிட்ட ஊடக நிறுவன ஆசிரியர் நேற்றைய தினம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## கட்டடம் வாடகைக்கு தேவை

வவுனியா நகர், குருமன்காடு, வைரவப் புளியங்குளம் ஆகிய பகுதிகளில் அலுவலக பாவனைக்கு கட்டடம் தேவை.

தொடர்பு 077 277 2726

## வேலையாட்கள் தேவை

பொருட்களை எடுத்து சென்று விநியோகிக்கும் வாகனத்திற்கு உதவியாளர்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் (AD Licence) தேவை.

ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி போன்ற இடங்களிலிருந்தும் மற்றும் கோண்டாவில், திருநெல்வேலி பகுதிகளிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொ.இல.: 077 0090 189

## A.M.T நிறுவனத்துக்கு கணக்காளர் தேவை

A.M.T (வவுனியா, இருபாலை, கொக்குவில்) எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கணக்காளர் தேவை (Quick Book - தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை 25 - 50) தங்குமிடம் வழங்கப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 739 1221, 077 226 7172

E-mail : newamttransport@gmail.com

## தேங்காய் உரிக்கும் இயந்திரம் விற்பனைக்கு

புத்தம் புதிய, 3 HP மோட்டர்

1 மணித்தியாலத்திற்கு 500 தேங்காய் உரிக்கக்கூடிய இயந்திரம் விற்பனைக்குண்டு

Made in India

விபரங்களுக்கு: 076 486 5639

## WANTED ACCOUNTS EXECUTIVE

For Nuffield School for the Deaf and Blind, Kaithadi
Requirements & Qualification.

1. AAT final exam or equivalent
2. Computer Knowledge - Excel, Internet, Email & Accounting Package (experience in MYOB will be consdered an advantage)
3. Fluent in written and spoken Tamil & English.
4. Work experience in related field - minimum five years
5. Valid driving license for motor cycle
6. Age less than 45 years
7. Salary negotiable.

Applications giving full details with names of two non - related referees should be emailed to nsdb1956@gmail.com and the original posted to undersigned by 8th November 2021 only selected candidates will be called for interview.

Principal
Nuffield School for the Deaf and Blind

## கடை வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் கடை வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 076 546 3553

## தேவை

அரைக்கும் ஆலை (Grinding Mill) உபகரணங்கள் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு : 077 602 5552

## Personal English Classes

தனி வகுப்புக்கள் யாழ் நகரில்
O/L, A/L, Graduates, தொழில் புரிவோர்களுக்கான Spoken English வகுப்புக்கள்

K.Ganesh (BA) 077 766 8725

## பிரத்தியேக வகுப்புக்கள்

ஆங்கிலம் தரம் 04 - 11 யாழ் நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும். Ananth (BA)

தொடர்பு : 074 190 6656

## வீட்டுப்பணிப்பெண் தேவை

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் உள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

077 283 3162, 077 433 9921

## வேலையாள் தேவை

கொழும்பில் உள்ள கோயில் ஒன்றிற்கு பல வேலைகளும் செய்யத்தக்க வேலையாள் ஒருவர் தேவை. (பூசை செய்யத்தக்கவராயின் விரும்பப்படும்) தொடர்புகளுக்கு

077 293 5509, 077 704 4681

## உடன் தேவை

கிளிநொச்சியில் உள்ள பன்சி கடை மற்றும் Beauti Palour ஒன்றிற்கு கீழ்வரும் பெண் பணியாளர்கள் உடன் தேவை.
Beautician (அழகுகலை செய்பவர்)
விற்பனையாளர்

தொடர்பு: 076 9388 052

## வேலையாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பசரக்கு வர்த்தக நிலையமொன்றிற்கு பொதிசெய்வதற்கு பெண் வேலையாளர்கள் தேவை.

077 419 5015

## Classes

SLPS Limited
3rd Batch ஆரம்பம் 06.11.2021
Zoom Classes

பதிவுகளுக்கு : 077 606 2716

## புவியியல்

A/L (2021) துரித மீட்டல் வகுப்புக்கள்
A/L (2022), A/L (2023) மற்றும் O/L மாணவர்களுக்கான புவியியல் Online மூலம் கற்பிக்கப்படும் Zoom
❖ இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் கற்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு: 076 055 4530 Ms. Mehala Vijayendran

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் ஆச்சிரமம் ஒன்றை பராமரிக்க நிரந்தர பணியாளர் ஒருவர் தேவை. (தங்குமிட வசதி, சம்பளம் ஆகியவை பற்றி நேரில் பேசலாம்)

தொடர்பு : 077 293 5509

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலைசெய்யக்கூடிய மேசன், கூலி மற்றும் பலகை அடித்து கம்பிகட்டுபவர் ( Shuttering / Barbending) தேவை.

T.P: 077 777 0969

## காணி விற்பனைக்கு

கோண்டாவிலில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட வர்த்தக நோக்கத்துக்கு மிகவும் பொருத்தமான ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 076 822 4764

உ
குகமயம்

## நனி நன்றி

முருகன் பணியே முதற் பணியென முழு வாழ்வும் ஈந்த எம் தந்தை, கந்தனடியில், குகபதம் அடைந்த வேளை வருகை தந்து, துயர் துடைத்து, ஆறுதல் கூறித் தேற்றிய, அன்புள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தெரிவித்தவர்களுக்கும், இணையங்கள், ஊடகங்கள் வாயிலாகவும் இதய அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு உதவிகளை உணர்வுடன் ஆற்றியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை வழி நடத்திய பெருமக்களுக்கும், ஆறுதல் கூறி அஞ்சலி தெரிவித்த சிவாச்சாரியார்களுக்கும். இறுதி ஊர்வலத்திலும், தகனக்கிரியையிலும் கலந்து கொண்ட அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் இறுதி ஊர்வலத்தின் போது காத்திரமான பணியாற்றிய யாழ் மாநகரசபையினருக்கும்... "உங்களது மாசற்ற அன்பையும், சேவையினையும், பங்களிப்பினையும் நீள நினைந்து, நவில்கின்றோம்" நனி நன்றி.

முருகா சரணம்!

குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்
மாப்பாணர் வளவு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
24.10.2021



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி

Registered as a Newspaper

பக்கங்கள்: 16

மலை :33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 7 ஞாயிற்றுக்கிழமை (24.10.2021) சிகரம் : 70

'இறப்பதுபோல் எல்லோரும் காண்கிறார்கள்
ஏறக்குறைய இரண்டு கனவுகளேனும்
பிறப்பதுபோல் வந்திருக்குமா
யாருக்கேனும் ஒன்று'

–பிரான்சிஸ் கிருபா



# பாரம்பரிய கடலில் ஒரு பகை எல்லை?

நிலாந்தன்

தமிழக மீனவர்கள், ஈழப் போராட்டத்துக்காக தாயகத்துக்கு வெளியே இரத்தம் சிந்திய ஒரு தரப்பாகும். தமிழக மீனவர்களின் ஆதரவு இல்லாமல் ஈழத்தமிழர்கள் போராடியிருக்கவே முடியாது. தமிழகம் ஈழப் போராட்டத்தின் பின்தளமாக செயற்பட்ட பொழுது அந்தப் பின் தளத்துக்கு கடல் வாசல் மட்டுமே இருந்தது.



மீனவர்கள் எல்லை தாண்டுவது என்பது உலகம் முழுவதும் உள்ள ஒரு விவகாரம். மீனிருக்கும் இடத்தை நோக்கி மீனவர்கள் வருவார்கள். அப்பொழுது அவர்கள் அரசியல் எல்லைகளை மதிப்பதில்லை. தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையிலான கடல் எனப்படுவது இரு பகுதி மீனவர்களாலும் பகிரப்படும் ஒரு பாரம்பரியக் கடலாகும். அதில் பாரம்பரிய மீன் பிடி முறைகளின் மூலம் மீன் பிடிக்கப்படும் வரை பிரச்சினை பெரியளவில் எழவில்லை. மாறாக சட்டத்துக்கு விரோதமான நவீன மீன் பிடி நுட்பங்களை பயன்படுத்தும் அளவால் பெரிய தமிழகப்படகுகள் ஈழத்துக் கடற்பரப்புக்குள் நுழைந்த போதுதான் அது முதலாவதாக வள அபகரிப்பாக மாறுகிறது. இரண்டாவதாக சூழலியல் விவகாரம் ஆகிறது. மூன்றாவதாக சட்டவிரோதமான முறைகளைப் பயன்படுத்துவதால் அது ஒரு சட்டப்பிரச்சினையாக மாறுகிறது. இவை அனைத்தினதும் தொகுக்கப்பட்ட விளைவாக அது இருதரப்பு மீனவர்களுக்கும் இடையிலான மோதலாக மாறுகிறது.

ஆனால் அது தனியே மீனவர்களுக்கிடையிலான ஒரு விவகாரம் அல்ல. அது ஒரு காலத்தில் பாரம்பரியக் கடலாக இருந்தாலும் இப்பொழுது சர்வதேசக் கடல் எல்லையால் பிரிக்கப்படுகிறது. எனவே அது அரசுகளின் கடல் எல்லை பற்றிய ஒரு விவகாரம். அதனால் அதனைத் தீர்த்துக் கொள்ள வேண்டியது இருதரப்பு அரசுகளும்தான் இது முதலாவது. இரண்டாவதாக, கடற் சூழலுக்குத் தீங்கான முறைகளின் மூலம் மீனைப் பிடிக்கும் பொழுது அது சுற்றுச்சூழலைப் பொறுத்து சட்டப் பிரச்சினை ஆகிறது. அதற்குரிய சட்டங்களை இயற்றி மீனவர்களை சட்டத்துக்கு பணிய வைப்பதும் அரசுகளின் பொறுப்புத்தான். ஆனால் இதில் சம்பந்தப்பட்ட அரசுகள் இரண்டும் விவகாரத்தை தங்களுடைய மட்டத்தில் தீர்த்துக் கொள்ளவில்லை என்பது தான் இங்கேயுள்ள பிரச்சினை. அதனால் அது மீனவர்களின் பிரச்சினையாக வெளிப்படுகிறது. அதை மீனவர்கள் மட்டும் தீர்த்துக் கொள்ள முடியாது. தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளில் மீனவப் பிரதிநிதிகள் அமர்ந்திருக்க வேண்டும். ஆனால் முடிவெடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அரசுகள்தான். ஏனென்றால் அது அனைத்துலக எல்லைகள் சம்பந்தப்பட்டது. எனவே, அரசுகள் முடிவெடுக்க வேண்டிய ஒரு விடயத்தை மீனவர்களின் தலையில் சுமத்தி விட்டு பாரம்பரியமாக ஒரே கடலைப் பகிர்ந்த மீனவர்களை இப்பொழுது எதிரிகள் ஆக்கியிருக்கிறார்களா ?

தமிழக மீனவர்கள், ஈழப் போராட்டத்துக்காக தாயகத்துக்கு வெளியே இரத்தம் சிந்திய ஒரு தரப்பாகும். தமிழக மீனவர்களின் ஆதரவு இல்லாமல் ஈழத்தமிழர்கள் போராடியிருக்கவே முடியாது. தமிழகம் ஈழப்போராட்டத்தின் பின்தளமாக செயற்பட்டபொழுது அந்தப்பின்தளத்துக்கு கடல் வாசல் மட்டுமே இருந்தது. தரை வாசல் இருக்கவில்லை. வான் வாசலும் இருக்கவில்லை. ஏனென்றால் அந்தப்பின்தளமானது சட்டப்பூர்வமானது அல்ல. இதனால் அந்தக்கடல் வாசலின் முன்னரங்கச் செயற்பாட்டாளராக, இடைத் தொடர்பாளராக, இறங்கு துறையாக, இன்னபிறவாக இருந்தது தமிழக மீனவர்கள்தான்.


போராட்டத்துக்கு தேவையான வழங்கல்கள் தொடக்கம் காயக்காரரை ஏற்றி இறக்குவது வரையிலும் அவர்களுடைய பங்களிப்பு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இருந்திருக்கிறது. ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஈழத்தமிழ் அகதிகள் தமிழகத்தை நோக்கி சென்ற காலத்தில் அவர்களுக்கு உதவியதும் தமிழக மீனவர்கள்தான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழக மீனவர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; காயப்பட்டிருக்கிறார்கள்; இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 800க்கும் குறையாது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு ஈழத்தமிழர்களுக்காக இரத்தம் சிந்திய, காயப்பட்ட, கொல்லப்பட்ட, தொழிலை, சொத்துக்களை இழந்த, ஒரு சமூகத்தை அதன் ஈழத்துச் சகோதரர்கள் பகைவர்களாகப் பார்ப்பது என்பது எங்கேயோ பிழை நடப்பதைத்தான் காட்டுகிறது. ஒரு பாரம்பரியக் கடலில் நிரந்தரமாக ஒரு பகை எல்லைக் கோட்டை வரைய விரும்பும் சக்திகள் கடந்த 12 ஆண்டுகளில் வெற்றி பெற்று வருவதைத் தான் காட்டுகிறது.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபின் இருந்த கொஞ்சநஞ்ச வளங்களோடு கடலுக்குப் போன ஈழத்து மீனவர்கள் கடலில் தமிழகத்தின் மிகப் பலமான ட்றோலர்களை எதிர் கொள்ள வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. ஒரு பாரம்பரியக் கடலை பாரம்பரிய மீன்பிடி முறைகளின் மூலம் நுகரும் வரை அது ஒரு விவகாரமாக இருக்கவில்லை. ஆனால் பாரம்பரிய முறைகளைக் கடந்து நவீன சட்டவிரோதமான முறைகளை கையாளும் ஒப்பீட்டளவில் பெரியபடகுகள் ஈழத்துக் கடலுக்குள் நுழைந்த போதே அது விவகாரமாக மாறியது. அந்தப்பெரிய படகுகள் ஈழத்து மீனவர்களின் கடல் செல்வத்தை மட்டும் கவர்ந்து செல்லவில்லை, அதைவிட ஆழமான பொருளில் ஈழத்துக்கடலின் வளம் பொருந்திய கர்ப்பத்தையும் விறாண்டிச் செல்கின்றன. இதனால் பாதிக்கப்பட்ட ஈழத்து மீனவர்கள் தமிழக மீனவர்

13



# ஜே.ஆரிடம் ராஜீவ் சொன்னது என்ன?




## புவிசார் அரசியலே இந்திய -இலங்கை ஒப்பந்தம்

அ.நிக்ஸன்

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான நீதியான தீர்வை வழங்க வேண்டுமெனக் கூறிக் கொண்டு புவிசார் அரசியல் நோக்கிலேயே இந்தியா அன்று முதல், இலங்கைக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறது என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. இதனை நன்கு அறிந்து கொண்டதாலேயே, இந்திய இராஜதந்திரத்தை அன்று முதல் இலங்கை ஏமாற்றி வந்தது என்பதை வரலாறு காண்பிக்கிறது. தமிழர் பிரச்சினையை இந்தியா சாதகமாகப் பயன்படுத்துவதாக ஊடகங்களும் அன்றே வெளிப்படுத்தியிருக்கின்றன.

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை -இந்திய ஒப்பந்தம் அன்றைய புவிசார் அரசியல் நோக்கமேயன்றி இனப் பிரச்சினைத் தீர்வுக்கானதல்ல என்று முன்னாள் சோவியத் யூனியனின் வார இதழான பிராவ்டா அன்றே விமர்சித்திருந்தது.

பாகிஸ்தான்-இஸ்ரேல் ஆலோசகர்களை இலங்கையில் இருந்து வெளியேற்றுவது உள்ளிட்ட இந்திய ஏகாதிபத்திய நலன்கள் இந்த ஒப்பந்தத்தில் இருந்ததாக பிராவ்டா வார இதழ் கூறியிருந்தது. அத்துடன் திருகோணமலைத் துறைமுகத்தில் இராணுவத் தளம் ஒன்றை அமைக்கும் அமெரிக்கத் திட்டத்துக்கான ஆதரவும் மற்றுமொரு பிரதான காரணம் என்றும் அந்த இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை -இந்திய ஒப்பந்தம் தொடர்பாக பிரவ்டா இதழில் வெளியான அந்தக் கட்டுரையை கொழும்பில் இருந்து அன்று வெளிவந்த 'தி ஐலண்ட்' ஆங்கில வார இதழ் பிரசுரித்திருந்தது. இந்தக் கட்டுரைக்கு அப்போது கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதுவர் ஜேம்ஸ் ஸ்பெயின் மறுப்பு வெளியிட்டிருந்தார். அதாவது திருகோணமலையில் அமெரிக்கப் படைத் தளங்களை அமைக்கும் நோக்கம் எதுவும் இல்லையெனவும் அமெரிக்கத் தூதுவர் கூறியிருந்தார். தூதுவரின் மறுப்பையும் ஐலண்ட் வார இதழ் வெளியிட்டிருந்தது.

அமெரிக்க- சோவியத் யூனியனுக்கிடையே அப்போது பனிப்போர் மூண்டிருந்தது. அத்துடன் அமெரிக்காவுடன் நட்பை உருவாக்கும் நோக்கமும் புதுடில்லிக்கு மறைமுகமாக இருந்தது. இதனால் திருகோணமலையில் தளம் அமைக்கத் தனது ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா முற்பட்டிருக்கலாமென பிராவ்டா இதழ் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக்கலாம். அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, அமெரிக்க, பாகிஸ்தான் சார்பான கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்ததாகவும், இதனால் பிராந்தியப் பாதுகாப்புக் கருதியே 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜூலைக் கலவரத்தைப் பயன்படுத்தி இந்தியா தமிழர் பிரச்சினையில் தலையிட்டது என்றும் இலங்கை அரசியல் விமர்சகர் எம்.எஸ்.எம். ஐயூப் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொழும்பில் இருந்து வெளிவரும் டெய்லிமிரர் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதன் பின்னணியில் அமெரிக்க, பாகிஸ்தான் உறவு தொடர்பாக அன்று இந்தியா அதிக கவனம் செலுத்தியிருந்ததன் வெளிப்பாடுதான், ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்ட அதீத கரிசனை என்ற கருத்துக்களே அன்று தமிழ் மக்கள் மத்தியில் அதிகமாக இருந்தன. ஆனாலும் அன்று ஈழப் போராளிகள் முன்வைத்திருந்த தனிநாட்டுக் கோரிக்கையை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வெளிப்படை. இந்தியாவின் இந்தக் கொள்கை ஈழப் போராளிகளுக்கும் தெரிந்தே இருந்தது எனக் கவிஞர் புலமைப்பித்தன், தான் இறப்பதற்குச் சில வருடங்களுக்கு முன்னர் வழங்கிய நேர்காணலில் கூறியிருந்தார்.

" போராளிகளை ஆதரிப்பேன், ஆனால் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்க முடியாது" என இந்திராகாந்தி தன்னிடம் கூறியிருந்தார் என்று புலமைப்பித்தன் அந்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

ஆகவே இவ்வாறான கருத்துக்களின் பின்னணியில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நோக்கினால் அதன் பின்னணியில், இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பு நலன் இருந்தது என்பது வெளிப்படை. அத்துடன் வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி அதிகாரத்தையும் ஈழத் தமிழர்களுக்கு வழங்க இந்தியா அன்று விருப்பம் கொண்டிருக்கவில்லை என்பதை இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கான உரையாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு ஏற்றதான அரசியல் தீர்வுக்கு இந்தியா இணங்கியிருப்பதாகக் கூறியிருந்தார். (இந்தச் செய்தி 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'உதயன்' பத்திரிகையிலும் வெளியாகியிருந்தது)

கொழும்பில் இருந்த அப்போதைய இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்சிற் மூன்று நாட்களில் இரண்டு தடவை ஜே.ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்திருந்தார். அப்போதுதான் இலங்கைக் குடியரசின் அரச கொள்கையான ஒற்றையாட்சி அரசியல் யாப்பு முறைமைக்குள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை முன்வைப்பது குறித்தும் பேச்சுக்கள் நடந்திருக்க வேண்டும். ஆனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் டிக்சிற் நடத்திய பேச்சுக்களில் வடக்கு- கிழக்கு இணைந்த சுயாட்சித் தீர்வை வலியுறுத்தியதாக இந்தியத் தூதரக வட்டாரங்களை மேற்கோள் காண்பித்து அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் அப்போது கொழும்பில் இருந்து வெளியான 'ஐலண்ட்' ஆங்கில வார இதழில் இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கு என்பதை தூதுவர் டிக்சிற் ஏற்றுக்கொண்டதாகச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. ஜூலை மாதம் 29 ஆம் திகதி இந்திய -இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் அப்போது இந்தியப்பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி , ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு எழுதிய கடிதம் ஒன்று 'த குவாறா' என்ற கேள்வி பதில் இணையத்தளத்தில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் வெளியாகியிருந்தது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக அந்தோனி தேவசகாயம் எழுதிய கட்டுரையிலேயே, ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. முக்கியமாக நான்கு விதப்புரைகளை முன்வைத்து எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை இலங்கை ஏற்றுக்கொண்டால், ஒப்பந்தம் கைச்சாத்தாகுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

*ஒன்று, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவைப் பாதிக்கும் வகையிலோ, இருநாடுகளினதும் பாதுகாப்பு, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலோ வேறு நாடுகளின் இராணுவத்தினையோ அல்லது புலனாய்வுத் துறையினரையோ இலங்கையில் கடமையாற்ற அனுமதிக்கக் கூடாது.*

*இரண்டாவது, இந்தியாவின் நலன்களுக்கு எதிராக, அதன் பாதுகாப்பைப் பலவீனமாக்கும் வகையில் திருகோணமலைத் துறைமுகமோ அல்லது இலங்கையில் உள்ள வேறு எந்தத் துறைமுகமோ வேறு நாடொன்றின் இராணுவப் பாவனைக்கு அனுமதிக்கப்பட முடியாது.*

*மூன்றாவது, திருகோணமலையில் அமைந்திருக்கும் பெரும் எண்ணெய்த் தாங்கிகளை இந்தியா தலைமையிலான நிறுவனம் ஒன்றே பொறுப்பேற்கும்.*

*நான்காவது, இலங்கையில் இயங்கிவரும் சர்வதேச நாடுகளின் ஒலிபரப்பு நிலையங்கள் பொதுமக்களுக்கான சேவைகளை மாத்திரமே வழங்கமுடியும் அத்துடன் இராணுவ மற்றும் உளவுத்துறைகளில் இந்தியாவின் நலன்களுக்கும் பாதுகாப்புக்கும் எதிராகச் செயற்படக்கூடாது.*

*இந்த நான்கு விடயங்களையும் உறுதிப்படுத்தி ஒப்புக்கொண்டால், இந்தியா பின்வரும் மூன்று விடயங்களைச் செய்ய உறுதியளிக்கும்.*

*ஒன்று, இந்தியாவில் இருந்து கொண்டு இலங்கையின் பாதுகாப்புக்கு, பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராக, பிரிவினைவாதத்தைத் தூண்டும் நபர்களை இந்தியா இலங்கைக்கு நாடுகடத்தும்.*

*இரண்டாவது, இலங்கை இராணுவத்துக்கு இராணுவ உதவிகள், ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளை இந்தியா வழங்கும். மூன்றாவது, மேற்படி விடயங்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்திய-இலங்கை அரசுகளிடையே அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்படும்.*

*"ஆகவே மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்தி ஒப்புக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் "என ராஜீவ் அனுப்பிய அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.*

ஆகவே தமிழர்களின் அரசியல் விடுதலைக்காகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதாக இந்திய மத்திய அரசு இன்று வரை கூறுவதை தமிழர்கள் இதுவரை நம்பாதமைக்கு இந்தக் கடிதத்தில் உள்ள விடயங்களே காரணமெனலாம்.

மாகாண சபைமுறையை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு அரசியல் தீர்வு எதனையுமே எதிர்பார்க்கக் கூடாதென அப்போதைய இந்திய வெளிவிவகாரச் செயலாளர் எஸ்.கே. சிங், உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். 1988 ஆம் ஆண்டு இஸ்லாமபாத்தில் நடைபெற்ற சார்க் மாநாட்டுக்குச் சென்றிருந்த எஸ்.கே. சிங், அங்கு ஊடகவியலாளர்களிடம் இதனைக் கூறியிருந்தார்.


ஆனால் , யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் 17.08.1987 அன்று இடம்பெற்ற மாபெரும் மக்கள் கலந்துரையாடலில் ஈழத்தமிழர்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாத இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க முடியாது எனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. பேராசிரியர் க.சிவத்தம்பி, மூத்த விரிவுரையாளர் ஜனாப் சித்திக், செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்குபற்றியிருந்த இந்தக் கலந்துரையாடலில், இலங்கையின் ஒற்றையாட்சி முறை முற்றாக நிராகரிக்கப்பட்டது.

"ஈழத்தமிழர்கள் ஒன்றுசேர வேண்டிய காலமிது " என பேராசியர் சிவத்தம்பி அழைப்பும் விடுத்திருந்தார். இந்த ஒப்பந்தம் -இந்திய நலன் சார்ந்தது என விரிவுரையாளர் ஜனாப் சித்திக் குற்றம் சுமத்தியிருந்தார். ( இந்தச் செய்தியும் அப்போதைய உதயன் பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.)

அதேவேளை, மாகாண சபை முறையை அறிமுகப்படுத்திய, 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து உருவாக்க இந்திய அதிகாரிகள் இருவர் 17.08 .1987 அன்று கொழும்புக்கு வந்திருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# பால் இன்று நேற்று நாளை



## 2 ஒரு பார்வை

எஸ். கிருபானந்தகுமாரன்[ MVSc]
கால்நடை மருத்துவர்

# இலங்கையின் பாலுற்பத்தித் துறை

இலங்கையில்1977 ஆண்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட முன்னர் அன்றைய பால் தேவையின் 80% உள்ளூர் உற்பத்தியில் இருந்தே நிறைவு செய்யப்பட்டிருந்தது. பல்தேசிய பால் உற்பத்தி நிறுவனங்கள் இலங்கைச் சந்தையில் தமது பாலுற்பத்திகளை குறிப்பாக பால் மாவை அறிமுகப்படுத்திய பின் படிப்படியாக இலங்கை மக்களின் பால் நுகர்வு கலாசாரம் மாற்றமடையத் தொடங்கியது. ஏறக்குறைய தன்னிறைவு என்ற நிலை படிப்படியாக குறைவடைந்து ஒருகட்டத்தில் அதிகதிகமாக இறக்குமதியாகும் பாலுற்பத்திகளில் தங்கியிருக்கும் நிலை ஏற்படத் தொடங்கியது. மறுபுறமாக உள்ளூர் பாலுற்பத்திக் கட்டமைப்பு பெருமளவு விருத்தியடையாது ஒரு தேங்கிய நிலையிலேயே இருந்து வந்தது. எனினும் கடந்த் சில வருடங்களாக இருந்த அரசாங்கங்கள் எடுத்த தொடர்நடவடிக்கைகள் காரணமாக துறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு, இன்றைய திகதியில் உள்நாட்டு பாலுற்பத்தி 40 % மும் வெளிநாட்டு இறக்குமதி 60% ஆகவும் மாற்றமொன்று நிகழ்ந்தது.

கடந்த வருட [ 2020] இலங்கைமத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயம் 7 % அளவிலும், விவசாயத்தின் ஒரு கூறாக அமையும் கால்நடைஉற்பத்தித் துறை 0.6% ஐயும் கொண்டுள்ளன. இலங்கையில்1.1 மில்லியன் பசு மாடுகளும்,0.3 மில்லியன் எருமை மாடுகளும் உள்ளன. வருடாந்தம் பசு மாடுகளில் இருந்து 413.6 மில்லியன் லீற்றர் பாலும் எருமை மாடுகளில்இருந்து 77.9 மில்லியன் லீற்றர் பாலும் பெறப்படுகிறது. இரண்டும் சேர்த்து இலங்கையின் மொத்த பாலுற்பத்தி 491.5 மில்லியன் லீற்றர் ஆகும். வருடாந்த இலங்கையின் பால் தேவை 1200 மில்லியன் லீற்றராக காணப்படுகின்ற நிலையில், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் 491.5 மில்லியன் லீற்றர் பாலைத் தவிர்த்து மிகுதி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. கடந்த வருடம் மட்டும் 338.8 மில்லியன் அமெரிக்க டொலர் அதாவது 6070 பில்லியன் இலங்கை ரூபா பால் பொருள் இறக்குமதிக்கு மாத்திரம் செலவிடப்பட்டுள்ளது. இது இலங்கை இறக்குமதியில் 2.1% ஆகும். உர இறக்குமதிக்கு செலவிட்ட பணத்தை விடவும் இது அதிகம்.

இலங்கையில் கால்நடை வேளாண்மை பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்தது. கி.மு. 400 ஆண்டுகளுக்கு முன் இருந்த கால்நடை வளர்ப்பு தொடர்பான குறிப்புகள் மற்றும் தொல்பொருள் பதிவுகள் கிடைத்திருக்கின்றன. இயற்கையாக இலங்கையில் உள்ளூர் நாட்டு இன மாடுகளும் [ srilanakn/lanka/Sinhala cattle] .உள்ளூர் எருமைகளும் [ srilanakn buffalo] உள்ளன. அவற்றின் பாலுற்பத்தி ஒரு லீற்றருக்கும் குறைவாகும். சுதந்திரத்துக்கு முன் சில பிரிட்டிஷ் அதிகாரிகள் தமது பால் தேவைக்காக சில வகை உயர் ரக மாடுகளை கொண்டு வந்து மலையக பகுதிகளில் அங்குள்ள தொழிலாளிகளைக் கொண்டு வளர்த்திருந்தனர். அவர்களின் காலனியான தென்னாபிரிக்காவின் கேப் டவுன் துறைமுகத்தில் இருந்து இந்த மாடுகள் கப்பலேற்றப் பட்டதால் அவை" கேப் மாடுகள் " என அழைக்கப்பட்டு இறுதியில் இன்றளவிலும் அவற்றைப் போன்ற மாடுகள் கேப்பை மாடுகள் என அழைக்கப்படுகின்றன. ஒழுங்கமைக்கப்படாத வளர்ப்பு முறை காரணமாக அவை பெருமளவு அழிவடைந்தன.

இலங்கை 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்ததன் பின் பல வகையான வெளிநாட்டுக் கால்நடை வகைகள் மற்றும் அவற்றின் விந்தணுக்கள் கொண்டுவரபட்டு பல தூய, கலப்பு இனங்கள் உருவாக்கப்பட்டன. குறிப்பாக இந்தியாவிலிருந்து சாஹிவால், சிகப்புசிந்தி பசுக்களும் ஐரோப்பிய வகையான ஜெர்சி,பிரீசியன்,அய்சியார், அவுஸ்றேலியன் பிரிசியன் சகிவால் [ AFS] பசு இனங்களும் இந்திய மூரா மற்றும் இந்தோ பாகிஸ்தானிய நிலிரவி எருமை வகைகளும் இவ்வாறு கொண்டுவரப்பட்டு இனக்கலப்பு செய்யப்பட்டன. ஆரம்பத்தில் அரச பண்ணைகளில் இந்த வகை மாடுகள் உள்ளூர் இனங்களுடன் இனக்கலப்பு செய்யப்பட்டு அவற்றின் பரம்பரைகள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இன்றைய திகதியில் இலங்கை மாடுகளில் 30% இந்திய மற்றும் அவற்றின் கலப்பு வகைகளும் 43 % ஐரோப்பிய மற்றும் அவற்றின் கலப்பு வகைகளும் 26% உள்ளூர் வகைகளும் உள்ளன. எருமைகளை பொறுத்த வரையில் 90% உள்ளூர் இனமாகவும் 10% இந்திய மூரா, இந்தோ-பாகிஸ்தானிய நிலிரவி கலப்புகளாகவும் உள்ளன. இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்தியமாகாணங்களில்தான் அதிக மாட்டுப் பண்ணைகளும் மாடுகளும் உள்ளன. எனினும் கணிசமான பண்ணைகள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதைக் கூறணமுடிகிறது. அங்குள்ள மாடுகளில் பெரும்பாலானவை உள்ளூர் வகையைச் சேர்ந்தவை. மேல் மற்றும் சப்ரகமுவா மாகாணங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் மாடுகள் உள்ளன. மத்திய மாகாணம் அதிகளவு ஐரோப்பிய மற்றும் அவற்றின் கலப்பு வகை மாட்டினங்களை [ பிரிசியன், அய்சியார்,ஜெர்சி ] கொண்டுள்ளதோடு இலங்கையின் பாலுற்பத்தியில் அதிக பங்களிப்பையும் வழங்குகிறது. அங்கு நிலவும் கால்நடை வளர்ப்புக்குச் சாதகமான காலநிலை மற்றும் தேவையான தண்ணீர், புற்கள் தாராளமாக கிடைத்தலும் அங்கு அதிகமாக வாழும் மலையகத் தமிழ் மக்கள் பல நூற்றாண்டுகளாக கால்நடை வளர்ப்பில் சிறப்பு அனுபவம் கொண்டிருத்தலும் அந்தப் பகுதியின் கால்நடை வளர்ப்பின் சிறப்புக்கு ஒரு காரணமாகும். குருநாகல், அனுராதபுரம், மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிக பசு மாடுகளும் அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் அதிக எருமை மாடுகளும் உள்ளன. [தரவு கால்நடை உற்பத்தி சுகாதார திணைகள கால்நடை புள்ளி விபர வெளியீடு 2018 ]

**பாலுற்பத்தி மாகாண ரீதியாக - பசு மாடு**

| மாகாணம் | பாலுற்பத்தி வருடாந்தம் |
|---|---|
| மத்திய மாகாணம் | 103,893,500 L |
| வட மேல் மாகாணம் | 75,107,530L |
| வடக்கு மாகாணம் | 47,573,712L |
| கிழக்கு மாகாணம் | 49,841,794L |
| இலங்கை | 414,748,924 L |



**பாலுற்பத்தி மாகாண ரீதியாக - எருமை மாடு**

| மாகாணம் | பாலுற்பத்தி வருடாந்தம் |
|---|---|
| தென் மாகாணம் | 22,080,180L |
| கிழக்கு மாகாணம் | 17,010,663L |
| வடக்கு மாகாணம் | 9,784,795L |
| இலங்கை | 80,103,868L |

இலங்கையிலுள்ள மாடுகளில் 23.8% பால் கறக்கும் நிலையில் உள்ள அதே வேளை 15.7% பால் வற்றிய மாடுகளாகும். அதாவது 39.5% பால் கறக்கக் கூடிய ஆற்றல் உடையவை ஆகும்.[ 23.8%+15.7%=39.5] மிகுதி 60.5% வயதான,மலட்டுத் தன்மையுள்ள,இளம் நாகுகள்/கிடேரிகள் சிறிய கன்றுகள் மற்றும் ஆண் மாடுகள் ஆகும். அதாவது தற்போது இலங்கையிலுள்ள இந்த 23.8% மாடுகள் தான் 4.91 மில்லியன் லீற்றர் பாலைத் தருகின்றன.

இலங்கையில் ஓரிரண்டு மாடுகளை தமது கொல்லைப்புறங்களில் வளர்த்து ஆங்காங்கே கிடைக்கும் உணவுகளை வழங்கி குறைந்தளவு பாலை பெற்றுக் கொள்ளும் சிறியரக கால்நடைப் பண்ணையாளர்கள் 75% உள்ளனர். இவர்களில் பெரும்பாலனவர்கள் நெல் போன்ற ஏனைய விவசாய நடவடிக்கைகளில் மிகப் பிரதானமாக ஈடுபடுவதோடு மேலதிகமாக கால்நடைவளர்ப்பிலும் ஈடுபடுகின்றனர். மத்திய மலை நாட்டில் வாழும் தோட்டப்புற மக்களும் தமது பணிக்கு மேலதிகமாக மிக சிறியளவில் மாடுகளை வளர்க்கின்றனர். வடக்கு ,கிழக்கில் உள்ள பல பண்ணையாளர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளூர் மாடுகளை கொண்டுள்ளபோதும் அவற்றின் பாலுற்பத்தி மிக மிகக் குறைவு. அவர்களின் பிரதான வருமானம் இறைச்சிக்காக நாம்பன் கன்றுகளை விற்றலே ஆகும். விதிவிலக்காக யாழ்.குடாநாட்டில் ஓரளவு ஜெர்சி கலப்பு இன மாடுகள் உள்ளதோடு குறிப்பிடத்தக்க பாலையும் பெற முடிகிறது. இலங்கையில் கால்நடை வளர்ப்பு 75, 000 வரையான குடும்பங்களின் பிரதான தொழிலாக உள்ளது. பெரிய பண்ணைகளைப் பொறுத்த வரையில் கணிசமானவை அரச பண்ணைகளாகக் காணப்படுகின்றன. அண்மைக் காலங்களில் பாலுற்பத்தியை அதிகரிக்க வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட மாடுகள் மனிக்பாலம,ரிதியகம,போபத்தெலாவ போன்ற தேசிய கால்நடை அபிவிருத்திப் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. அத்துடன் பல நடுத்தர மற்றும் பெரிய தனியார் பண்ணைகளிலும் வளர்க்கப்படுகின்றன. இலங்கையின் பிரபலமான அம்பேவலவில் உள்ள பண்ணை ஆரம்பத்தில் அரச பண்ணையாக இருந்து தற்போது தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள பெரிய பண்ணையாகும். இங்கு பிரிசியன் மற்றும் அய்சியார் போன்ற ஐரோப்பிய மாடுகள் உள்ளன. அம்பேவலவில் இருந்து பால், பால் பொருள் உற்பத்திகள் கிடைக்கின்றன. ஆரம்ப காலங்களில் மேற்படி அரச பண்ணைகளில் தான் இந்திய மற்றும் ஐரோப்பிய மாட்டு வகைகள் வளர்க்கப்பட்டு அவற்றின் கன்றுகள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| Northern | 14,457,089 | 18,176,110 | 18,332,385 | 20,136,291 | 21,546,944 | 28,970,504 |
| | 5% | 5% | 5% | 5% | 5% | 6% |
| Eastern | 46,783,852 | 48,224,163 | 55,444,688 | 60,900,447 | 56,045,560 | 63,980,123 |
| | 16% | 14% | 15% | 15% | 14% | 14% |
| National total (L) | 286,691,606 | 336,196,557 | 381,363,636 | 418,889,817 | 403,230,360 | 454,628,141 |

**Table 111: Milk Production Northern and Eastern provinces**

மாடு வளர்ப்பு முறைகளைப் பொறுத்தவரை உள்ளக/தீவிர முறையில் 14% மும் ,வெளியக முறையில் 52% மும் அரை உள்ளக/ அரைத் தீவிர முறையில் 33% மும் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளக முறையில் அதிகளவு மத்திய மாகாணத்திலேயே [ 42%] மேற்கொள்ளப்படுகிறது.

(அடுத்தவாரம் தொடரும்)

சஞ்சீவி
24 ஒக்ரோபர் 2021

○ அ.செ.முருகானந்தன்

*மகாஜனாவின் மூன்று முத்துக்கள் என்று பாராட்டப்பட்ட எழுத்தாளர்களில் அ.செ.முருகானந்தனும் ஒருவர். அ.செ. முருகானந்தன் என்பது அளவெட்டி செல்லக்கண்டு முருகானந்தன் என விரிவுறும். செல்லக்கண்டு என்பது இவருடைய தாய் பெயர். தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் அ.செ.மு வுக்கு எப்போதும் அசைக்கமுடியாத இடமுண்டு. 1940 களில் எழுதப்பட்ட இந்தச் சிறுகதை இப்போதைய நாட்டுநிலைமைக்கும் அச்சொட்டாகப் பொருத்தமே.*

# பழையதும் புதியதும்

**இருபது வருஷங்களுக்கு முன்னே வண்டி ஓட்டிய அந்த இனிய நாட்கள் திரும்பவும் ஒருமுறை என் சீவியத்தில் மீண்டும் கிட்டுமா என்று ஏங்கியிருந்த எனக்கு இது எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும் என்பது நான் சொல்லிக்கொள்ளக் கூடியதல்ல.**



சஞ்சீவி சிறுகதை

ஏய்! ஏய்!" என்று இரண்டு அதட்டல் போட்டு மாடுகளைத் தட்டிவிட்டான் கார்த்திகேசு. ஒரு நிலையில் நின்று அலுத்துப்போன மாடுகள் உற்சாகத்தோடு முதலில் கொஞ்சத் தூரம் ஓடின. இந்தச் சமயம் கார்த்திகேசு என் பக்கம் திரும்பி, பெருமை பொங்க ஒரு கம்பீரப் பார்வை பார்த்தான். அதற்கு ஒன்றும் சொல்லாமலிருந்தால் நல்லாயிருக்காதல்லவா?

"அவசரமில்லை, அண்ணே! ரயிலுக்கு நேரமிருக்கு. மாடுகள் மெல்லப் போகட்டும். ஏது சோடி வாய்த்து விட்டது போலிருக்கே உனக்கு!" என்று சும்மா சொன்னேன். கால் மைல் தாண்டியதும் நடக்கும் சங்கதி எனக்குத் தெரியாதா? ஆனால், மனுஷன் பாவம். நான் கூறியதை மெய்யென்றே நம்பிவிட்டான். முகஸ்துதியிலே பழைய காலத்து வெள்ளை மனம் தன்னை மறந்துபோய் விடுகிறது.

ஆசனப்பலகையில் நேராக இருந்த மனுஷன் திரும்பி கோணமாக இருந்துகொண்டு, "ஹூம்! இதெல்லாம் என்ன மாடுகள் தம்பி, முன்னே முன்னே எப்படி மாடுகள் என்னிடம் நின்றன தெரியுமா? உனக்குத் தெரியாது. உனது பெரியப்பாவுக்குத் தெரியும்.

வேறொன்றுமில்லே. எதற்கும் கைராசி வேண்டும். எல்லாம் மாடுகளைப் பழக்குகிற விதத்திலிருக்கு. எப்பேர்ப்பட்ட சண்டி மாடுகளும் கார்த்திகேசுவின் கைக்கு வந்துவிட்டால் சுட்டியன்களாகிவிடும் என்று முன்னெல்லாம் பேசிக் கொள்வார்கள்." இப்படி ஆரம்பித்து பேசிக்கொண்டு போனவன் இடையில் ஒரு கணம் நிறுத்தி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு மறுபடியும் சொன்னான்:

"...ம்.. அந்த நடப்பு எல்லாம் முன்னொரு காலத்திலே, அந்தக் காலந்தான் மலையேறிவிட்டதே. இப்போ தம்பிமார்களுக்கு எடுத்ததற்கெல்லாம் வீட்டு வாசலிலே கார், அதிலே அவசர அவசரமாகப் பறந்தடித்துக் கொண்டு ஓடித் திரிந்தால் நாகரிகமாம்....."

கார்த்திகேசுவின் மாடுகள் காற்கட்டை தூரம் நடந்து வந்துவிட்டன என்று இப்பொழுது தெரிந்தது. காரியத்தில் கட்டையான மனிதன் வாய்ப் பேச்சிலே அட்டகாசம் போடுவதுபோலக் கடகடவென்ற முழக்கத்தோடு குலுக்கி அடித்துக்கொண்டு வண்டி ஊர்ந்தது. கொழும்பு ரயிலுக்கு அதிகம் நேரமிருந்தபடியால் மாடுகளை அவற்றின் போக்கில் போகவிட்டு, நான் கார்த்திகேசுவின் வாயை மெல்லக்கிளற ஆரம்பித்தேன். ஆனால்... அட்டா, என்ன செய்துவிட்டேன்! இந்த விளையாட்டுக் குணத்தினால் கடைசியில் மனுஷனுடைய நொந்துபோன இதயத்தையே அல்லவா கிளறிவிட்டேன்!.

கார்த்திகேசு தொடர்ந்து பேசிக்கொண்டே போனான்: "உலகம் கீழ் மேலாகப் புரண்டுகொண்டு வருகிறது தம்பி. அதில் எல்லாம் எனக்குக் கவலையில்லை. மரம் வளருரதுக்கு காவோலைகள் விழுந்து, புதிதாக வரும் குருத்தோலைகளுக்கு இடம் விட்டுக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் ஒன்று, காவோலைகள் விழுந்த பிற்பாடும் அவை இருந்த அடையாளமாக மரத்தில் வரைகள் இருக்கோ இல்லையோ அது போல, காலம் எப்படி மாறிவிட்டபோதிலும் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைத் தழும்புகள் இலேசில் அவன் மனத்தை விட்டு மறைந்துபோவதில்லை. உன்னுயை வீட்டுக்காரர்கள் என்னை மறந்துவிட்டபோதிலும், எப்படிப்புறக்கணித்து விட்ட சமயத்திலும் அவர்களுக்கு வண்டில் விட்ட அந்தப் பதினைந்து வருஷ காலத்தைச் சாகும்வரை என்னால் மறக்கவே முடியாது. தாய் பிள்ளையைப் போல உங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே இருந்து வந்த எனக்கு என்ன வினை வந்தது கடைசியில்! எனக்குப் பெயர் வைத்தது யார் என்று தெரியுமோ? உனது பெரியம்மாவைக் கேட்டுப்பார் யார் என்று சொல்லுவா? இருபது வருஷங்களுக்கு முன்பு உங்கள் வீட்டில் எந்த நேரமும் "காத்தி அண்ணை காத்தி அண்ணை" என்ற சத்தமாகத்தானிருக்கும். உங்கள் வீட்டில் என்ன நடந்தாலும் காத்தியண்ணையை அறியாமல் நடக்காது. இந்த வண்டிக்காரனுக்கு உனது பெரியம்மா கையிலே பிசைந்து தந்த சோற்று உருண்டை, இதோ வயிற்றில் ஒரு பக்கத்தில் இன்றைக்கும் இருக்கிறது. தம்பி!...."

இவ்விதம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக்கொண்டு போன கார்த்திகேசு எதிரே ஒரு கார் வருவதைக் கண்டதும் "சட்" டென்று வண்டியை ஓரமாக ஒதுக்கினான். கார் சமீபமாக வந்து வண்டியை விலக்கிக் கொண்டு போயிற்று. அப்பொழுது தான் கார் இன்னாருடையது என்று அவனுக்குத் தெரிந்தது போலிருக்கிறது. கார் வண்டியைத் தாண்டும்போது அதன் டிரைவரை எரித்துவிடுவான் போல் முறைத்துப் பார்த்தான். கார் அப்பால் போய் மறைந்த பிற்பாடு நெடுமூச்சு ஒன்று எழுந்தது, அவனது நெஞ்சைப் பிளந்துகொண்டு.

இவ்வளவுக்கும் நான் அவனையே கவனமாகப்பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கவனித்தானோ என்னவோ. "சட்" டென்று என்பக்கம் திரும்பி, "இப்போ போச்சுதே பிசாசு ஒன்று, இதுதான் என் வாழ்விலே மண்ணை அள்ளிப் போட்டது. ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைக் கலைக்கப் பார்த்ததாம். முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைக்கப் பார்த்ததாம். நேற்று வந்த மலையாளத்தானும் அவனுடைய காரும் இந்த ஏழை வண்டிக்காரனை ஒழித்து விடப்பார்த்தார்கள்.

ஆனால்....." என்றான்.

கார்த்திகேசு இப்படித் தொட்டுத் தொட்டுப் பேசியது விஷயத்தை முழுக்க அறியும்படி என்னைத் தூண்டிற்று.

"என்ன நடந்தது, அண்ணே! தயவுசெய்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லு" என்று கேட்டான்.

வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் வேறு கிடைத்துவிட்டால் பேசவேண்டுமா? கார்த்திகேசு சற்று விவரமாகக் கதையைச் சொன்னான். "நடந்தது என்ன தம்பி, எல்லாம் கால வித்தியாசம், இவ்வளவுதான். கார் வந்தது வண்டி போயிற்று. புதியதைக் கண்டதும் பழையதைக் கைவிட்டார்கள். புதுப் பெண்டாட்டியைக் கண்டதும் வயதான தாய்க் கிழவியைச் சாகக் கொன்றுவிடுகிறதா? ஊர் ஊராகக் கார்கள் வந்து நின்ற அந்த நாட்களில் என்னைப்போலக் கூலிவண்டி வைத்துப் பிழைத்தவர்கள் எத்தனை பேர் பெரும் கஷ்டத்துக்குள்ளானார்கள், தெரியுமோ. தளுக்கி மினுக்கித் திரியும் இந்த மோட்டார்க் கார்களைக் காணும்போது எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. அரிச்சந்திர மகாராசாவின் பூச்சக்கரக் குடையை அபகரித்து வரும்படி விசுவாமித்திர முனிவர் அனுப்பினாரே நாட்டியப் பெண்கள்... அவர்களுடைய ஞாபகம் வருகிறது தம்பி, இந்த அந்நியப் பிசாசுகளைப் பார்க்கும்போதெல்லாம்! ஆனால், எங்களுடைய மாட்டு வண்டிலோ அந்நிய முதலுமல்ல, அந்நியச் சொத்துமல்ல, அதற்குக் கொடுக்கும் பணத்தில் ஒரு செம்புச் சதமும் வெளியே போவதுமில்லை. இதையெல்லாம் யார் சிந்தித்துப் பார்க்கிறார்கள்? மனிதனுக்குச் சிந்தனை இருந்தால் உலகத்தில் தாசிகள் ஏன் இருக்கிறார்கள் தம்பி? ஏதோ கண்டதே சாட்சி கொண்டதே கோலம்! இந்த மனப்பான்மை - ஊரெங்கும் பரவிக்கொண்டு வந்த இந்த அந்நிய மோகம் உனது பெரியப்பாவையும் போய்ப் பிடித்துவிட்டது. அந்தச் சமயம் இந்தியாவிலிருந்து ஒரு பெரிய தவில் வித்துவானைக் கூப்பிட்டிருந்தார் அவர். ஒரு நாள் என்னைக் கூப்பிட்டுச் சொன்னார்: "கார்த்திகேசு, இப்போ எனக்கு வந்திருக்கும் தவில்காரர் மாட்டு வண்டியில் ஏறிப் பழக்கமில்லையாம். என்ன செய்வது? இந்த வருஷம் போகட்டும். அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ளலாம்."

எனக்கு என்னமாதிரி இருந்திருக்கும் என்று நினைக்கிறாய் தம்பி? பெரியப்பா வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் நான் அவரது உள்ளப்போக்கைத் தெரிந்து கொண்டு விட்டேன். இருந்தும், இதை ஓரளவுக்கு எதிர்பார்த்திருந்தவன்தான் நான். எப்படியான போதிலும் பதினைந்து வருஷத் தொடர்பு அல்லவா? இங்கிருந்து காரைதீவுக்கோ, மட்டுவிலுக்கோ இன்னுமதற்கப்பாலுமோ பெரியப்பா சேவகம் போகும் வனம், வனாந்திரங்களுக்குச் சாமம் சாமமாக, இரவு இரவாக, இருட்டோ நிலவோ, வெயிலோ, மழையோ, பனியோ காற்றோ ஒன்றையுமே சட்டைபண்ணாமல் வண்டி ஓட்டியவனல்லவா? உற்சவங்களிலே நடைபெறும் மேளக் கச்சேரிகளில் உனது பெரியப்பா மேளத்துக்குக் கிடைக்கும் புகழிலும் கீர்த்தியிலும் நன்மையிலும் தீமையிலும் நானும் அவர்களில் ஒருவனாக நின்று பங்குபெற்றவன் அல்லவா?

எனது வண்டி ஏற்றிச் சென்ற வடிவேலு நாயனக்காரரை எங்கேயோ இருந்து வந்த மலையாளத்தானும் அவனது காரும் ஏற்றிச் செல்கிறது என்பதை எண்ணவே எனக்கு வயிறு எரிந்தது. அடக்க முடியாத ஆத்திரமும் கோபமும் உண்டாயின. வயிற்றெரிச்சலிலும் ஆத்திரத்திலும் நான் செய்த விசர் வேலைகளை இப்பொழுது நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது. ஆனால் அப்பொழுது அவை எனது உள்ளக் குமுறலை ஓரளவு ஆற்றி வைத்தன. ஒருநாள் காரோடு என் வண்டியைச் சவாரி விட்டுப்பார்த்தேன். மாடுகள்மேல் தொட்டு அறியாத நான் அன்றைக்கு அவற்றிற்கு அடித்த அடிகளை நினைத்தால் இன்னமும் தேகம் நடுங்குகிறது தம்பி!

இன்னொரு நாள் வேறொரு காரியம் செய்தேன். தெருவில் என் வீட்டுக்குப் பக்கத்தே ஓரிடத்தில் ஒருநாள் ஒளித்திருந்து அந்தக் கார் போகும் சமயத்தில் இரண்டு கல்லை அதன்மீது விட்டெறிந்தேன். யாருடைய நல்ல காலமோ இரண்டு எறியும் கார்மீது படவில்லை. ஓடுகிற கார்மீது கல்லெறிவதற்கும் அநுபவம் வேண்டும் என்று அப்பொழுதுதான் அறிந்துகொண்டேன்.

கடைசியில் இந்த அற்ப காரியங்களினால் ஒரு பலனும் ஏற்படவில்லை. ஊர் முழுவதையும் மலையாளத்தான் தனது வசமாக்கிக்கொண்டான். அவனுக்கிருந்த ஓய்வு ஒழிச்சல் இல்லாத "சவாரி"யைப் பார்த்து மேலும் கார்கள் ஊரிலே வந்து குவிந்தன.

நிலைமையைப் பார்த்துவிட்டு நான் மண்வெட்டியைக் கையில் தூக்கினேன்.....

எது எப்படியான போதிலும் நீதிக்கு ஒரு இடம் உலகில் என்றைக்கும் இருக்கவே இருக்கிறது தம்பி!

பதினைந்து பதினாறு வருஷங்களுக்குப் பிறகு இப்போ சண்டை தொடங்கி, பெற்றோல் இறக்குமதி குறைந்து அது கட்டுப்பாடு ஆய்ச்சோ இல்லையோ, வண்டிக்காரர்களும் "மறுமலர்ச்சி" அடைந்தார்கள். அவர்களுக்கு நல்ல காலம் பிறந்தது. வயலுக்கு எரு இழுத்த மாடுகளும் வண்டிகளும் சலங்கைச் சத்தத்தோடே பெரிய றோட்டில் ஓட ஆரம்பித்தன. வடிவேலு நாயனக்காரரே வலியக் கூப்பிட்டு என்னிடம் கேட்டிருக்கும்போது நான் ஏன் சும்மா இருக்கப்போகிறேன். இருபது வருஷங்களுக்கு முன்னே வண்டி ஓட்டிய அந்த இனிய நாட்கள் திரும்பவும் ஒருமுறை என் சீவியத்தில் மீண்டும் கிட்டுமா என்று ஏங்கியிருந்த எனக்கு இது எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும் என்பது நான் சொல்லிக்கொள்ளக் கூடியதல்ல. "கார்த்திகேசு, இந்த வருஷம் எனது மேளத்துக்கு நீதான் வண்டிக்காரன்" என்று வடிவேலு நாயனக்காரர் சொல்லிய வார்த்தைகள் எனக்குத் தேன்போல இனித்தன. பால் போன்ற வெண்ணிலவில் வெள்ளைவெளெரென்றிருக்கும் தெருவழியே எனது வண்டி மறுபடியும் மேளம் ஏற்றிச் செல்வதை எண்ண எனக்கு ஆனந்தம் பொங்கியது. ஆனபோதிலும்....." என்று கார்த்திகேசு சட்டென்று பேச்சை மழுப்பினான்.

"அது என்ன காத்தி அண்ணே?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை, ஒரு சின்னச் சந்தேகம், தம்பி. இந்தச் சண்டை இருக்குதோ இல்லையோ, இது முடிந்த பிற்பாடு "பெற்றோல் கிட்ரோல்" எல்லாம் வந்து கார்கள் பழையபடி கறுப்பன் கதைதானாம், மெய்தானோ?" இதைக் கேட்கும்போது அவனுடைய குரல் சோர்வடைந்து காணப்பட்டது.

"பயப்படாதே அண்ணே! அணுகுண்டு கண்டுபிடித்திருக்கிறார்களாம்" என்றேன் நான். வேறு எதைச் சொல்ல?

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை




யாழ்ப்பாணப் பட்டணம் சன அடர்த்தி கூடிய நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி. யாழ்ப்பாணப்பட்டணம் 159 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. யாழ்ப்பாணப்பட்டணத்தின் நீளம் ஆறு ஜேர்மன் லீக்குகள் (German Leagues) . அகலம் மூன்று ஜேர்மன் லீக்குகள். இதன் வடக்கு எல்லை வங்காள விரிகுடா,தெற்கு எல்லை ஆனையிறவு. நாங்கள் இங்கு 34 தேவாலயங்களைக் கட்டியுள்ளோம். வலிகாமத்தில் 14 தேவாலயங்களைக் கட்டியுள்ளோம்; இவற்றுள் தெல்லிப்பழையில் உள்ள தேவாலயம் மிகவும் பெரியது. சுற்றி வர பூந்தோட்டமும், இந்தியப் பழமரங்களும் காணப்படுகின்றன. இரட்டைச் சுவர்களால் அமைந்த நீளமான மண்டபமும் இந்தத் தேவாலயத்தில் உள்ளது.




12.1.1661 அன்று உள்ளூர் வாசிகள் 12 பேர் நற்செய்தி சொல்பவர்களாக இணைத்துக்கொள்ளப்பட்டனர்.ஏப்ரல் மாதம் இந்த எண்ணிக்கை 15 ஆக அதிகரித்தது. 1665 ஆம் ஆண்டளவில் எமது செமினரியில் 2000 மாணவர்கள் இருந்தனர். இவர்களில் 480 பேர் எமது சமயம் பற்றி போதுமான அறிவைக் கொண்டிருந்தனர்.தெல்லிப்பழையில் இருந்து அரை மணித்தியாலத்தில் மல்லாகத்தை அடைந்து விடலாம். இங்கு செங்கற்களால் ஆன ஒரு தேவாலயத்தை அமைத்துள்ளோம். இந்தத் தேவாலயத்தை போர்த்துக்கீசர் கட்டத்தொடங்கினார்கள் நாங்கள் அதனைக் கட்டி முடித்தோம். இங்கு 200 மாணவர்கள் உள்ளனர். தெல்லிப்பழையில் இருந்து ஒன்றேகால் மணித்தியாலத்தில் மயிலிட்டியை அடைந்து விடலாம்.

மயிலிட்டித் தேவாலயம் கடற்கரையிலிருந்து அரை மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இங்கு ஒட்டி ,ஓரா போன்ற மீன்களும் நண்டுகளும் காணப்படுகின்றன. இங்கு 1500 தொடக்கம் 1600 வரையான நற்செய்தி சொல்பவர்கள் இருக்கின்றனர்.மயிலிட்டியில் உள்ள குருமடத்தில் 750 மாணவர்கள் உள்ளனர்.

தெல்லிப்பழையில் இருந்து இரண்டு மணித்தியாலத்தில் அச்சுவேலி தேவாலயத்தை அடைந்து விடலாம். இங்கு 2000 பேர் அமரக்கூடிய தேவாலயமொன்றை அமைத்து வருகிறோம்.இந்தத் தேவாலயக் கட்டடப்பணிகள் எனது காலத்தில் பூர்த்தி செய்யப்படவில்லை. இங்கு மணிப்புறாக்களும்,ஆமைகளும்,பன்றிகளும், மான்களும் சாரைப் பாம்புகளும் காணப்படுகின்றன. (ஆங்கிலத்தில் silent snake என உள்ளது. சாரைப் பாம்பாக இருக்கலாம் என்பது எனது ஊகம்; வேறு பாம்பாகவும் இருக்கலாம்.)
இங்குள்ள கோபுரமொன்றிலிருந்து ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் மணிப் புறாக்கள் பறக்கும்.அவை பறக்கும் நேரத்தை வைத்து நேரத்தைக் கணிக்கின்றனர். இங்குள்ள ஆதிசைவர்கள் எமது கிறிஸ்தவத்தைப்பற்றி அறிந்து கொள்ள விரும்பவில்லை. எனினும் நான் சாதாரண பிராமணன் ஒருவனை மதம் மாற்றி அவனது நாற்பத்தாறாவது வயதில் அவனுக்கு ஞானஸ்தானம் வழங்கினேன். அவனுக்கு பிலிப்பு எனப் பெயர் சூட்டினேன். இங்கு 700 தொடக்கம் 900 வரையான நற்செய்தி சொல்பவர்கள் இருக்கின்றனர். குருமடத்தில் 400 தொடக்கம் 500 வரையான மாணவர்கள் உள்ளனர்.

(வரலாறு நீளும்)




# சொற்சிலம்பம் போட்டி 54

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | 8 |
| 9 | 10 | | ■ | 11 | 12 | | |
| 13 | | | 14 | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | 17 | | ■ | 18 |
| ■ | 19 | ■ | | | ■ | 21 | |
| 22 | | 23 | ■ | 24 | | | |
| 25 | | | | | ■ | 26 | |

அனுப்புபவர் பெயர்:..................................................

முழுமையான தபால் விலாசம்: ....................................

..........................................................................

கையொப்பம்:..........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. ஒரு மதியத்தில், அண்ணளவாக- ஒன்றின் பெறுமதியைத் தீர்மானிப்பதை இப்படிக் கூறுவர். 6. அழிப்பு 7. சூரியனின் ஒரு பெயர். 9. கன்னி கழியாத இளம் பெண் 11. ஊட்டு 13. இல்லை என்று உரைத்தல் 15. மறி 16. நாட்டில் பெரிய பெரிய சிலைகளில் வீற்றிருப்பவர் 20. செய்வோம். 21. சம்மதச் சொல் 22. மகாகவி 24. பெறுமதி 25. மகாபாரத பாத்திரங்கள் 26. ஓர் பாயும் மிருகம்.

## மேலிருந்து கீழ்

1. சுமங்கலி நெற்றியை அலங்கரிப்பது. 2. அறுசுவைகளில் ஒன்று. 3. சமய 4. பூட்டான் தலைநகர் 5.பொய் 8. பிடியைத் தளர் 10. மச்சம் 12. மகாத்மா காந்தி அணிந்த ஆடை 14. மதி 17. அருச்சுனன், வீமனுக்கு மூத்தவர். 18.சந்திரன் 19. ஒன்று முற்றிலும் ஒவ்வாதது, விரோதமானது. 21. ஏதாவது ஒன்றை பிளப்பதற்கு பயன்படும் 22. சத்யசாயியை இப்படிக் கூறுவர். 23. கெட்டியான்.

### சொற்சிலம்பம் போட்டி 53 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.பரதேசி 4.துப்பு 6. சரிதம் 8. சதம் 10. கமயம் 11. மிடி 12. அனல் 13. மகரம் 15. கொல் 16. அன்னம் 17. வீடு 18. வரம்பு 20. கடன்காரன்

**மேலிருந்து கீழ்**

1. பஞ்சமி 2.தேசம் 3. சிரி 4. தும்மல் 5. புலம்பல் 7. தகனம் 9. தடிமன் 12. அரம் 14. கணவான் 15. கொடும் 16. அதிக 17. வீரன் 18. வர 19. புண்.

**சொற்சிலம்பம் போட்டி இல.54**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**29.10.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

### போட்டி இலக்கம் 53 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**

**மா.கணேசதாசன்,**
மின்சார சபை,
சுன்னாகம்.

**2 ஆம் பரிசு**

**க.மதியழகன்,**
குலனையூர்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

**3 ஆம் பரிசு**

**ஆ.பாலமதுஜா,**
திருநாவலூர், புலோலி மேற்கு,
பருத்தித்துறை.,

**4 ஆம் பரிசு**

**கி.சபேசன்,**
இல.76, பழம் வீதி,கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**

**யோ.கேதீசன்,**
முதலியார் ஒழுங்கை,
கோப்பாய்.

# அறிந்தும் அறியாமலும்



## கோத்தாவின் வியூகம்

ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவாக தீவிர பரப்புரைகளில் ஈடுபட்ட பௌத்த தேரர்களும், தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும், தற்போது மொட்டு அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

விலைவாசி உயர்வு, பொருட்களுக்கான தட்டுப்பாடு உள்ளிட்டவையால் அரசு மீது மக்கள் ஏற்கனவே கடுப்பில் உள்ள நிலையில், தற்போது தேரர்களும் சொற்கணைகளைச் சரமாரியாகத் தொடுத்து வருகின்றனர். மறுபுறத்தில் பங்காளிகளும் விமர்சனங்களை முன்வைத்துவருகின்றனர். இதனால் அரச தலைமை கடும் அதிருப்தியில் உள்ளது.

எனவே இந்த நெருக்கடி நிலைமையை சமாளிக்க, ஜனாதிபதி கோத்தாபய தானே நேரடியாகக் களத்தில் இறங்கியுள்ளாராம். இதன்படி எல்லே குணவங்ச தேரரை அண்மையில் நேரில் சென்று சந்தித்துள்ளார் ஜனாதிபதி. அவருடன் கோத்தாபய, நீண்டநேரம் மனம் விட்டுப் பேசியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு, உரப்பிரச்சினை உட்பட பல விடயங்கள் தொடர்பில் சுமார் 2 மணிநேரத்துக்கு மேலாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச்சந்திப்பின்போது சில இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் அரசுக்கு எதிராக அடக்கி வாசிக்க எல்லே குணவங்ச தேரரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தச்சந்திப்பு முடிவடைந்த பின்னர், விவசாயத்துறை அமைச்சரை தொலைபேசிமூலம் தொடர்புகொண்ட ஜனாதிபதி, விவசாயத்துறை அமைச்சின் செயலாளர்கள் தொடர்ச்சியாக பதவி விலகியவதற்கான காரணத்தையும் பக்குவமாகக் கேட்டறிந்துள்ளார். இதேவழியில் ஏனைய எதிர்ப்பாளர்களையும் நேரில் சந்தித்து , 'மண்டையைக் கழுவ' கோத்தா முடிவெடுத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது

○ சுழியன்





## தந்தையின் வழியில் தனயன்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலநறுவை மாவட்ட இளைஞர் அணியின் புதிய தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்து நடைபெறும் தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்ற தகவல் உறுதியாகியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஓர் அங்கமாக பொலநறுவைத் தொகுதியின் இளைஞர் படையணியை ஸ்தாபிக்கும் நிகழ்வு முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இளைஞர் கூட்டணியின் புதிய தலைவர் பதவிக்கு தஹாம் சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பின்படி, மாவட்ட ரீதியில் நிறுவப்படும் ஒரு அமைப்பின் பதவிக்கு தஹாம் சிறிசேன தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 1969ஆம் ஆண்டு பொலநறுவை இளைஞர் பேரவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின்னர், நீண்ட அரசியல் பயணத்தை மேற்கொண்ட மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாக பதவியேற்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் தற்போது பதவி வகித்து வருகிறார்.

இந்த நிலையில் மைத்திரி தனது மகள் சதுரிக்காவையே அரசியலில் களமிறக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனாலும் இப்போதைய சூழலில் மகளை விடவும் மகனை அரசியலுக்குள் இறக்கினால், அது தனக்கு பெரும்பலமாக இருக்கும் என மைத்திரி நம்புகிறார். எப்படி மஹிந்தவுக்கு நாமல் பலமாக இருக்கிறாரோ அதேபோன்று தனக்கு தஹாம் இருப்பார் என்று நெருக்கமானவர்களிடம் மைத்திரி சொல்லியுள்ளார்.

இப்போது தந்தையின் வழியில் மகனும் செயற்பாட்டு அரசியலில் குதித்துள்ளார். மாகாணசபைத் தேர்தலிலும் தஹாம் போட்டியிடவுள்ளார். இன்னொரு அரசியல் குடும்பம் ரெடி!



## பலிக்குமா கனவு?

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு தயாராகிவரும் ஐக்கிய மக்கள் சக்தி, அதன் ஊடாக மேலும் சில அரசியல் வியூகங்களையும் வகுத்துவருகின்றது.

உரிய முகாமைத்துவ பொறிமுறையின்றி அவசரமாக இரசாயன உரத்துக்கு தடை விதித்தமை, உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, பெருந்தோட்டத்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி உட்பட மேலும் பல விடயங்களை மையப்படுத்தியே இந்தப்பிரேரணையை கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. வரவு – செலவுத் திட்ட கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளதால், நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தால்கூட அதனை ஜனவரி மாதமளவிலேயே விவாதத்துக்கு எடுப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. எனவே, இதனை எவ்வாறு அவசர விவாதமாக எடுப்பதற்கு வலியுறுத்துவது என்பது பற்றி ஐக்கிய மக்கள் சக்தி தற்போது ஆராய்ந்துவருகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான பலம் அரசாங்கம் வசம் இருந்தாலும், விவசாயிகளின் பிரச்சினைகளை பட்டியலிட்டுக் காட்டுவதும், அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள மோதலை வெளிச்சம் போட்டுக் காட்டும் நகர்வும் இந்தத்திட்டத்தின் பின்னால் உள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணிக்குள் தற்போது மோதல் வலுத்துள்ளது. பங்காளிகளை சந்திப்பதற்குக்கூட ஜனாதிபதி மறுப்பு தெரிவித்துள்ளார். இந்தப் பிளவை தனக்குச் சாதகமாக மாற்ற ஐக்கியமக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது. பார்ப்போம் கனவு பலிக்குமா என்று.



## "சேர் எனது மனம் தூய்மையானது..."

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோரை அண்மையில் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். வரவு- செலவுத் திட்ட கூட்டத்தொடரின் பின்னரே எம்.பி. பதவியை துறந்துவிட்டு, மஹிந்த சமரசிங்க தூதுவர் பதவியை ஏற்கவுள்ளார். எனினும், அதற்கு முன்னர் அமெரிக்காவுக்கு கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொள்வதற்கு அவர் திட்டமிட்டுள்ளார்.

இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காகவே ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரை மஹிந்த சமரசிங்க சந்தித்துள்ளார். அதேபோல தனது திட்டங்கள் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஜனாதிபதியை சந்தித்துவிட்டு திரும்பும் வழியில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவையும் எதிர்பாராதவிதமாகச் சந்தித்தார் சமரசிங்க.

இரு மஹிந்தக்களும் சந்தித்தபோது, வழக்கம் போல "ஆ....மஹிந்த சமரசிங்க எப்படி சுகம்?என்ன அழகாகிவிட்டீர்கள்" என சிரித்தப்படியே பிரதமர் மஹிந்த கேட்டுள்ளார். அதற்கு "சேர் எனது மனம் சுத்தமானது," என பலமாக சிரித்தப்படி சமரசிங்க பதிலளித்தாராம். பதிலுக்கு இன்னும் பலமாகச் சிரித்து, சமரசிங்கவின் நகைச்சுவையை மஹிந்த ரசித்தாராம்.




உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பா...

0773165555



எனக்கு 36 வயது. (ஆண்)வங்கி முகாமையாளராக பணி புரிகிறேன். கடந்த மூன்று மாதமாக வலதுபுற மார்பிலில் 2cm அளவிலான கட்டி ஒன்று தென்கின்றமையை அவதானிக்கையில் அதன் அளவு அதிகரித்து வருகின்றது போல் தெரிகிறது. கட்டியைச் சுற்றி உள்ள தோல் சிவந்தும் காணப்படுகின்றது. இது என்ன நோய்? யாரிடம் காட்ட வேண்டும் என்று விளக்க மளியுங்கள் டொக்டர்?

சுகுமாரன், வெள்ளவத்தை.




# ஆண்களையும் பாதிக்கக்கூடிய மார்பகப் புற்றுநோய்

## நலம் அறிய...

இங்கு பலரும் பெண்களுக்கு மட்டும் மார்பகப் புற்றுநோய் ஏற்படும் என்று தப்பான அபிப்பிராயத்தில் இருக்கின்றனர்.
மார்பகப்புற்றுநோய் என்பது ஆண்களிலும் ஏற்படக் கூடிய ஒன்று என்பதில் முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.
பெண்களில் மார்பில் ஏற்படும் எல்லாக் கட்டிகளும் புற்றுநோய்க் கட்டி என்று கருதப்படுவதில்லை. ஆனால் ஆண்களின் மார்பில் உருவாகும் ஒருகட்டி மார்பகபுற்றுநோய்க் கட்டி என்ற கோணத்திலேயே மருத்துவர்களால் அணுகப்படுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
(யாழ்.போதனா மருத்துவமனை,
- சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)



மார்பகப் புற்றுநோய் மார்பின் பல்வேறு பாகங்களிலும் ஏற்படலாம்.

இது பெரும்பாலும் பால் சுரப்பி நாளங்களின் அல்லது அந்தக் குழாய்களுக்கு பாலைக் கொண்டு சேர்க்கும் நுண்ணறைகளின் உள் அடுக்குகளில் தோன்றும்.

1. நாளங்களில் உருவாகும் புற்றுநோய்களுக்கு நாள புற்றுநோய் Ductal Carcinoma
2. நுண்ணறைகளில் தொடங்கும் புற்றுநோய்க்கு Lobular Carcinoma
3. அரிதாக ,இவை தவிர்ந்த மார்பில் உள்ள வேறு திசுக்களில் ஏற்படும் புற்றுநோய். சார்க் கோமா / லிம்போமா என்று அழைக்கப்படும்.


## மார்பகப் புற்றுநோய்க்கான அறிகுறிகள்

முதலில் சாதாரணமாக உங்கள் மார்பகம் எவ்வாறு தோற்றமளிக்கின்றது , எவ்வாறான இயல்பிலிருக்கின்றது என்பதை அவசியம் அறிந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் இயல்பிலிருந்து விலகுவதை இலகுவாகக் கண்டறிய முடியும்.

1. பொதுவான அறிகுறி புதிய கட்டி ஒன்று உருவாதல் (வலியற்ற, கடினமான , விளிம்புகள் சீரற்ற (irregular edge) கட்டிகள் பெரும்பான்மையான கான்சர் கட்டிகளாக அறிந்துகொள்ளப்பட்டாலும், மிருதுவான ,வட்டமான ,வலியுள்ள கட்டிகளாகவும் மார்பகப் புற்றுநோய்க் கட்டிகள் இருக்கலாம். எனவே அனுபவம் வாய்ந்த மருத்துவ பரிசீலனை இங்கு அவசியமாகின்றது.
2. அடுத்து தனிக் கட்டியாக அல்லாமல் மார்பின் ஒரு பகுதியோ முழு மார்புமோ வீங்குதல்.
3. தோடம்பழத்தின் மேற்புறத் தோல் போன்று மார்பில் தவாளிப்புக்கள் ஏற்படல் (Skin dimpling)
4. முலைக்காம்பு உள்நோக்கிச் செல்லுதல் (Nipple retraction)
5. முலைக்காம்பைச் சுற்றியுள்ள தோற்பகுதி அல்லது மார்பின் தோற்பகுதி சிவத்தல் / கண்டியது போன்ற நிறமாற்றம் / தடித்துக் காணப்படுதல்
6. முலைக்காம்பில் இருந்து தாய்ப்பால் தவிர்ந்த கசிவுகள் (Nipple discharge) குறிப்பாக இரத்தக்கசிவு
7. நிணநீர் முடிச்சுக்கள் வீங்குதல் அக்குள் பகுதியில் அல்லது வேறு மார்பகத்தின் மென்மையான பகுதிகளில் இது பெரும்பாலும் வேறு பகுதியில் இருந்து கான்சர் உருவாகி மார்பில் பரவியுள்ள கான்சரைக் குறிப்பதாக இருக்கும்.
8. மார்பகத்தைத் தொடும் போது கடினமாக அல்லது சூடாக உணர்தல்.

### ஆண்களுக்கான மார்பகப் புற்றுநோய் அறிகுறிகள்

1. மார்பகத்தில் இருக்கும் கட்டிகள் வலி இல்லாமல் இருக்கும்
2. மார்பகம் தடிப்பாக/கடினமாகத் தெரியும்
3. மார்பக சருமம் அல்லது முலைக்காம்புப் பகுதிகள் சிவந்து போய்க் காணப்படும்.
4. இங்கு ஆணெனில் , மார்பிலேற்படும் கட்டி புற்றுநோய்க்குரியதாகவே கணிப்பிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது





- மார்பகப்புற்றுநோயானது, நிணநீர்த்தொகுதியாலும் இரத்தத்தினூடாகவும் உடலின் மற்றைய பகுதிகளுக்குப் பரவக் கூடியது.
- பெரும்பாலும் கான்சர் பரவியுள்ள மார்பை அண்மித்த நிணநீர் முடிச்சுக்களும் கான்சர் கட்டியுடன் சேர்ந்து சத்திரசிகிச்சையின் போது அகற்றப்படும்.

### முன் கூட்டியே மார்பகப் புற்றுநோயை அறிந்து கொள்வது எப்படி?

1. குறித்த காலப்பகுதியில் உங்கள் மார்பகங்களை சுய பரிசோதனை செய்து கொள்ளுதல்.
2. மமோகிராம்
அல்றா சவுண்ட் மார்பு பரிசோதனை
MRIபரிசோதனை மூலமாக
மேற் கூறியவற்றில் கான்சர் என சந்தேகிக்கும் பட்சத்தில் பயாப்சி மேற்கொள்ளப்படும்.

3.கற்ப காலத்தில் மார்பகப்புற்றுநோய் ஏற்பட வாய்ப்புக்கள் குறைவெனினும் கட்டிகள் ஏதும் புதிதாக உருவாகினால் உடனடியாக வைத்தியரை அணுகுங்கள்.

## மார்ப்பகப்புற்று நோய் ஏற்படும் அபாயமுள்ளவர்கள்

1. கர்ப்பந்தரிக்காமை.
2. பாலூட்டாத தாய்மார்கள்.
3. (ஹோர்மோன் அளவீடுகளை மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் )கருத்தடை முறைகளின் நீண்டகாலப் பாவனை.
4. அதீத மதுப்பாவனை, அதீத புகைப்பிடித்தல்.
5. பல்வேறு நோய்களின் நிவாரணியாக பயன்படுத்தும் ஹோர்மோனல் தெரப்பிகள்(HRT,PHT, MHT)
6. தனிநபருக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டிருப்பது: ஒரு மார்பில் புற்றுநோயைப் பெற்ற ஒரு பெண்ணுக்கு மற்றொரு மார்பிலும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.
7. குடும்ப வரலாறு: ஒரு பெண்ணின் தாய் அல்லது சகோதரி மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டால், அந்த பெண்ணுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம். அந்த பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள் யாருக்காவது 40 வயதுக்கு முன்பாக மார்பக புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் இந்த ஆபத்து இன்னும் அதிகம்.
8. (early puberty) விரைவான பூப்பெய்துதல்
9. (late menopause) தாமதமாக மாதவிடாய் நிறுத்தம்

### மார்பகப் புற்றுநோய்க்கான சிகிச்சை

1.Local treatment மற்றைய பகுதிகளை பாதிக்காது குறித்த புற்றுநோய்க் கட்டிக்குரிய சிகிச்சை

**கதிர்வீச்சு சிகிச்சை**

அறுவைசிகிச்சைக்குப் பிறகு, புற்றுநோய் அணுக்களை முற்றிலுமாக அகற்றுவதற்கு, பாதிக்கப்பட்ட பகுதியில் கதிரியக்கம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

எவ்வகையான மார்பகப் புற்றுநோய், பரவல் எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்து, சத்திரசிகிச்சைக்கு முன் /பின்/முன்னரும் பின்னரும் (sand wich therapy) கதிர் வீச்சும் வழங்கப்படும்.

இங்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சையானது இரு வகைப்படும்.

**1. Breast Conservature Surgery**
**மார்பகப் பேணுகை அறுவை சிகிச்சை**

அதாவது உங்கள் முழு மார்பும் அவ்வாறே இருக்க பாதிக்கப்பட்ட பகுதி / கட்டி வெட்டியகற்றப்படும். மார்பகத்தின் ஒரு பகுதியை மட்டும் அகற்றி புற்றுநோய் அணுக்கள் பரவுவதை தடுப்பது இந்த சிகிச்சை முறை ஆகும். இந்த அறுவை சிகிச்சையில் ஆரோக்கியமான மார்பக திசு அகற்றபடாமல் மார்பகம் பாதுகாக்கப்படுகிறது.

**2. Mastectomy மஸ்டெக்டமி**
முழு மார்பும், சூழவுள்ள திசுக்களும் வெட்டி அகற்றப்படும்.

3. மார்பினைச் சூழவுள்ள நிணநீர் முடிச்சுக்கள் பரவலைப் பொறுத்து வெட்டி அகற்றப்படும்.


### Systemic treatment

வாயினூடாக / இரத்தத்தின் ஊடாக புற்றுநோயுள்ள செல்களை அழிக்க வல்ல மருந்துகளைச் செலுத்துவதன் மூலம் குணப்படுத்தல்
இது கீமோத் தெரப்பி எனப் பரவலாக அறியப்படுகின்றது.
இது சத்திர சிகிச்சையின் முன் / பின் நிலைமையை, நோயின் வீரியத்தைப் பொறுத்து வழங்கப்படுகின்றது.

### கீமோத்தெரப்பியின் பக்கவிளைவுள் நீங்கள் கட்டாயம் அறிந்து வைத்திருக்க வேண்டியவை

1. முடியுதிர்வு
2. நிகங்களில் நிறமாற்றம்.
3. வாய்ப்புண்கள்
4. உணவு உண்பதில் நாட்டமின்மை
5. வாந்தி
6. வயிற்றோட்டம்
7. நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, தொற்றுக்குள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்தல்.
8. இலகுவில் இரத்தக் கசிவு ஏற்படும் தன்மை Easy brusing or bleeding
9. மாதவிடாய் மாற்றங்கள்
10. இலகுவில் களைப்படைதல்

25 வயது முதல் பெண்கள், மாதம் ஒருமுறையாவது, தங்களது மார்புகளைத் தாங்களாகவே சோதனை செய்து கொள்ளும், `சுய மார்பகப் பரிசோதனை' (Self Breast Examination) அவசியமான ஒன்றாகும்.
மாதவிலக்கு ஏற்பட்ட 7 முதல் 10 நாள்களுக்குள், கண்ணாடி முன் நின்று, இரு மார்பகங்களுக்கு இடையே வித்தியாசம் தெரிகிறதா என்று கண்களால் பார்த்தும், அந்தப்பக்கத்தை கையின் நான்கு விரல்களால் அழுத்தித் தேய்த்தும் சுயபரிசோதனை செய்து கொள்ளலாம். பரிசோதனையின்போது, மார்பில் கட்டி அல்லது வீக்கம், மார்பகத் தோலில் அதீத சுருக்கம், மார்பகத்தில் ரத்தக்கசிவு போன்ற வித்தியாசமான அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவரின் உதவியை நாடவேண்டும்.
உயிர்கொல்லி நோயாகவிருப்பினும் மார்பக புற்றுநோயானது சிகிச்சையளிக்கக்கூடியது மற்றும் ஆரம்பகட்டத்திலே நோயறிதல் மற்றும் சரியான ஒழுங்குமுறை ஆகியவற்றால், சிக்கல்கள் கணிசமாகக் குறைக்கப்படலாம். உங்களை இறப்பிலிருந்து காப்பாற்றி வாழ்நாட்களை அதிகரிக்க முடியும்.




## 53 இற்கான கவிதைகள்

**பரிசு பெறும் கவிதை**

பல்லக்கிலே ஏறியவர் உல்லாச ஊர்வலம்
பல்லக்கிலே ஏற்றியவர் படுகுழியில் பரிதவிப்பு
விலையேற்றம் மலைக்கேற
உலை வைக்க முடியாமல்
உணவின்றி உயிருக்கே போராட்டம்
வனவாச வாழ்விற்கு வழிகோலும்
அரசாங்கமிதுவோ

**எஸ்.கோதீஷன்**

மின்னலாய் எரிபொருள் எரிவாயு விலையேற
எம் வாழ்வில் என்னதான் செய்வதென்ற தடுமாற்றம்
ஈராயிரத்து பதின் நான்கில் இன்பம் தான் ஓரளவு
ஈராயிரத்து இருபதில் இடிவிழுந்து விட்டதுவே
அத்தியாவசிய பொருளும் ஆகாயம் தொட்ட விலை
கொரோனா பெயரில் கொள்கையற்று
கொள்ளை விலை விற்கும் கொள்ளையர் கூட்டம்

**வி.பி. சிவேஸ்**

சோதனைகளின்றி சௌக்கியமாய் வாழ்ந்த வாழ்வு அது
வேதனைகளுடன் வேலை செய்யும் காலமோ இது
கொடிய கொரோனாவால் கலங்குகிறதே நெஞ்சம்
நொடியில் நெருங்கியது பதறவைக்கும் பஞ்சம்
வாயு அடுப்பு விலை அதிகரிப்பதால்
இடுப்பு ஒடிய விறகு தேடி அலைவதோ இன்று
மனிதா இந்நிலையும் மாறும் நல்லகாலம் பிறக்கும் என்று
நம்பிக்கையுடன் நடப்பதே நன்று

**டி.ரோஜனா**
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
கல்வியங்காடு

தன்னை மறந்தான் பதின்நான்கில்!
தன் நாமம் கெட்டான் இருபத்தொன்றில்!
தலைப்பட்டான் தலைவியிடம் – அவள்
தாங்க மாட்டாள்! தங்கவும் மாட்டாள்!

**கே.எஸ்.சிவஞானராஜா**
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

இருசக்கர வாகனத்தில் இரு சுமைகளை சுமந்து
ரம்மியமாய் பறந்து திரிந்த காலங்கள்
ஏழு வருடங்களில் எட்டாக்கனியாய் மாறி
மிதிவண்டியில் மின்சார வேகத்தில்
உயிரைக் காக்க ஊனை உருக்கி
விறகொடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது தான் ஏனோ?

**ஆ.பாலமதுஜா**
யா/ மெதடிஸ்த பெண்கள் பாடசாலை

நம் நாட்டு மக்களை இன்று வாட்டும்
விலைவாசி உயர்வால் நாம் அன்று
சமையலுக்குப் பயன்படுத்திய எரிவாயுவுக்கு
இன்று வைத்தாச்சு முற்றுப்புள்ளி –அதனால்
நம் மத்தியில் பாவனையிலிருந்து அருகிக்
கிடந்த விறகுகள் சமையலுக்காக இன்று
பெற்றனவே புத்துயிர்!

**சுப்பிரமணியன் ஜெயரூபன்,**
பருத்தித்துறை

அன்று எரிபொருளால் சுகமாக பயணித்த மனிதன்
இன்று எரிபொருளை சுமந்து செல்கிறான்
அன்று சூழலை மாசுபடுத்திய மனிதன்
இன்று முகத்திலே மாஸ்க் அணிந்து செல்கிறான்
அன்று சாலையிலே கானல் நீர் கண்ட மனிதன்
இன்று சாலையிலே வியர்வை நீர் சிந்த செல்கிறான்
அன்று மோட்டார்சைக்கிளில் மீற்றர் பார்த்து சென்ற மனிதன்
இன்று சைக்கிளில் வீட்டு வறுமையை சிந்தித்து செல்கிறான்

**எல். கம்சி**

காற்றோடு காற்றாய் பறந்தது பட்டம்
இரவோடு இரவாய்உயர்ந்தது விலை
குடிக்க அங்கரும் இல்லை
கறிக்கு மஞ்சளுமில்லை
சமைக்க காஸ்சும் இல்லை
காஸ் சுமந்த காலம் மலையேறிப்போய்
விறகுகளை சுமக்கும் அதிநவீனயுகமடா
சுமப்போம் விறகுகளை மறப்போம் எரிவாயுவை

**ஞா.கிரிஷி**

ஆட்சிகள் மாறிட காட்சியும் மாறுது!
நாட்களும் சென்றிட விலையும் ஏறுது!
முந்தைய காலம் பின்பும் மீளுது!
பண்டைய நிலைக்கே பாரும் போகுது!
சங்கட நிலையில் மக்களின் பாடு!
சந்தோசமில்லாமல் ஏழையின் கூடு!
அடுப்படி வாழ்வு மறந்தவர் பாடு!
அடுத்த நொடியே நெருக்கடி வாழ்வு!

**கிருஸ்ணராஜா சஞ்ஜீவன்,**
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

முகமலர மோட்டார் மிதித்து
வேண்டிய பெற்றோம் மகிழ்ந்து
அசாதாரண நிலை திடீரென சூழ்ந்தது
அனைத்தும் கவலையில் உலகே அழுதது

எரிவாயு விலையே எகிறிப் போனது
எமக்கு துணையாய் விறகு அமைந்தது
மூச்சுவாங்க விரைகிறோம் சுமையது
துயரின் வாழ்வில் பொருளேது

**சிவரம்யா**
யாழ்ப்பாணம்

2014ல் நிமிர்ந்த முதுகுடனே,
வதனமது புன்னகை பூத்திட
இல்லத்தார் சமைத்துண்ணவே
மோட்டார் சைக்கிளதில் சிலிண்டர்தனை
ஏற்றியே மகிழ்வுடன் சென்றவுனக்கு

2021ல் வளைந்த முதுகுடனே
வதனமது வியர்வை சிந்திட
மோட்டார் சைக்கிளதும் ஈருருளியாய் மாறி
இல்லம் காத்திட முன்னே ஊமலும் பின்னே விறகும்
ஏற்றியே செல்லும் அவலநிலை வந்ததேனோ?

**ந.தனுபதன்**
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்

அளவு பார்த்து செலவு செய்தார்
ஆசை உள்ளம் மகிழ்ந்த வாழ்வில்
அடுப்பு எரியும் வாயு காவும்
அழகு துரையின் மோட்டார் வண்டி
இருப்பை உடைக்கும் இழவு நோயால்
இமயம் தொட்டது விலைகள் வாசி
விறகு சுமந்து விரயம் தடுக்கும்
வியர்வை சிந்தி மிதிக்கும் வண்டி

**சரண்குமார்,**
வற்றாப்பளை

பழையன
கழிதலும்
புதியன புகுதலும்
பாரினில்
மக்கள் வழமை
தனை மாற்றி
வரலாற்றில்
ஓர் விந்தை
ஆச்சரியம்
அல்லவோ அது
ஆசியாவின்
அதிசயம் இது

**குணாயினி**
**கப்புதூர்**

வரம்பில்லா வளர்ச்சிதனில்
வனப்புடனே வாழ்க்கை செல்ல
திடீரென்ற மாற்றத்தால்
எரிபொருள்கள் ஏற்றத்தால்
வளர்ச்சிகண்டும் வருத்தம் கொண்டு
வளர்ந்த அவன் தாழ்ந்தானே

**கனிவிழி.கா**
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

## 54

**கவிதைக்கு பரிசு 1000/=**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது.



**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**29.10.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

# எல்லாம் விதிப்படி



எமதர்ம ராஜன் ஒரு குருவியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தார். அடடா இந்தக் குருவிக்கு கேடு காலம் வந்துவிட்டதே என்பதை உணர்ந்த கருட பகவான் உடனடியாக அந்தக் குருவியைத் தூக்கிக் கொண்டு பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு மரப்பொந்தில் பாதுகாப்பாக வைத்தார்.

அந்தப் பொந்தில் வசித்து வந்த ஒரு பாம்பு கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தக் குருவியை விழுங்கிவிட்டது. குருவியைக் காப்பாற்ற நினைத்து அந்தக் குருவிக்கே எமனாகி விட்டோமே என்று வருந்தினார் கருடபகவான். இதைக் கவனித்த எமதர்மராஜன் "அந்தக் குருவி சில நொடிகளில் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வசித்த ஒரு பாம்பின் வாயால் இறக்க நேரிடும் என எழுதப்பட்டிருந்தது தான் அவர் அந்தக் குருவியை உற்று நோக்கியதன் காரணம். அது எப்படி நிகழப் போகிறது என்பதை யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் இப்படி விதிப்படியே அது நடந்துவிட்டது" என்று கூறினார்.

**நீதி: வாழ்க்கையில் என்ன நடக்குமோ அது நிகழ்ந்தே தீரும். அதனால் அது குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் வாழ்க்கையை வாழுங்கள்.**

**C .பிருந்துஜன்,**
தரம்-5
யா/சிறீ சோமஸ்கந்த இந்து
ஆரம்பப் பாடசாலை.



## தொகை நிலைத் தொடர்கள்



இரு திணை– உயர்திணை, அஃறிணை
இருகுரவர்– தாய், தந்தையர்
இரு மரபு– தாய்மரபு, தந்தை மரபு
முப்பொறி– மனம், வாக்கு, காயம்
இருபொருள் – செல்வம், கல்வி
ஐநிலம்– குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
பஞ்சாமிர்தம் – சர்க்கரை, தயிர், தேன், நெய், பால்
முச்சுடர்– சூரியன், சந்திரன், அக்கினி
நாற்பொருள் – அறம், பொருள், இன்பம், வீடு
முத்தமிழ் – இயல், இசை, நாடகம்
ஐம்பொறி– மெய், வாய், கண், மூக்கு, செவி
இருபற்று– அகப்பற்று, புறப்பற்று

**கிருஸ்ணி**, தரம்7,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## பொன்மொழிகள்

அறிவை முதலீடாக வைத்து அரண்மனையை வாங்கலாம். ஆசையை முதலீடாக வைத்தால் துன்பத்தைத் தான் வாங்க முடியும்.

**விவேகானந்தர்**

சான்றோராவதற்கு அறிவில் தெளிவு, உயர்ந்த புத்தி, சீரிய சிந்தனை, புதிய கருத்தைக் கேட்கும் மனப்பான்மை, நினைவாற்றல் ஆகியவை தேவை.

**ரூசோ**

தேவைகளை குறைத்துக்கொண்டு போகும் போது தெய்வத்தன்மை அதிகரித்துக்கொண்டே வருகிறது

**சாக்ரடீஸ்**

முயற்சியைக் கைக்கொள்பவனின் உடலில் சக்தி பாய்ந்து வருகிறது.

**எமர்சன்**

காலத்தை வீணாக்காதவன் வறுமையைத் துரத்திவிடுகிறான்.

**இங்கர்சால்**

## மணியோசை

பள்ளிக்கூட மணியோசை
படிக்கும் சிறாரின் தனியோசை
பள்ளி தொடங்கும் முன்னோசை
பள்ளி முடித்த பின்னோசை!

வீட்டை விட்டு மாணாக்கர்
விரைந்து பாடசாலைக்கே
ஓட்ட மாக ஓடிடவே
ஓங்கி ஒலிக்கும் மணியோசை!

ஒவ்வொரு பாட வேளைக்கும்
ஒலிக்கும் பள்ளி மணியோசை!
ஒவ்வோர் ஆசான் பாடத்தை
ஒழுங்காய் நடத்த மணியோசை!

இறை வணக்க மணியோசை
இடை வேளைக்கு மணியோசை
முறையாய் நண்பகல் உணவுண்டு
முடிக்க ஒலிக்கும் மணியோசை!


மாலை நேரம் ஆனதுமே
மறவா தொலிக்கும் மணியோசை!
பள்ளி முடிந்து மாணாக்கர்
வீட்டுக்குச் செல்லவும் மணியோசை

## வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



## சிறுவர் கைவண்ணம்





**D.நிதுஷனா,**
தரம்: 5F,
யா/ கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை.



**சு.ஷகானா,**
தரம்: 7,
யா/ வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.




**ஜஸ்மிதன் விஜிதரன்,**
தரம்: 3
யா/ சென்பெனடிக்ற்
பாடசாலை.



**ச.லாவண்யன்,**
தரம்: 9,
யா/ மானிப்பாய் இந்துக்
கல்லூரி.



**ச.கஜுஜன்,**
தரம்: 8,
யா/ சண்டிலிப்பாய்
இந்துக் கல்லூரி.



**ச.சதீஸ்,**
தரம்: 7B,
யா/ வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.


**மாணவர்களே உங்கள் கைவண்ணங்களும் இடம்பெற வேண்டுமா?**

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி

# ஆடை நீக்கிய பால்மா; ஐயோ! ஆளை நீங்கிப் போனது மெய்யோ...?

○ வேலணையூர் சுரேஷ்





81
விலைவாசி ஏறும் ஏற்றம்; நாட்டின்
விசுவாசி கூடச் சீற்றம்! ஐயோ
விலைபேசித் திரியும் மாந்தர்; மலிவு
விலைக்கேது பொருளைக் காண்பார்? இங்கே
விலைமேல் விலையை வைத்து; உயிரில்
விளையாடும் அரசைப் பார்த்து; மக்கள்
தலைமேல் கைகள் வைத்தார்! தத்தம்
தலைவிதி என்றே எண்ணி நொந்தார்!

82
தலைமறை வான பொருளைப் பதுக்கி
தனியே விற்பார் உச்ச விலைக்கு!
விலைகுறை யாதா என்று வினாவ
வரத்து இல்லை என்பார் உரத்து!
தலைவிறைக் கின்ற விலைகள் சொல்லி
தாங்கள் நினைத்த விலைக்கு விற்பார்
பலமுறை ஏறும் பொருள்விலை யாலே
வரையறை இன்றி நீளுதிவ் அவலம்!

83
ஆடை நீக்கிய பால்மா; ஐயோ!
ஆளை நீங்கிப் போனது மெய்யோ?
பாடையிற் தூக்கிப் போனது யாரோ?
பார்க்கக் கொள்ளி இட்டது எவரோ?
வாடை கூட வீசக் காணோம்!
வாங்கிக் குடித்த வாயையும் காணோம்
தாடை யாலே வடிய வடிய
தாகம் தீரக் குடிப்போம்; எப்போ?

84
எரிபொருள் விலையை ஏற்ற ஏற்ற
எரிவது யாரு மக்கள் என்பேன்
ஒருபொருள் இல்லை மலிவு விலைக்கு?
ஒழிக இந்தக் கொடுமை என்பேன்
எரிவாயு இல்லை; மருத்துவ மனையில்
உயிர்வாயு இல்லை! மக்கள் துயரில்
ஒருவா றெழவே ஒருவழி அறியார்
ஒருவருக்கு ஒருவர் உதவுவார் பெரியார்!


85
சுமையாய் நினைத்தால் இமையும் சுமையே
சுகமாய் நினைத்தால் துயரும் சுகமே
அமையும் வாழ்வு இடறும் போதும்
அசையாது இருந்து அதனில் மீள்வோம்
எமையும் மீறி எழுமோர் தடையை
எளிதாய்க் கடந்து வாழ்வில் நீள்வோம்
சமயம் அறிந்து சகலதும் கடந்து
சாதனை மனிதராய்ச் சரித்திரம் படைப்போம்

(கொரோனாக் காலப் பதிவுகள்)




# கி.ரா: நினைவுகள் 40

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் - சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.



**பேராசிரியர் அ.ராமசாமி**


*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

புதுவையிலிருந்து நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் வந்த புதிதில் கி.ராஜநாராயணனைப் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கும் முயற்சிகளை ஒவ்வொரு ஆண்டும் செய்தேன். பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறையை ஆரம்பித்து என்னை முதல் முழுநேர ஆசிரியராகத் தேர்வுசெய்த துணைவேந்தர் முனைவர் வே.வசந்தி தேவி அதனைத் தொடர்ந்து தூண்டிக் கொண்டே இருந்தார்.

"ஆறு மாதம் முதல் ஓராண்டு வரை நமது பல்கலைக்கழகத்திலும் அவரை வருகைதரு பேராசிரியராக நியமிக்க முடியும்; வருவார் என்றால் ஏற்பாடு செய்வோம்" என்றார். புதுவைக்குப் போன பின்பு திரும்பவும் கோவில்பட்டிக்குத் திரும்புவதில்லை என்ற முடிவை மனதளவில் எடுத்திருந்ததால் அந்த அழைப்பை அவர் ஏற்கவில்லை. ஒரு கருத்தரங்கிற்காகவாவது அழைத்துவிடலாம் என்று முயன்றபோதும் அவர் வருவதைத் தவிர்த்துவிட்டார். அதனால் அந்த முயற்சியையே கைவிட்டுவிட்டேன்.

தொண்ணூற்றைந்தாவது ஆண்டுவிழாவைப் புதுவைப் பல்கலைக்கழகத்தில் கொண்டாடிய நிலையில் அவரது படைப்புகள் குறித்து ஒரு விரிவான கருத்தரங்கம் ஏற்பாடு செய்து அவரை அழைக்கலாம் என்று முயற்சி செய்தோம். அதுவும் நடக்கவில்லை. கடைசியாக 2017 இல் பல்கலைக்கழகம் வழங்கும் உயரிய விருதான பேரா.சுந்தரனார் விருதை வழங்கிச் சிறப்பிப்பது என்று முடிவெடுத்துப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்தோம். அவரும் வருவதாக ஒத்துக்கொண்டார். அப்போது துணைவேந்த ராக இருந்த பேரா.கி.பாஸ்கரும் மிகுந்த மகிழ்ச்சியோடு காத்திருந்தார்.

பேராசிரியர் சுந்தரனார் விருது 2013 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அப்போதைய துணைவேந்தர் முனைவர் அ.க. குமரகுருவின் முயற்சியில் ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டு, அதன் வைப்புத்தொகையாக ரூ .25 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. அதன் வட்டித்தொகையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாட்டுத்துறையில் சிறப்பான பங்களிப்பு செய்பவருக்கு ஒரு லட்சம் பணமுடிப்பும் ஒரு பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. தொடங்கப்பட்ட ஆண்டுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் பேராசிரியர்களுக்கே அவ்விருது வழங்கப்பட்டது. அதனைக் கொஞ்சம் திசை திருப்பி, வருகைதரு பேராசிரியராகவும் படைப்பாளியாகவும் விளங்கிய கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணனுக்கு வழங்குவது என்ற முடிவை எடுத்தபோது பலரும் பாராட்டினார்கள். அதேநேரம் சிலரிடமிருந்து எதிர்மறைக்கருத்துகளும் வந்தன. பொதுவாக எதிர்மறைக்கருத்துடையவர்களுக்கு அவரது மொழி இலக்கியப்பங்களிப்பு என்ன என்பது தெரியாமல் இருந்தது. அதனால் விழா அழைப்பிதழோடு அவரது பங்களிப்புகள் குறித்த சிற்றேடு ஒன்றைத்தயாரித்து அனைவருக்கும் வழங்கினோம்.



ஒரு லட்சம் பணமுடிப்பையும் பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ள நேரில் வருவேன்; என்னைப் புதுச்சேரிக்கே வந்து அழைத்துச் சென்று திரும்பவும் புதுச்சேரியில் கொண்டுவந்து விடும் பொறுப்பை கழனியூரன் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று கடிதம் எழுதினார். கழனியூர் என்பது பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் இருக்கும் ஒரு சிற்றூர். அந்த ஊரின் பெயரைத் தனது புனைபெயராகக்கொண்ட கழனியூரன் கி.ரா.வின் நாட்டுப்புறக்கதைத் தொகுப்பு வேலையிலும் வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கத் திட்டத்திலும் பங்கேற்றவர். அவரது கதைசொல்லி இதழின் ஆசிரியர் குழு உறுப்பினர். அவரும் என்னிடம் சொல்லிவிட்டுப் புதுவைக்குக் கிளம்பிப்போனார். கி.ரா. பல்கலைக்கழகத்திற்கு வரப்போகிறார் என்ற மகிழ்ச்சியில் எல்லா வேலைகளையும் செய்திருந்தோம். சிறப்பு அழைப்பாளராக அந்த ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்ற வண்ணதாசனை அழைத்திருந்தோம். வண்ணதாசனும் கி.ரா.வும் அன்பால் நெருங்கியவர்கள். வண்ணதாசனின் தந்தை தி.க.சி. காலம் தொடங்கிக் குடும்ப நட்புகொண்டவர்கள். மகிழ்ச்சியோடு அவரும் ஒத்துக்கொண்டார். எல்லா மகிழ்ச்சியும் விழாவிற்கு முந்திய நாள் முடிந்து போனது. தனிக் கார் ஒன்றில் பயணம் செய்து நெல்லைக்கு வரும் ஏற்பாட்டிற்கு முன்பு மருத்துவரின் ஆலோசனைக்காகச் சென்றபோது "இப்போது பயணம் செய்வது நல்லதல்ல; முடிந்தால் ரயில் பயணம் மேற்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டதாகவும், உடனடியாக ரயிலில் சிறப்பு இருக்கைகள் பெற இயலவில்லை; எனவே மகன் பிரபியும் கழனியூரனும் வருகிறார்கள்; மன்னிக்கவும்" என்று தொலைபேசியில் சொல்லிவிட்டார்.

பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது. துணைவேந்தருக்கு எப்படிச் சமாதானம் சொல்வது என்பதுதான் பெரிய சிக்கல். அவரது ஏமாற்றத்தை தீவிரமாக க்காட்டினார். விழாவை ஒருவாரம் தள்ளிவைக்கலாம் என்றார். ஆனால் அப்போதும் அவர் வருவார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்பது எனக்குத்தெரியும். எனவே துணைவேந்தரைச் சமாதானப்படுத்தி விழாவை நடத்தி பணமுடிப்பை அவரது மகனிடம் வழங்கி அனுப்பிவைத்தோம். எழுத்தாளர்களை பாராட்டுவது என்பது எழுத்திற்காகத்தானே என்ற தேற்றுதலோடு அவருக்குப் பேரா.சுந்தரனார் விருது 2016, 2017 ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்டது.

கி.ரா.வின் சொந்தக் கிராமம் இடைசெவல். அந்தக் கிராமத்தை உள்ளடக்கிய பகுதியில் இருக்கும் பல்கலைக்கழகம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். அதன் வளாகத்திற்குள் ஒருதடவையாவது அழைத்துவந்துவிட வேண்டும் என்று நினைத்த எனது நினைப்பும் பல்கலைக்கழகத்தின் ஆசையும் கடைசி வரை நிறைவேறவே இல்லை. என்றாலும் அவரது நாவல்களையும் சிறுகதைகளையும் பாடமாக்கிக் கற்பித்துக் கொண்டிருக்கிறது.

முனைவர், ஆய்வியல் நிறைஞர் போன்ற பட்டங்களுக்கு ஆய்வாளர்கள் ஆய்வுசெய்து முடித்துள்ளார்கள். பாடத்திட்டத்தின் பகுதியாக வைத்து மாணாக்கர்களுக்குக் கற்பிக்கிறது.

(நினைவுகள் நீளும்)





# கொலை செய் பாம்பே!



○ மயூ

கடந்த ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி அதிகாலை. கேரளாவில் உள்ள கொல்லம் மாவட்டத்தின் அஞ்சல் கிராமம். அந்தக் கிராமத்தின் வீடொன்று காலை வேளையிலேயே பதகளித்தது. இரவு உறக்கத்துக்குச் சென்ற உத்ரா என்ற 25 வயது இளம் பெண், காலையில் படுக்கையில் இருந்து எழவில்லை. வாய் திறந்தவாறு, ஒரு கை கட்டிலில் இருந்து கீழே விழுந்த நிலையில் நினைவற்றிருந்த அந்தப் பெண்ணை அள்ளிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினார்கள் உறவினர்கள். அதன்பின்னர் அடுத்தடுத்து வெளியாகத் தொடங்கின பகீர் தகவல்கள்.

உத்ராவுக்கும், அட்ரூரைச் சேர்ந்த சூரஜ்குமாருக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்தது. சூரஜ்குமாருக்கு வயது 27. வங்கி ஒன்றில் பணம் வசூலிப்பாளராகப் பணியாற்றுகின்றார். தரகர் மூலமே இந்தத் திருமண சம்பந்தம் நடந்திருக்கின்றது. சூரஜின் தந்தை முச்சக்கரவண்டிச் சாரதி. உத்ராவின் தந்தை இறப்பர் வியாபாரி, தாய் ஓய்வு பெற்ற அதிபர். இந்தக் குடும்பம் பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் இருந்தது. ஆனால் உத்ரா கற்றல் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்.

உத்ராவை அள்ளிக் கொண்டு ஓடிய உறவினர்கள் அருகில் இருந்த மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். மருத்துவர்கள் சோதித்தபோது உத்ராவின் உயிர் ஏற்கனவே பிரிந்திருந்தது. மருத்துவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். உத்ராவின் உடல் கூற்றுப் பரிசோதனை முடிவுகள் பொலிஸாரைக் குழப்பத்தில் ஆழ்த்தின. உத்ராவில், முன் கையில் ஒரு அங்குலத்துக்கு குறைவாக இரு சோடி காயங்கள் இருந்தன. உத்ராவின் உடலில் நாகபாம்பின் விசம், மயக்க மருந்து என்பன கலந்திருப்பதும் தெரிந்தது. நாகபாம்பு தீண்டினால் தசைகள் செயலிழந்து, மூச்சுவிட முடியாது ஒரு மணி நேரத்தில் இறப்பு ஏற்பட்டுவிடும்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி உத்ராவை பாம்பு தீண்டியிருந்தது. இந்தச் சம்பவம் சூரஜ்குமாரின் வீட்டிலிருந்த போது நடந்தது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட உத்ரா 50 நாள்கள் வரை சிகிச்சை பெற்றார். மூன்று வலிமிகுந்த அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்தியாவின் மிக ஆபத்தான பாம்புகளில் ஒன்றான கண்ணாடி விரியன் பாம்பு உத்ராவைத் தீண்டியிருந்தமை பரிசோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. கிராமங்களில் வழக்கம் போல உத்ராவுக்கு சர்ப்பதோசம், பாம்பு சாபம் இருப்பதாக பேச்சுக்கள் அடிபட்டன.

இப்போது உத்ரா படுக்கையில் உயிரிழந்த நிலையில், அவரது உடலில் நாகபாம்பின் நஞ்சு. உத்ராவின் பெற்றோருக்கு சற்றுச் சந்தேகம் எழ பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தனர். உத்ராவின் உடலில் மயக்க மருந்து கலந்திருந்ததால் பொலிஸாரும் இந்தச் சம்பவத்தைத் தீவிரமாக விசாரிக்க ஆரம்பித்தனர். பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். ஆனால் அவை எல்லாம் ஓரிடத்தில் வந்து நின்றன. அந்தச் சந்தேகப்புள்ளி வேறுயாருமல்லர், உத்ராவின் கணவர் சூரஜ்குமார் தான். அவரை தங்கள் காவலில் எடுத்தது பொலிஸ். 78 நாள்கள் விசாரணையில் ஆயிரம் பக்கங்கள் கொண்ட அறிக்கை தயாரானது. அந்த விசாரணையில் உத்ரா கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமை தெளிவானது. மருத்துவர்கள் மற்றும் ஊர்வன நிபுணர்கள் உட்பட 90க்கும் மேற்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டனர். சூரஜின் அலைபேசி அழைப்புகள், இணையத் தேடல் வரலாறு, பின்புறத் தோட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட உயிரற்ற நாகபாம்பு, குடும்பக் காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மயக்க மருந்துகள், சூரஜ் இரு பாம்புகளை வாங்கியதற்கான ஆதாரங்கள் ஆகியவை மூலம் வழக்கு விரிவடைந்தது. இறப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்பு உத்ராவைக் கடித்த கண்ணாடி விரியன் பாம்பை சூரஜ் வாங்கியுள்ளார் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி, சூரஜ் அந்தப் பாம்பை தனது வீட்டின் முதல் தளத்தில் விட்டுள்ளார். தனது மனைவியை அலைபேசியை எடுத்து கொண்டு மாடிக்கு செல்லச் சொன்னார். ஆனால் உத்ரா பாம்பைக் கண்டுவிட்டுச் சத்தமிட்டுள்ளார். சூரஜ் பாம்பை பிடித்து அப்புறப்படுத்துவது போன்று போத்தல் ஒன்றில் அடைத்து அங்கிருந்து எடுத்துச் சென்றுவிட்டார். மே மாதம் 2ஆம் திகதி மீண்டும் சூரஜ், உத்ராவின் உணவில் மயக்க மருந்தை கலந்துவிட்டு அவள், உறங்கும் படுக்கை அறையில் கண்ணாடி விரியன் பாம்பை விட்டுள்ளார். இந்த முறை பாம்பு உத்ராவை கடித்துவிட்டது. உத்ரா வலியில் துடித்து தூக்கத்திலிருந்து எழுந்தார். அவர் காலில் பாம்பு கடித்திருந்தது. அதற்கிடையில் சூரஜ் பாம்பை ஜன்னல் வழியாக தூக்கி வீசிவிட்டார். அந்த இரவு அவசர சிகிச்சை அளிக்கும் மருத்துவமனையை கண்டறிய இரண்டு மணி நேரம் ஆனது. உத்ராவுக்கு வீக்கமும் ரத்தப்போக்கும் ஏற்பட்டது. மூன்று அறுவைச் சிகிச்சைகளின் பின்னர் தனது தாயின் வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்தார் உத்ரா.

மே மாதம் 6ஆம் திகதி இரவு உத்ராவின் வீட்டுக்குச் சென்றிருக்கிறார் சூரஜ். உத்ராவுக்கு மயக்க மருந்து கலந்த பழச்சாற்றை கொடுத்தார் சூரஜ். உத்ரா மயக்கமடைந்த பின்னர் ஐந்தடி நீளம் கொண்ட பாம்பை தூங்கும் தனது மனைவியின் மீது தூக்கிப் போட்டிருக்கிறார். ஆனால் அது உத்ராவைக் கடிக்கவில்லை. அங்கிருந்து நகர்ந்து சென்றிருக்கின்றது. மீண்டும் அதைப் பிடித்து உத்ராவின் மீது விட்டுள்ளார் சூரஜ், அப்போதும் பாம்பு மீண்டும் நெளிந்து சென்றுவிட்டது. சூரஜ் மூன்றாம் முறை முயற்சி செய்தார். பாம்பை தலைப்பகுதியில் பிடித்து உத்ராவின் இடது கையின் பக்கம் எடுத்து சென்றார். அப்போது கோபமடைந்த அந்த நாகம் உத்ராவை இரு முறை கடித்துவிட்டது. அதன் பின் அந்த அறையில் உள்ள அலுமாரிக்குள் மறைந்து இரவு முழுக்க அங்கேயே இருந்தது பாம்பு. "நாகபாம்புகள் பொதுவாக நீங்கள் அவற்றை தொந்தரவு செய்யாதவரை உங்களைக் கடிக்காது. சூரஜ் அதை தலைப்பகுதியில் பிடித்து தனது மனைவியை கடிக்குமாறு தூண்டியுள்ளார்." என விசாரணையில் பங்கேற்ற ஊர்வனவற்றின் நிபுணர் ஒருவர் கூறுகிறார்.

சூரஜ் அந்த ஜூஸ் கிளாஸை கழுவி வைத்தார். பாம்பை பிடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கம்பை அழித்துவிட்டார். அதேபோன்று தனது மொபைலில் இது தொடர்பாக பேசிய அழைப்புகளை அழித்துவிட்டார். இவை விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டன என்று இந்த வழக்கை விசாரித்த விசாரணையாளர்கள் தெரிவிக்கின்றனர். விசாரணைகளில் சுரேஷ் என்ற பாம்பு பிடிப்பவர், சூரஜுக்கு இரு பாம்புகளை விற்றதை ஒப்புக் கொண்டார். அந்த நாக பாம்பை ஏவிவிட்டது, நான்கு மாதத்தில் உத்ராவை கொல்ல எடுக்கப்பட்ட மூன்றாவது முயற்சி என பொலிஸார் தெரிவிக்கின்றனர். உத்ரா கனவில் நாகம் கொடுத்த சாபத்தால் அஞ்சி வருகிறார் என்றும், அவர் பாம்பு கடித்து இறந்துவிடுவார் என்றும் சூரஜ் ஊருக்குள் கதையையும் பரப்பி விட்டிருக்கிறார்.

ஒரு உயிருள்ள நாகபாம்பை கொண்டு சம்பவம் நடைபெற்ற தருணம் மீண்டும் உருவாக்கப்பட்டது. அதில் ஒரு பொம்மையை படுக்கையில் படுக்க வைத்திருந்தனர். "பொதுவாக நாக பாம்புகள் இரவில் சுறுசுறுப்பாக இயங்காது. அந்த பாம்பை அந்த பொம்மையின் மீது விட்டபோது அங்கிருந்து அகன்று சென்று அறையின் இருட்டான ஓரத்தில் ஒளிந்து கொண்டது. நாங்கள் அந்த நாக பாம்பைத் தூண்டினோம். ஆனால் அது கடிக்க முயற்சிக்கவில்லை," என்கிறார் விசாரணை அதிகாரி ஒருவர். அதன்பின் அவர் அந்த நாக பாம்பின் கழுத்தைப் பிடித்து, பிளாஸ்டிக் பொம்மையின் கையில் கட்டி வைக்கப்பட்டிருந்த இறைச்சித் துண்டில் கடிப்பதற்கு தூண்டினார். அந்தச் சமயம் அது உத்ராவின் கையில் இருந்த இடைவெளியைப் போல கடித்திருந்தது.

சூரஜ் திட்டமிட்டு உத்ராவை கொலை செய்தமைக்கான அனைத்து ஆதாரங்களும் விசாரணையில் சிக்கின. சூரஜ் உத்ராவை திருமணம் செய்து கொண்டபோது உத்ரா வீட்டாரிடமிருந்து 768 கிராம் தங்கத்தை வரதட்சணையாக பெற்றார். சுசுகி செடான் கா மற்றும் 4 லட்சம் ரூபா பணத்தையும் பெற்றார். அது மட்டுமல்லாமல் தங்களது மகளைப் பார்த்துச் கொள்ள உத்ராவின் பெற்றோர் சூரஜுக்கு மாதம் 8 ஆயிரம் ரூபா வழங்கினர் என்றும் கூறப்படுகின்றது. உத்ராவை கொலை செய்துவிட்டு, அவரது பணத்தை திருடிவிட்டு, வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது சூரஜின் எண்ணமாக இருந்திருக்கின்றது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி உத்ரா மோசமாக, கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார் என்று கூறி, சூரஜ்க்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். ஒரு விலங்கு கொலைக்கான ஆயுதமாக மாறியுள்ளமை பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம், சீதனம் மற்றும் பணத்துக்காக பெண்கள் கொலை செய்யப்படுவது தொடர்வதும் வேதனையான விடயம்.



# குரங்கின் கையில் கத்தி!



ஒருநாட்டின் ஜனாதிபதி தன் நாட்டு மக்களைப் பார்த்து 'அருவருக்கத்தக்க எலிகள்' என்பாரா? ட்ரம்ப் அதைச் செய்வார். தன் நாட்டில் உள்ள கறுப் பினத்தவர்களை 'எலிகளுக்கு ஒப்பானவர்கள்' என்றார்.

உலகஉலா

○ ஆர்.பிரகாஷ்

ஒரு குரங்கின் கையில் கூர்மையான கத்தியொன்றைக் கொடுத்தால் என்னவாகும்? கத்தியின் அபாயத்தை குரங்கு அறியாது. எனவே அந்தக் கத்தி அந்தக் குரங்கின் கைகளில் இருக்கும் வரை கத்தியாலும் குரங்காலும் எவருக்கு ஆபத்து நேரும் என்று கணிக்க இயலாது. அத்தகைய கதைதான் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ரம்புடையது.

சர்சைகளுக்கும் சண்டித்தனங்களுக்கும் பேர்போன ட்ரம்ப், தற்போது தனியான சமூக வலைத்தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். 'ட்ருத் சோஷியல்' என்பது ட்ரம்புடைய சமூக வலைத்தளத்தின் பெயர். இந்த வலைத்தளத்தை ட்ரம்ப் உருவாக்கிய பின்னணியையும், அவருக்கு இதை உருவாக்க வேண்டிய தேவையையும், இனி இந்த வலைத்தளத்தை வைத்து அவர் ஆற்றலாம் என்று கருதப்படும் விடயங்களையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால், இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சொன்ன உவமையே சாலப்பொருத்தம் .

ஒருநாட்டின் ஜனாதிபதி தன் நாட்டு மக்களைப் பார்த்து 'அருவருக்கத்தக்க எலிகள்' என்பாரா? ட்ரம்ப் அதைச் செய்வார். தன் நாட்டில் உள்ள கறுப்பினத்தவர்களை 'எலிகளுக்கு ஒப்பானவர்கள்' என்றார்.

அகதிகளைப் பார்த்து 'அருவருக்கத்தக்கவர்கள்' என்றார். இத்தனைக்கும் அவர் 'பொறுப்புமிக்க' அமெரிக்க ஜனாதிபதி பதவியை அலங்கரித்துக் கொண்டிருந்தார். இந்த விமர்சனங்களை அவர் முன்வைக்கும்போதெல்லாம் பிரபல சமூக ஊடகங்களான பேஸ்புக், ருவிற்றர் ஆகியன அந்தப் பதிவுகளை நீக்கம் செய்துவிடும்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் தோல்வியடைந்தவுடன் ட்ரம்ப் தன் தோல்வியை ஏற்கவில்லை. தன் தோல்வி திட்டமிட்ட நாடகம், தேர்தல் ஆணையகம் பைடனுக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளது என்றெல்லாம் வெளிப்படையாகவே பிதற்றினார். இதன் விளைவாக அமெரிக்காவில் கலவரங்கள்கூட ஏற்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்து பேஸ்புக், ருவிற்றர் கணக்குகளில் இருந்து ட்ரம்ப் வாரக்கணக்காக முடக்கப்பட்டார்.

குறித்த சமூக வலைத்தள நிர்வாகங்களால் தனிக்குழு அமைத்து ட்ரம்ப் கண்காணிக்கப்பட்டார்.

இவற்றின் விளைவாகத்தான் ட்ரம்புக்கும் மேற்படி சமூக வலைத்தளங்களுக்கும் இடையில் தீராப் பகை நிலவியது - நிலவுகின்றது. தற்போதும்கூட ருவிற்றர் நிர்வாகத்துக்கு எதிராக ட்ரம்ப் வழக்குத் தொடர்ந்துள்ளார். இத்தகையதொரு பின்னணியில்தான் பிறவிப் பணக்காரரான ட்ரம்ப், தனியாக ஒரு சமூகவலைத்தளத்தை ஆரம்பித்து அதைப் பாவனைக்கும் கொண்டுவந்துள்ளார்.

இந்த வலைத்தளம் ஆபத்து நிறைந்ததா? என்று கேட்டால், சந்தேகமேயின்றி பதில் ஆம் என்பதாகத்தான் அமையும். ட்ரம்ப் ஆரம்பித்துள்ள இந்த வலைத்தளத்தை அவ்வளவு இலகுவாகக் கடந்துவிட முடியாது. இனி அவருக்கு நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும் அவ்வளவு இறுக்கமாக இல்லை.

சர்வதேச சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் ட்ரம்ப் தன் வலைத்தளத்தில் பின்பற்ற வேண்டுமே தவிர, பிறிதெந்த நிறுவனங்களின் 'சுய வரையறை' களுக்கும் தன்னை உட்படுத்த வேண்டிய தேவை ட்ரம்புக்கு இல்லை. தற்போது அவரொரு 'பரப்புரைச்' சுதந்திரப் பறவை.

இன்னும் தொலைநோக்காகச் சொல்லவேண்டுமாயின் குடியரசுக்காரர்களுக்கு (ட்ரம்பின் கட்சியினர்) இயல்பாகவே இருக்கும் வெள்ளையின – அமெரிக்க மேலாதிகச் சிந்தனைகளுக்கு 'ட்ருத் சோஷியல்' ஒரு விதை. நல்லதொரு தீனி.

விளையாட்டு

○ ஆர்.லயனல்



# அர்த்தமற்றுப்போன 'எல் கிளாசிக்கோ!'


அதென்ன 'எல் கிளாசிக்கோ'?

இதுவொரு ஷ்பானிஸ் சொல். ஸ்பெய்னின் இரு பெரும் கால்பந்தாட்டக் கழகங்களான ரியல் மட்ரிட் மற்றும் பார்சிலோனா கழகங்கள் மோதும் ஆட்டம்தான் கால்பந்தாட்டத்தின் பெரும் போர் என்ற தோரணையின் 'எல் கிளாசிக்கோ' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. முன்பெல்லாம்' எல் கிளாசிக்கோ' வருகின்றதென்றால் ஒரு மாதத்துக்கு முன்னரே ஆர்ப்பாட்டங்கள் தொடங்கிவிடும். ரொனால்டோ, மெஸ்ஸி என்ற இருபெரும் ஜாம்பவான்களின் தனிப்பட்ட ஆதிக்கம்தான் இந்த எதிர்பார்ப்புகளுக்கு முதன்மைக் காரணங்களாக இருந்திருக்கின்றன என்பது வெள்ளிடை மலையாக தற்போது புலனாகின்றது.

ரியல் மட்ரிட்டின் வீரராக ரொனால்டோவும், பார்சிலோனாவின் வீரரான மெஸ்ஸியும் இருந்த காலத்தில் எல் கிளாசிக்கோ ஆட்டங்கள் கொடிகட்டிப் பறந்தனதான். ஆனால் தற்போது ரொனால்டோ ரியல் மட்ரிட்டில் இருந்து பிரிந்துவிட்டார். அவர் தற்போது மன்செஸ்டர் யுனைற்டெட்டுக்காக விளையாடி வருகின்றார். அதுபோல் மெஸ்ஸி பார்சிலோனாவில் இருந்து வெளியேறிய பின்னர் தற்போது பரிஸ் செயின்ட் ஜேர்மனுக்காக விளையாடுகின்றார். இவர்கள் இருவர் மட்டுமல்ல ரியல் மட்ரிட்டின் அணித் தலைவராக இருந்த ராமோஸும் தற்போது அந்த அணியில் இல்லை. ஆக மொத்தத்தில் அர்த்தமில்லாத – கனதியில்லாத ஆட்டமாகத்தான் இப்போதைய எல் கிள்ளாசிக்கோ நடைபெறவுள்ளது. அதேநேரம், எல் கிளாசிக்கோவில் மெஸ்ஸி, ரொனால்டோவின் வகிபங்கையும் இப்போதைய ஆட்டம் சொல்லாமல் சொல்லிநிற்கின்றது.

**"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே"**

# கோலிக்கு தலைவலி



ரி - 20 உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகிவிட்டது. இந்தத் தொடரில் ஒவ்வொரு அணிகளும் தாம் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாத்தைக் கட்டமைத்துவிட்ட போதிலும் இந்திய அணியைக் கட்டமைப்பதில் கோலி பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ளமை புலனாகின்றது.


இந்தத் தொடரில் கோலியும், ரோகித்தும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்குவதாக இருந்தது. ஆனால், ஐ.பி.எல். தொடர் அந்தத் திட்டத்தை மாற்றிப்போட்டுள்ளது. கே.எல்.ராகுலின் அபார ஆட்டத்தால் அவரை அணிக்குள் தெரிவுசெய்ய வேண்டிய தார்மீகக் கடமைக்குக் கோலி தள்ளப்பட்டுள்ளார். அவ்வாறு ராகுல் அணிக்குள் வரும்பட்சத்தில் கோலி மூன்றாம் நிலைக்குச் செல்வார். அவருக்கு அடுத்தடுத்த இடங்களில் முறையே சூரியகுமார் யாதவ், ரிஷப் பன்ட், பாண்டியா, ஜடேஜா ஆகியோர் களமிறங்குவார்கள். இவர்களின் இடங்கள் உறுதியாகிவிட்டன.

பந்துவீச்சில் சமி, பும்ராவின் இடங்களும் உறுதி. ஏனைய இரு இடங்களுக்கு எவரைக் களமிறக்குவது என்பதுதான் தற்போது பெரும் சிக்கலாக ஆகியுள்ளது.

அஸ்வின், தாகூர் இருவரும் களமிறக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், தாகூருக்குப் பதிலாக இன்னுமொரு சுழல்பந்து வீச்சாளருடன் களமிறங்குவதையும் கோலி விரும்புவார். ஆக, இந்திய அணியின் பதினொருவர் அணித் தெரிவே சுவாரஸ்யத்துக்கு உரித்தானதாக மாறியுள்ளது.

**"யார் யார்க்கு என்ன வேஷமோ? - இங்கே யார் யார்க்கு எந்த மேடையோ?"**

# 'கனலி'யின் கனதி!



பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்களின் சஞ்சிகையை முன்வைத்து **ஒரு பகிர்வு**

○ நதழ்தா மாயழகு

பாடப்பரப்புகளின் பாட விதானத்துக்கு ஏற்ப செயன்முறைசார் அனுபவங்களைப் பெறும் நோக்கிலே அடித்தளமிடப்பட்டதெனக் குறிப்பிடப்படும் கனலி சஞ்சிகை 2018, 2019 என்ற வரிசையில் தற்போது 2020 உம் வெளிவந்திருக்கிறது. 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட வேண்டிய இந்தச் சஞ்சிகை நாட்டில் ஏற்பட்ட பெருந்தொற்றின் காரணமாகக் காலந்தாழ்த்தி அதுவும் நிகழ்நிலையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்திலும் எமது ஊடகத்துறை மாணவர்கள் ஊடக உலகுக்குப் பயன்மிக்கவர்களாக பல்வேறு வழிகளிலும் தம்மைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். கோட்பாட்டு ரீதியாகத் தாம் பெற்ற கல்வியைச் செயற்பாட்டு ரீதியாக மாற்றும்போதே ஒரு பட்டத்தைப் பெற்றதன் வெற்றியை அனுபவிக்க முடியும். இதனை எமது மாணவர்கள் நன்கு உணர்வார்கள் எனும் நம்பிக்கை உண்டு. இன்று 'கனலி' சஞ்சிகை வெளியீடு வழியே காலத் தடைகளைக் கடந்து கண்டிருக்கும் வெற்றிபோல, தமது ஊடகப் பயணத்திலும் சிறப்பான இலக்குகளை எட்ட ஒவ்வொரு மாணவரையும் உளம் நிறைந்து வாழ்த்துகிறேன் எனக் கனலிக்கான தனது வாழ்த்துச் செய்தியிலே யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா குறிப்பிட்டிருப்பதை வாசித்தவாறு கனலியின் பக்கங்களைப் புரட்டுகிறேன்.

இளம் தலைமுறையினரின் எழுத்தாற்றலை வளர்க்க வேண்டிய காலச் சூழலில், அவர்களின் எழுத்தார்வத்திற்குக் கல்வி நிறுவனங்கள் பல அரிய வாய்ப்புக்களை நல்கி வருகின்றன. தொலைத் தொடர்புகளில் தம்மைத் தொலைய விடாமல் வாசிப்பு ரீதியான பண்பாட்டியல் விடயங்களுக்குள் தம்மை உட்படுத்திக் கொள்வது இத் தலைமுறையினரின் சிறப்பம்சமாகும். அந்த வரிசையில் கடந்த வருடம் வெளிவந்த யாழ். பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் பயிற்சிச் சஞ்சிகையான 'கனலி' கனதி மிகுந்த ஒரு சஞ்சிகையாகவும், சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது அதன் சிறப்பெனலாம். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இச் சஞ்சிகையானது வெறுமனே ஒரு சமுதாய நோக்கைத் தவிர்த்து அரசியல், சிந்தனை, தமிழர் பாரம்பரிய வாழ்வியல் அம்சங்கள் போன்ற பல விடயங்களை நுண்ணிய பகுப்பாய்வின் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளது.

பிராந்திய அடையாளங்களை மையப்படுத்தும் அம்சங்களான இயற்கை முறையிலான மருத்துவம், கிராமிய பாரம்பரிய விளைநிலம், பயிர்ச் செய்கை, அருகிப்போன வன்னியின் வளம், மலையகக் கூத்து அம்சங்கள் போன்ற தனித்துவமான விடயங்கள், குறிப்பாக இன்றைய ஆவணப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாத தமிழர் பாரம்பரிய அடிப்படைகளை இனங்கண்டு பதிவு செய்துள்ளமை கனலியைக் கனதியாக்குகின்றது.

கூடவே தற்போது அதிகரித்துவரும் விவாகரத்து, மாற்றுப் பாலினத்தவர் தொடர்பான கலந்துரையாடல் பற்றியும் கனலி பேசுகின்றது. தமிழர் வாழ்வியல் அம்சத்தில் திருமணம் என்பது மிகமுக்கியமான விடயமாகும். ஆனால் வடக்கு, கிழக்கில் இன்று அதிக மணமுறிவுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக நீதிமன்றங்களில் 2018, 2019களில் முறையே 198, 172 விவாகரத்துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பான சமூக நோக்கினையும் கனலி எடுத்துரைக்கின்றது.

'எமது உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்' என்ற நேர்காணல், சமூக நோக்கின் பழமை பேண் தன்மையை உடைத்தெறியும் வகையில் அமைந்துள்ளது. வடபகுதியில் மாற்றுப் பாலினத்தவர்களின் தனித்துவக் குரலாக இந்த நேர்காணல் ஓங்கி ஒலிக்கின்றது.


இன்றைய இளைஞர்களின் சமூகவலைத் தளப் பாவனை குறித்து நல்லதொரு கட்டுரை கனலிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது .

' உலகளாவிய ரீதியில் முறையே முகநூலை 2.23 பில்லியன், வலையொலியினை (யூரியூப் ) 1.9 பில்லியன் பாவனையாளர்கள் பயன்படுத்துவதாகவும், சாதாரணமாக ஒரு தனிநபர் மூன்று மணித்தியாலங்களாவது சமூக வலைத்தளத்தில் தனது நேரத்தைச் செலவிடுவதாகவும் புள்ளி விவரத்துடன் இந்தக் கட்டுரை சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. மேலும் போதைப்பொருட் பாவனை இன்று மாணவர்கள் மத்தியில் பெருகி வருகின்றமையை மையமாகக் கொண்டு சிந்தனையைத் தூண்டக் கூடிய அம்சங்களையும் கனலி தன்னகத்தே கொண்டுள்ளது.

யாழ். ஊடகக் கற்கைகள் நெறி மாணவர்களின் கனலி இன்னும் கனதியாக அடுத்தடுத்த வருடங்களிலும் தன் பயணத்தை தடையின்றித் தொடரட்டும். ■




# பாரம்பரிய...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு எதிராகத் திரும்பும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. அண்மையில் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த ஒரு மீனவர் சங்கப் பிரதிநிதி "இதை யாரும் தடுக்காவிட்டால் நாங்கள் மனிதக் குண்டுகளாக மாறி இந்திய மீனவர்களின் படகுகளைத் தகர்ப்போம் "என்று எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை விகாரமடைந்து விட்டது. இந்த விவகாரத்தை தமிழ் அரசியல்வாதிகள் சிலர் பிரச்சினையின் ஆழத்தை விளங்கிக் கொள்ளாமல் கையாள முற்படுகின்றார்களா?

கடந்த கிழமை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் தமது ஆதரவாளர்களுடன் மீனவர்களுக்கு ஆதரவாக ஒரு போராட்டத்தை முன்னெடுத்தார்கள். ஆனால் அந்தப்போராட்டம் அதிகம் மக்கள் மயப்படவில்லை. அத்தோடு, அந்தப்போராட்டம் பின்வரும் விடயங்களை நமக்கு உணர்த்தியிருக்கிறது.

முதலாவது, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு இல்லை. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் அதற்குத் தலைமை தாங்கினார்கள். அதாவது கூட்டமைப்புக்குள் ஐக்கியம் இல்லை என்பதனை அது உணர்த்தியிருக்கிறது. இரண்டாவது, தமிழரசுக் கட்சியின் தலைவர் அதில் பங்குபற்றவில்லை. அவருடைய ஆதரவாளர்களையும் காணமுடியவில்லை. அதாவது தமிழரசுக் கட்சிக்கு உள்ளேயும் முரண்பாடுகள் உண்டு என்பதனை அது காட்டி இருக்கிறதா? அப்படிப் பார்த்தால் மீனவர்களுக்காகவும் விவசாயிகளுக்காகவும் போராடப்போய் முடிவில் கூட்டமைப்புக்குள்ளும் ஐக்கியமில்லை, தமிழரசுக் கட்சிக்குள்ளும் ஐக்கியம் இல்லை என்ற செய்திகளை உலகத்துக்கும் சமூகத்துக்கும் உணர்த்துவதில்தான் முடிந்திருக்கிறதா?

அதுகூடப்பரவாயில்லை. கூட்டமைப்பு ஓர் ஐக்கியப்பட்ட அமைப்பாக இல்லை என்பது உலகறிந்த உண்மை.

ஆனால் தங்களுக்குள் ஐக்கியப்படமுடியாத அரசியல்வாதிகள் போதாக்குறைக்கு ஒரு பிராந்திய உறவை மேலும் பகை நிலைக்கு கொண்டு போகும் விதத்தில் ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருக்கி றார்களா? அந்தப்போராட்டம் தமிழக மீனவர்க ளுக்கு எதிரானது அல்ல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிரானதே என்று கூறப்பட்டாலும்கூட அது, அதன் தர்க்கபூர்வ விளைவைக் கருதிக் கூறின் தமிழக மீனவர்களுக்கு எதிரானதுதான். ஏனென்றால் தமிழக மீனவர்களிடமிருந்து ஈழத்து மீனவர்களை டக்ளஸ் தேவானந்தா காப்பாற்றவில்லை என்பதனால்தான் அவருக்கு எதிரான போராட்டம் என்ற அடிப்படையில் இறுதியிலும் இறுதியாக அந்தப் போராட்டம் தமிழக மீனவர்களுக்கு எதிரானதுதான். போராட்டம் நடந்து முடிந்த அடுத்தநாள் அதாவது கடந்த செவ்வாய்க்கிழமை காரை நகர் கடலில் தமிழகப் படகொன்று மூழ்கடிக்கப்பட்டி ருக்கிறது. இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் உயிரிழந்திருக்கிறார். தமிழ் அரசியல்வாதிகள் கடலில் இறங்கி எதிர்ப்பைக் காட்டிய அடுத்தடுத்த நாள் இது நடந்திருக்கிறது.

இந்த விடயத்தை மீனவர்கள் மட்டத்தில் தீர்க்க முடியாது. இதில் அனைத்துலக எல்லைகள் சம்பந்தப்படுகின்றன. தவிர சட்டவிரோத மீன்பிடி முறைகள் சம்பந்தப்படுவதால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சட்டப் பரிமாணமும் உண்டு. எனவே சட்டத்தை அமுல்படுத்தும் அரசுகள்தான் இந்த விடயத்தை பேசித்தீர்க்க வேண்டும். கூட்டமைப்பு, ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தோடு இணக்கமாக இருந்த காலகட்டத்தில் 2017 இல் இது தொடர்பாக ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதைச் சட்டமூல மாக்குவதற்கு யாருமே அக்கறை காட்டவில்லை. அதனைச் சட்டமூலமாக்கினால் ஒரு பகுதி மீனவ வாக்காளர்களின் ஆதரவை இழக்கநேரிடும் என்று சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பு அரசியல்வாதிகளும் அஞ்சினார்கள். இப்படித்தான் இந்தப் பிரச்சினை அதன் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிக்குப் போனது.

இதனால் பாதிப்பு யாருக்கு என்று சொன்னால் ஈழத்தமிழர்களுக்குத்தான். எப்படியென்றால் சிறிய, தொழில்நுட்ப வளம் குறைந்த படகுகளை வைத்து மீன் பிடிக்கும் ஈழத்தமிழர்கள் இதனால் தொழிலை இழக்கிறார்கள்; தொழிற் சாதனங்களை இழக்கிறார்கள். இது முதலாவது இழப்பு. இரண்டாவது இழப்பு ஈழத்துக்குக் கடலின் கர்ப்பம் விறாண்டப்படுகிறது. பெரிய ட்றோலர்கள் கடலின் கருவளத்தை விறாண்டி எடுக்கின்றன, ஈழத்து தமிழர்கள் நீண்ட கடல் எல்லையைக் கொண்ட ஒரு மக்கள் கூட்டம். அவர்களுடைய கடலின் கர்ப்பம் குலைந்தால் எல்லாமே குலைந்துவிடும்.

மூன்றாவது இழப்பு ஈழத்தமிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையிலான பிராந்திய உறவு-கனெக்டிவிட்டி - அறுக்கப்படுகிறது. இது நீண்ட எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களை பலவீனப்படுத்தும். எப்படியென்றால் ஒரு பாரம்பரிய கடலை தங்களுக்கிடையே பகிர்ந்த மீனவர்கள் பகைவர்கள் ஆக்கப்படும்பொழுது அது ஈழத்தமிழர்களை இலங்கைத் தீவுக்குள் குறுக்கி விடும். ஈழத் தமிழர்களின் பிரதான அரசியல் பலங்கள் இரண்டு. ஒன்று தமிழகம் மற்றது புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகம் . புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் பௌதிக ரீதியாக தொலைவிலுள்ளது. அருகே இருப்பது தமிழகம்தான். அதிலும் மிக அருகே இருப்பது தமிழக மீனவர்கள்தான். இந்தப் புவியியல் அருகாமை (geographical proximity ) என்பது ஒரு முக்கியமான விடயம். ஈழத்தமிழர்களின் புவிசார் அரசியலானது மேற்படி புவியியல் அருகாமையின் அடிப்படையிலானது. அந்த புவியியல் அருகாமை காரணமாக தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையில் ஏற்படக்கூடிய இணைப்பு அதாவது கனெக்டிவிட்டி என்பது நீண்ட எதிர்காலத்தில் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் இலக்குகளை அடைவதில் ஒரு முக்கிய காரணியாக செயல்படக்கூடியது.

சில வாரங்களுக்கு முன் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் அவரைச் சந்தித்த தமிழ் அரசியல் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் மத்தியில் பேசிய விடயங்களில் ஒன்று கனெக்டிவிட்டி பற்றியதாகும். கலாசார இணைப்பு, வர்த்தக இணைப்பு உள்ளிட்ட எல்லாவிதமான இணைப்புகளை குறித்தும் அவர் பேசினார். அதில் அவர் மீள் இணைப்பு (re connectivity) பற்றியும் பேசினார். ஆனால் இரு மீனவ சமூகங்களுக்கு இடையிலான பகைமை என்பது அவ்வாறான இணைப்புகளை அறுக்கக் கூடியது.

ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான இணைப்பை அறுக்கும் சக்திகளுக்கு தமிழ் அரசியல்வாதிகளும் சேவகம் செய்யக்கூடாது. இந்த அரசியல்வாதிகள் மக்களோடு சேர்ந்து ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு முதலில் தமிழகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடும் தமிழகத் தலைவர்களோடும் பேசியிருக்கலாம்தானே? அப்படி ஒரு சந்திப்பை அவர்கள் ஏன் செய்யவில்லை? தமிழக அமைச்சர்களுக்கு ஒரு சர்வதேசக் கடல்எல்லை குறித்துப் பேச அதிகாரம் இல்லையென்றால் மத்திய அமைச்சரவையில் உள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடு தமிழ்க்கட்சிகளின் தூதுக்குழு ஒன்று ஏன் பேச்சு நடத்தக் கூடாது?

எல்லோருமாகச் சேர்ந்து இரு மீனவர் சமூகங்களுக்கும் இடையிலான இணைப்பை அறுத்து ஈழத்தமிழர்களை தனிமைப்படுத்த முயலும் சக்திகளுக்கு சேவகம் செய்கிறார்களா? இந்தப் பிரச்சினையை அதன் அனைத்துப் பரிமாணங்களுக்கூடாகவும் அணுகித் தீர்க்கவேண்டும். முதலாவதாக பாதிக்கப்படும் ஈழத்து மீனவர்கள்.

இரண்டாவதாக சிதைக்கப்படும் கடலின் கருவளம். மூன்றாவதாக அறுக்கப்படும் இணைப்பு. அதாவது இது முதலாவதாக ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. இரண்டாவதாக சுற்றுச்சூழல் சார்ந்த ஒரு சட்டப்பிரச்சினை . மூன்றாவதாக ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம் பொறுத்து கனெக்டிவிட்டியை அறுக்கும் பிரச்சினை. இம்மூன்று பரிமாணங்களையும் விளங்கி அதை அதற்குரிய வழிகளினூடாக அணுக வேண்டும். சம்பந்தப்பட்ட இரண்டு அரசுகளுக்கும் நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஈழத்து அரசியல்வாதிகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் உண்டு. அதேபொறுப்பு தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவுச் செயற்பாட்டாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஊடகங்களுக்கும் உண்டு. ■



# பிரச்சினைகளை தீர்க்குமா புதிய அரசியலமைப்பு?

O ந.பரமேஸ்வரன்

புதிய அரசியலமைப்புப் பற்றிய பேச்சுக்கள் மீண்டும் மேலெழுந்துள்ளன. இன்னும் ஒருவருடத்துக்குள் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவோம் என்று இலங்கை ஜனாதிபதியும் சொல்லியிருக்கிறார் . ஆனால் அவ்வாறு புதிதாக உருவாக இருக்கும் அரசியல் யாப்பு, பத்தோடு பதினொன்றாக இல்லாமல், பலமானதாக இருப்பதே இலங்கைக்கு அவசியம். குறிப்பாக, ஜனநாயகத்தையும் சிறுபான்மையினரையும் பாதுகாக்கும் வகையில், இலங்கைக்கு ஒரு புதிய அரசியலமைப்பு தேவையானதே. மேற்கத்தைய இராஜதந்திரிகள் இப்போதும் கூட இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று தான்கூறுகிறார்கள், ஆனால் இலங்கையில் என்ன நடக்கிறது? உண்மையிலேயே இலங்கை ஜனநாயகத்தின் பண்புகளைப் பின்பற்றுகின்றதா? என்று எல்லோருக்குமே கேள்வி எழவே செய்கின்றது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு ஆட்சியாளர்கள் , தங்கள் நலன்களுக்காக அரசியலமைப்பை அவ்வப்போது மாற்றிக்கொண்டே வருகின்றனர் .

## இரண்டில் ஒரு கட்சி

4.2.1948 இல் இலங்கை பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் இரண்டு அரசியலமைப்புகளும், இருபது திருத்தங்களும் ஆட்சியாளர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை யாவும் அவ்வப்போது பதவி வகித்த ஆட்சியாளர்களின் நலன்களுக்காக அல்லது பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் நலன்களுக்காக, பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட் டுள்ளன. இலங்கையில் மொத்த சனத் தொகையில் 74% சிங்களவர்கள், மற்ற 26% தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள். எனவே திருத்தங்களும், யாப்புகளும் சிங்கள இனத்தின் ஆதரவுடனேயே நிறைவேறின என்று சொல்வது பொருத்தமானதே.

இலங்கையின் தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே(2020 க்கு முன்னர் ) மாறி மாறி இதுவரை நாட்டை ஆட்சி செய்து வந்தன; ஒவ்வொரு தேர்தலிலும் இந்தக் கட்சிகளில் ஒன்றை மக்களும் தேர்ந்தெடுத்தார்கள். சில நேரங்களில் மக்கள் பொருளாதாரச் சுமைகள் அல்லது ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் ஜனநாயகவிரோதச் செயல்பாடுகளை எதிர்கொள்ளும் போது, ஆட்சியில் இல்லாத மற்ற கட்சிக்கு முழுமையான ஆதரவை அளித்து 2/3 பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை தேர்ந்தெடுத்தனர். உதாரணமாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியில் நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்கள் அடுத்தமுறை சுதந்திரக் கட்சியை ஆட்சி பீடமேற்றினர். அதேபோன்று சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருக்கையில் , அந்த அரசாங்கத்தின் ஆளுகை மீது வெறுப்புற்றால் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடுத்தமுறை அதிகாரத்தை வழங்குவர். இப்படி இரண்டில் ஒன்று என்ற மட்டுப்பாடான தெரிவே மக்களிடம் இருக்கின்றது.

மக்கள் பிரதிநிதிகள் என்ற் போர்வையில் இவ்வாறு ஜனநாயக வழியில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பதவிக்கு வந்த பின்னர், சர்வாதிகாரமாக நாட்டை ஆட்சி செய்தனர். ஜனநாயக வழியில் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் அல்லது போராட்டங்களைக் கட்டுப்படுத்தவும், சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கும் ஆயுதப்படைகளைப் பயன்படுத்தினர்.

## 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு

முதல் அரசியலமைப்பு 1948 இல் இலங்கையின் கடைசி ஆளுநர் சோல்பரியால் உருவாக்கப்பட்டது. ஆனால் 1972 ஆம் ஆண்டு ஜனநாயகம் என்ற பெயரில் 2/3 பெரும்பான்மையுடன் உலகின் முதல் பெண் பிரதமராக முடிசூடிக் கொண்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, இலங்கைக் குடியரசு அரசியலமைப்பின் மூலம் சோல்பரி அரசியலமைப்பின் 29 ஆவது பிரிவை (ஷரத்தை ) நீக்கினார். இதனால் சோல்பரி அரசியலமைப்பின் 29 வது பிரிவின் மூலம் பாதுகாக்கப்பட்ட சிறுபான்மையினரின் உரிமைகள் இலங்கைக் குடியரசு அரசியலமைப்பின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டது. அத்துடன் சிங்கள மொழிக்கும், புத்தமதத்துக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. 1972 அரசியலமைப்பு நவரங்கஹல மண்டபத்தில் வைத்து நிறைவேற்றப்பட்டது. காரணம் சோல்பரி அரசியலமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்துக்கு 29 வது பிரிவை (ஷரத்தை) திரும்பப் பெறும் உரிமையில்லைஎனவே, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நவரங்கஹல மண்டபத்தில் கூடி குடியரசு அரசியலமைப்பை நிறை வேற்றினர். 1972 அரசியலமைப்பின் 6 வது பிரிவின் பிரகாரம், இலங்கைக் குடியரசு புத்த மதத்துக்கு முதன்மையான இடத்தைக் கொடுக்கும், அதன்படி பிரிவு 18 (1) (d) மூலம் வழங்கப்பட்ட உரிமைகளை அனைத்து மதங்களுக்கும் உறுதி செய்யும் அதே வேளையில் புத்த மதத்தைப் பாதுகாப்பது மற்றும் பேணி வளர்ப்பது அரசின் கடமையாகும் என அத்தியாயம் 111 கூறுகிறது. இலங்கையின் உத்தியோக பூர்வ மொழி சிங்கள மொழியாக இருக்கும் என 1972 இலங்கைக் குடியரசு அரசியல்மைப்பு கூறுகிறது.

## நிறைவேற்றதிகார அரசியலமைப்பு( 1977)

பின்னர் 1977 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தார். 1970-77 ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் மக்கள் அரை இறாத்தல் பாணுக்காக வரிசையில் காத்திருந்தனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் வெறுப்புற்றிருந்த மக்கள் 5/6 பெரும்பான்மையுடன் ஜே.ஆரை ஆட்சிபீடமேற்றினர். ஜே.ஆர் இலங்கையில் அதுவரை அமுலில் இருந்த வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியை நீக்கி, இலங்கையில் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தினார். 1978 அரசியலமைப்பு ஆட்சிக்கு வரும் அனைத்து ஆட்சியாளர்களாலும் இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது. 1978 அரசியலமைப்பு ஜே. ஆர் ஜெயவர்த்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமை உலகின் மிகவும் சக்தி வாய்ந்த அமைப்புகளில் ஒன்றாகும். "இந்த அரசியலமைப்பின் கீழ் ஒரு ஜனாதிபதியால் செய்ய முடியாத ஒரே விடயம், ஒரு ஆணைப் பெண்ணாக மாற்றுவதும், ஒரு பெண்ணை ஆணாக மாற்றுவதும் மட்டுமே" என்று ஜெயவர்த்தன கூறியிருந்தார்.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு அளவுக்கதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அரசியலமைப்புக்குத் தேவையான அனைத்து அதிகாரிகளையும் நியமித்தல், சட்டமா அதிபர் மற்றும் இராணுவம், கடற்படை, விமானப்படை போன்ற முப்படைகளுக்களுக்கான தளபதிகள், பொலிஸ்மா அதிபர் போன்றோரை நியமித்தல்,பிரதம நீதியரசர், மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி மற்றும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் நியமனம் என்பவற்றை மேற்கொள்ளும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. இந்த அரசியலமைப்பும் பௌத்தத்துக்கும், சிங்கள மொழிக்கும் பிரதான இடத்தை வழங்கியது. எனினும் தமிழ் மொழியை அரசகரும மொழியாக 78 ஆம் ஆண்டு யாப்பு ஏற்றுக்கொண்டது.

## திருத்தங்கள்

18 ஆவது திருத்தத்துக்கு முன்னர், அரசியலமைப்பில் இரண்டு முறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு நபரும் மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட தகுதியற்றவர் என்ற வரம்பு 978 அரசியலமைப்பில் இருந்தது (இரண்டு கால வரம்பு). இதனை மகிந்த 18 ஆவது திருத்தத்தின் மூலம் மூன்றாவது தடவையும் ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என மாற்றியமைத்தார்.19 வது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட சுயாதீன நீதிச்சேவை ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் சேவை ஆணைக்குழு போன்றன 20 ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

## தமிழர்களுக்கு எதிரான இரு சட்டங்கள்

தமிழ் பேசும் மக்களைப் பாகுபடுத்தும் வகையில் இலங்கை நாடாளுமன்றத்தில் இதுவரை இரண்டு முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. முதலாவது , பிரபலமாக அறியப்பட்ட தனிச் சிங்களச்சட்டம் . 1956 இல் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க அதிகாரத்தைக் கைப்பற்றும் கருவியாக தனிச்சிங்களச் சட்டத்தை எடுத்துக்கொண்டார். தேர்தல் பிரசாரக் கூட்டங்களில், தான் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்துக்குள் தனிச்சிங்களச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என வாக்குறுதியளித்தார். பௌத்த மதகுருமார்களின் ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் தனிச்சிங்களச்சட்டத்தை நிறைவேற்றினார், தனிச்சிங்களச்சட்டத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்து நாடாளுமன்றத்துக்கு எதிரே உண்ணாவிரதம் இருந்த தமிழ்த் தலைவர்கள் பொலிஸால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். இரண்டாவது, பயங்கரவாதத் தடுப்பு சட்டம். இப்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச மன்னிப்பு சபை போன்ற மனித உரிமை அமைப்புக்கள் இந்தச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்துகின்றன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது மனித உரிமை ஆர்வலர்கள் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்தனர், ஆனால் இந்தச் சட்டம் ஒரே இரவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## மாறிய மனங்கள்

2019 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது தெற்கில் கோத்தா அலை வீசியது . சிங்கள பௌத்த பேரினவாதிகள் மற்றும் மத குருமார்கள் ஆசியுடன் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக 62% வாக்குகளுடன் (வலுவான சிங்கள வாக்குகளால் )ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை அதிகாரத்துக்கு கொண்டு வந்தனர். பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்களை வலுப்படுத்த 20 வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் சர்வதிகாரியாக மாறி கோத்தாபய ஆடும் கோமாளிக்கூத்துகளால்,யாரெல்லாம் கோத்தாபயவை ஜனாதிபதியாக்க துணை நின்றார்களோ அவர்களே இப்போது மனம்மாறி அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனக் கங்கணம் கட்டுகின்றனர். அதற்காக சிறுபான்மையினரிடம் உதவியும் கேட்கின்றனர். இப்படியெல்லாம், இலங்கையின் ஆட்சி குழப்ப நிலையில் தொடர்வதற்கும், பிரச்சினைகள் நீள்வதற்கும் காரணமான அரசியலமைப்பில் உள்ள குறைகள் களையப்பட்டதாக, மக்களாட்சிக்குப் பலம் சேர்ப்பதாக,மக்கள் நலனை முன்னிறுத்தியதாக பலமான ஒரு அரசியல் யாப்பு இலங்கைக்கு கிடைக்குமா?

---

# ஜே.ஆரிடம்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் செய்தியை அன்று வெளியிட்ட ஐலண்ட் ஆங்கிலப் பத்திரிகை 'அதிகாரப் பரவலாக்கத்தை உருவாக்கவுள்ள 13 ஆவது திருத்தம் ஒற்றையாட்சிக்குள் அடங்கும்' என்றும் கூறியிருந்தது. அவ்வாறு வந்த இந்தியக் குழுவில் வெளியுறவு இணைச் செயலாளர் குல்தீப்சகா தேவ், சட்டவல்லுநர் எஸ். பாலகிருஸ்ணன் ஆகியோரும், இலங்கைக் குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் மெனிக்சித்தவெல, பீலிக்ஸ் அபயசிங்க, கலாநிதி டபிள்யூ ஜெயவர்த்தன ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

இந்தக் குழுக்களோடு இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவ சிதம்பரம், உப தலைவர் சம்பந்தன் ஆகியோரும் 13 ஆவது திருத்தச் சட்ட உருவாக்கத்துக்கான ஆலோசனைகளை வழங்கியிருந்தனர் . அத்துடன் சட்டத்தரணி நீலன் திருச்செல்வத்திடம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆலோசனை பெற்றிருந்தது . கூடவே கூட்டணியினர் இந்தியத் தூதுவர் டிக்சிற்றுடனும் கலந்துரையாடினர். ( இதுவும் அப்போதைய உதயன் பத்திரிகையில் செய்தியாக வெளியாகியிருந்தது)

ஆகவே தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு (தற்போது தமிழரசுக் கட்சி) எல்லாமே தெரிந்திருக்கிறது.13 ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கம், ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற விடயங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னரே தெரிந்திருந்தவொரு நிலையிலும், அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி ஏன் இந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு வெளியிடவில்லை? 13 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஏன் மாகாண சபை முறையை எதிர்த்தார்கள்? என்ற சந்தேகங்கள் இயல்பாகவே எழுகின்றன.

எனவே தமிழர் விடுதலைக்கூட்டணி ( தமிழரசுக் கட்சி) அன்றும் இன்றும் இரட்டை நாக்கு அரசியலில் ஈடுபடுகின்றது. அத்துடன் இந்தியா சொல்வதையே கேட்கின்றது என்பதும் இங்கே பகிரங்கமாகிறது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க முடியாதென டிக்சிற் ஜே. ஆர்.ஜயவர்த்தனவிடம் அன்றே வெளிப்படையாகக் கூறியதைக்கூட ஏன் அன்று சம்பந்தன், சிவ சிதம்பரம் ஆகியோர் பகிரங்கமாகச் சுட்டிகாட்டவில்லை? தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயத்தை ஏன் அன்று எடுத்துரைக்கவில்லை? புலிகளின் தலைமையோடு இந்தியா பேசுகிறது என்பதற்காக இவர்கள் அமைதியாக இருந்தார்கள் என்ற கதையும் உண்டு.

ஆனாலும் 13 ஆவது திருத்தச் சட்ட உருவாக்கத்தில் பங்குபற்றியபோது சுயநிர்ணய உரிமை குறித்த நியாயத்தை சம்பந்தன், சிவசிதம்பரம் ஆகியோர் அன்று வெளிப்படுத்தியதாக எங்கும் செய்திகள் இல்லை. ஆகவே பிராவ்டா இதழ் கூறியதுபோன்று இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்புக்காக உருவானதே இந்த ஒப்பந்தம் என்பதும், தமிழரைச் சமாதானப்படுத்தவே 13 என்ற எலும்புத்துண்டு போடப்பட்டது என்ற முடிவுக்கும் நாம் வரலாம்.

ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் எழுந்த இந்தோ- பசுபிக் விவகாரம் மற்றும் மன்னார். திருகோணமலை, மலாபார், இந்தியாவின் நிக்கோபார் கடல் பிரதேசங்கள் ஊடாக தென் சீனக் கடல் வரை பாதை அமைக்கும் சீனாவின் திட்டத்துக்கும் தற்போதைய தென் சீனக் கடல் விவகாரத்துக்கும் காரணம் எது என்பதை இந்திய இராஜதந்திரமும் இந்தியப் படைத்தரப்பும் அறிந்தேயிருக்கின்றன. இருப்பினும் எதுவும் செய்யமுடியாத கையறு நிலையே இப்போது இந்தியாவுக்கு.

# நம்புதலும் அறிந்து கொள்ளுதலும்



ம.மயூரபாலன்


கிராமத்தில் வசிக்கும் மனிதன் ஒருவன் அரசனைக் காணவிரும்பினான். அதிகதூரம் பயணம் செய்து அரண்மனையை வந்தடைந்த அந்த மனிதன் பயணக் களைப்பினால் அரண்மனை வாசலிலே படுத்து தூங்கிவிட்டான். மறுநாள் காலை அவன் எழுந்துபார்த்த பொழுது அரசன் அரண்மனை மாடியில் நிற்பதை கண்டான். அரசனும் அந்த மனிதனைப் பார்த்துவிட்டு உள்ளே சென்றுவிட்டான். அன்றைய நாள் முழுவதும் அரசன் ஏராளமான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. நாள் முடிவில் அன்றைய நாள் நடைபெற்ற விடயங்களைப் பற்றி அரசன் எண்ணிப்பார்த்தான். தனது பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் காரணம் என்ன என விடைகாண முயற்சித்தான். இறுதியாக அரசனுக்கு தான் காலையில் முதன் முதலில் பார்த்த அந்த மனிதனின் முகம் நினைவுக்கு வந்தது. உடனே :அந்த மனிதனைத் தேடிக் கண்டுபிடித்து வாருங்கள்" என்று உத்தரவிட்டான். அந்த மனிதன் அரச சபைக்கு அழைத்து வரப்பட்ட பொழுது "இன்று காலை உனது முகத்தை நான் முதலில் பார்த்தபடியால் எனக்கு பிரச்சினைக்கு மேல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதனால் நான் உனக்கு மரண தண்டனை வழங்குகிறேன்" என அரசன் கூறினான்.

அதற்கு அந்த மனிதன் "அரசனே நீங்கள் எனது முகத்தை முதலில் பார்த்ததால் உங்களுக்கு பிரச்சினைகள் மட்டுமே ஏற்பட்டன. ஆனால் நான் உங்களது முகத்தை முதலில் பார்த்ததால் எனக்கு மரண தண்டனையே கிடைத்திருக்கின்றது" என கூறினான். அப்பொழுது அரசனுக்கு தான் எவ்வாறான ஒரு முட்டாள்தனமான செயலை செய்ய இருந்தேன் என்ற அறிவு பிறந்தது.

இவ்வாறு நாம் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப நமக்கு புகட்டப்பட்ட பலவற்றையும் நாங்கள் நம்புகிறோம். அவை சில வேளைகளில் நமது வாழ்வை ஒரு சிறிய வட்டத்தினுள் அடக்கிவிடுகின்றன. யார் என்ன சொன்னாலும் அவற்றை எந்தவிதமான ஆதாரமும் இன்றி ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கும் பொழுது நமது வாழ்க்கை நமது கட்டுப்பாட்டை விட்டு நழுவிச் செல்ல ஆரம்பிக்கின்றது.

ஒரு பானையின் மேலே "சூடான தண்ணீர்" என எழுதியிருந்தால் அந்தத் தண்ணீர் உண்மையிலே சூடானது என்பதற்கு என்ன அத்தாட்சி? நமது விரலால் தொட்டுப் பார்ப்போம். அதுதான் அனுபவம். தொட்டுப்பார்த்து உணரும் பொழுது தான் அந்தப் பானையில் உள்ள தண்ணீர் சூடானதா இல்லையா என்பது நமக்குத் தெரியவருகின்றது. யாராவது நம்மை முட்டாளாக்குவதற்காக "குளிர் தண்ணீர்" என பானையின் மேலே எழுதியிருந்தாலும் அதனை நாம் நம்பவேண்டிய அவசியம் இல்லை. ஒன்றை நம்புவதற்கு நாம் பெரிதாக ஒன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒன்றை அனுபவரீதியாக கண்டுகொள்வதற்கு எவ்வளவோ முயற்சிக்க வேண்டியிருக்கின்றது.

**ஒன்றை நம்புவதற்கு நாம் பெரிதாக ஒன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒன்றை அனுபவரீதியாக கண்டுகொள்வதற்கு எவ்வளவோ முயற்சிக்க வேண்டியிருக்கின்றது.**



ஒரு சிறிய உதாரணத்தை பார்ப்போம். இரவு நேரம் உங்களது வீட்டின் வாசலிலே யாரோ ஒருவர் நடமாடுவது போல தெரிகின்றது. நீங்களும் அவன் திருடனாக இருக்கலாம் என நம்புகிறீர்கள். ஆனால் உண்மை என்ன என்பது உங்களுக்குத் தெரியாது. பயத்தின் நிமித்தம் நீங்கள் அதனை உறுதி செய்யாமல் படுக்கைக்குச் செல்கிறீர்கள். இரவு முழுவதும் நித்திரை கொள்ளாது யோசித்தபடியே கழிகிறது. இரவு நித்திரை இல்லாததால் பகல் முழுவதும் ஒரே சலிப்பு. இந்த நிலைமையை எவ்வாறு தவிர்த்திருக்கலாம்? அன்று இரவே கதவைத் திறந்து பார்த்திருந்தால் உண்மை எதுவென தெரியவந்திருக்கும். சிலவேளைகளில் அது தெருவிளக்கின் முன்னால் ஆடிய மரக்கிளையின் விம்பமாகக்கூட இருந்திருக்கும். நாமும் நிம்மதியாகத் தூங்கியிருக்கலாம். சில மக்கள் "இது நீ போன பிறவியில் செய்ததன் பலன்" என போன பிறவி பற்றி பேசுவார்கள். ஆனால் நாங்கள் இப்பொழுது உயிர்வாழ்கிறோம். என்ன நடைபெறுகின்றதோ அது இந்தப் பிறவியில் நடைபெறுகின்றது. ஆனால் நமது கவனத்தை போன பிறவியின் மேலும் அடுத்த பிறவியின் மேலும் செலுத்துகிறோம். அது எவ்வாறெனில் நாங்கள் ஒரு புகையிரதத்தினுள்ளே இருக்கிறோம். இதன் முன்னர் சென்ற புகையிரதம் எங்கே சென்றது எனவோ அல்லது அடுத்த புகையிரதம் எங்கே செல்லும் என்றோ எண்ணுவோமா? இல்லை. நாங்கள் இருக்கும் புகையிரதம் எங்கே செல்கிறது எனத் தான் பார்ப்போம். இந்த வாழ்க்கை எனும் புகையிரதம் எங்கே செல்கிறது? "மலரின் உள்ளே நறுமணம் உள்ளது போல கஸ்தூரி மானின் வயிற்றிலே கஸ்தூரி மணம் உள்ளது போல உங்களது கடவுள் உங்களின் உள்ளே உள்ளார்" என ஞானிகளும் மகான்களும் கூறியுள்ளார்கள். அதனை நாம் நம்புவதனாலே எதுவும் நடைபெறப் போவதில்லை. அதனை நாம் அனுபவத்திலும் உணர்ந்து கொள்ள வேண்டும். ■

# ஊர்ப்புதினம் 11



இராகவன்

குமரப்பா, புலேந்திரன் ஆக்கள் ஐயாப்பா வீட்டில் முகாமிட்டிருந்த காலத்தில் அவையள் அங்கையிருக்கினமெண்டு ஆரோ வெறுவாய்க்கெட்டதுகள் ஆமிக்கு 'ரிப்' குடுத்தாப்போல , அவங்கள் ஊருக்குள்ள வந்திட்டாங்கள். அப்ப நான் நேசறிக்குப் போட்டன். அம்மாதான் நடந்ததெல்லாம் சொன்னவா.

ஆமி வந்திட்டுது எண்டாப் போல ஊராக்களெல்லாம் அஞ்சுங்கெட்டு அறிவுங்கெட்டு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் வீடுகளுக்குள்ள பதுங்கியிருக்க ,இயக்கப் பொடியள் ஐயாப்பா வீட்டுக்குள்ளால வெளிக்கிட்டு வந்து துவக்குகளை நீட்டிக் கொண்டு ஒழுங்கைக்குள்ளையும் மெயின் றோட்டிலையும் பதுங்கிக் கொண்டு நிண்டிருக்கிறாங்கள்.

ஊராக்கள் சிலர் அவங்களிட்டப் போய் "தம்பியவை நீங்கள் உதிலை உப்பிடி நிக்கேக்குள்ள ஆமிக்காரன் வந்தால் எங்கள் முழுப்பேரையும் சுட்டுத்தள்ளிப் போட்டுத்தான் போவான். இது சண்டை பிடிக்கிறதுக்கான இடமுமில்லை. தயவு செய்து எங்களுக்காக நீங்கள் இந்த இடத்தைவிட்டு விலகிப் போங்கோ. நாங்கள் உங்கட காலில விழுந்து கும்பிட்டுக் கேக்கிறம்" எண்டு மண்டாடியிருக்கினம்.

அதுக்கு இயக்கப் பொடியள் மசியேல்ல. "நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடத்தேவையில்லை. நாங்கள் உங்களுக்காகத்தான் இதிலை வந்து நிக்கிறம். ஆமிவந்தால் ஒரு குடுவை குடுத்துக் கலைச்சுப் போட்டுத்தான் இந்த இடத்தால போவம்" எண்டு சொல்லியிருக்கிறாங்கள்.

அதுக்குப் பிறகு அவங்களோட் என்னத்தைக் கதைக்கிறது? ஊராக்கள் பாத்தினம், 'இனிச்சரிவராது. எங்கயாவது உருவிக்குடுப்பம்' எண்டு இளந்தாரியள், குமர்ப்பிள்ளையள், குழந்தைப் பொடியள் எண்டு வெளிக்கிட்டு அத்துளு அம்மன் கோவிலடிப் பக்கம் போட்டினம். கிழடு, கட்டையள்தான் ஊருக்கை நிண்டது. அம்மாவும் வாறது வரட்டுக்கும் எண்டுட்டு வீட்டில நிண்டிட்டா. கொஞ்ச நேரத்தால இயக்கப்பொடியள் எங்கட வளவுக்குள்ளால வந்து பின்பக்கப் பனங்காணிக்குள்ளால விழுந்து போட்டாங்கள். அவங்கள் போன கையோட ஆமிக்காரர் ஊருக்குள்ள வந்திட்டாங்களாம்.

"நல்லகாலம் என்ர கனகராவளவான் காத்தது (எங்கட வீட்டுக்குப் பக்கத்தில ஒரு பிள்ளையார் கோயில் இருக்கு. அதைக் கனகராவளவுப் பிள்ளையார் கோயில் எண்டு ஊராக்கள் சொல்லுவினம்) " எண்டு அம்மா பிள்ளையார் கோயில் பக்கம் திரும்பிக் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டே சொல்லிக் கொண்டிருந்தா. அப்பதான் நான் நேசறியால வீட்டை வந்தனான். ஒழுங்கையளுக்குள்ளையும் வீட்டுக்கேற்றடியளிலயும் ஊராக்கள் கூடி நிண்டு கதைச்சுக் கொண்டிருந்ததைப் பாத்துக் கொண்டு வரேக்குள்ளயே எனக்கு ஏதோ சிக்கல் எண்டு விளங்கிட்டுது. பிறகு வீட்டை வந்து அம்மா சொன்னதைக் கேட்டாப் போலதான் எல்லாம் கிளியராச்சுது.



எண்டாலும் எனக்கு அந்தநேரம் நான் வீட்டிலை நிக்கேலாமப் போச்சே எண்டு சரியான கவலையாயிருந்திச்சுது. ஏனெண்டால் நான் ஒருநாளும் இயக்கப்பொடியள் துவக்குகளோட நிண்டதையும் காணேல்ல. ஆமிக்காரரையும் நேரில பாக்கேல்ல. வீட்டிலை நிண்டிருந்தால் ரண்டையும் பாத்திருக்கலாமெல்லோ? அதுதான் சரியான கவலையாயிருந்தது. இது நடந்தாப்போலயும் ஐயாப்பா வீட்டில இயக்கப் பொடியள் வந்திருக்கிறது நிக்கேல்ல. ஒவ்வொரு காலப்பகுதியில ஒவ்வொரு இயக்கம் வந்திருக்கும். இளையண்ணா ஒரு ஊர் சுற்றி எண்டதால அவன்தான் ஒவ்வொருக்காலும் புதுபுதிசாத் தகவல் கொண்டுவருவான்.

ஒருக்கால் வந்து "இப்ப ஐயாப்பா வீட்டில ரெலோ வந்திருக்குது" எண்டு சொல்லுவான். பிறகு கொஞ்சநாள் செல்ல "இண்டைக்கு ஐயாப்பா வீட்டை புளொட் வந்திருக்குது" எண்டு வந்து சொல்லுவான்.

பேந்து இன்னொருக்காள் வந்து "நேற்று ஐயாப்பா வீட்டை ஈ.பி.ஆர்.எல்.எவ் வந்திட்டுது" எண்டு சொல்லுவான். இதைக்கேட்டுட்டு " உந்தப் புதினம் பாக்கிற வேலையள் விட்டுப் போட்டு ஒழுங்காய்ப் படிக்கிற அலுவலைப் பார்" எண்டு அம்மா அவனுக்குச் சொல்லுவா.

(தொடரும்)

# பிணங்களின் ரயில் 13

## விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை

